பொன்னி

470

PONNI · 25-7-52 · 4 அணா

470
3.52

192813

பாசத்தின் எல்லையில் இருவர்!

—ஜெனேவாவில் ஆர். பாலசுப்பிரமணியம்,
பி. எஸ். சரோஜா



குடும்ப முக்கோணம்!

—ஜமீந்தாரில் எஸ். ஏ. நடராஜனும்
எம். வி. ராஜம்மாவும்

தலைப்பு விளக்கம்

'மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா' என்பது கவிமணி வாக்கு. கடமை புரிவதில் பெண்குலம் முன்னிற்பது தான் இப்பெருமைக்குக் காரணம். நல்லவர்களால் உலகம் இயங்குகிறது என்று சொல்கிறோம். மெல்லியலாரை அத்தகைய நல்லவர்கள் என்று குறிப்பிட்டாலும் தகும். புகைப்படம் காட்டும் மாதரசி தன் கடமையில் எத்தனை கருத்துடையவராக விளங்குகிறார்! சுமப்பது சருகுதான்; தங்கமல்ல. எனினும் கருமமே பெரிதென்றெண்ணி நடையில் விரைவு காண்பதில்தான் கடமையுணர்வு பொலிவடைகிறது! பெண்ணுக்கு உலகம் பல கோணங்களில் மதிப்புத் தருகிறது. ஆனால் குடும்பம் பேணும் மங்கைமாரின் தியாக உணர்வுக்குத் தரும் மரியாதையே உயர்ந்து நிற்பது; அத்தியாகத்திற்கு ஈடு காண்பதரிது! உங்கள் தலைப்புகளை **3-8-52**-க்குள் அனுப்புங்கள். சிறந்த தலைப்புக்கு **ஐந்து ரூபாய் பரிசு** காத்திருக்கிறது.

இதுதான் கடைசி நிழற்படம். அடுத்த இதழ் முதல் 'ரெஸாக்' வரையும் வண்ணப்படங்கள் 'பொன்னி' மேலட்டையில் இடம் பெறுகின்றன. ஆனால் தலைப்புப் போட்டி சில மாற்றங்களுடன் தொடர்ந்து நடைபெறும். விவரங்களை அடுத்த இதழில் காணலாம்.

சென்ற இதழில் வெளியான முகமூடி நல்ல நல்ல தலைப்புகளைச் சூடிக் கொண்டிருக்கிறது. கலையுணர்வும் தமிழறிவும் இணைந்தால் அருமையான தலைப்பு உருவாவதில் வியப்பென்ன இருக்கமுடியும்! பரிசு முடிவு விவரங்கள் வேறொரு பக்கத்தில் வெளியாகியிருக்கின்றன.

புகைப்படம் :
பி. ரெங்கநாதன்

பொன்னி

பொருளடக்கம்

மலர் 6	ஜூலை 25, 1952	இதழ் 11

திருவள்ளுவர் ஆண்டு 1983
ஆடித் திங்கள் 10-ம் நாள்

தலைப்பு விளக்கம் ...	1
மதுவிலக்கு ...	3
தம்பி (சிறுவர் தொடர்கதை) ...	8
ஆஸ்கார் ஒயில்டு ...	12
அந்தச் சிரிப்பு! ...	17
பெண்கள் முன்னேற்றம் ...	26
பழி ...	30
பேசும் சித்திரம் ...	35
முகில் ...	42
பெண்ணாகி வந்ததொரு....! ...	44
நெஞ்சின் சதி ...	45
ஆடும் மாடும் (தொடர்கதை) ...	50
பொழுது போக்கு ...	57
உள்ளமும் உருவமும் ...	59
சிந்தனைக்கு ...!	63

★

பொன்னி சந்தா விவரம்: உள்நாடு இலங்கை ஆண்டு ஒன்றுக்கு ரூ. 6—0—0; ஆறுமாதம் ரூ. 3—0—0. வெளிநாடு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 6-12-0; ஆறுமாதம் ரூ. 3–6–0. இலங்கைக்கு வி.பி.பி. உண்டு.

விருந்து வரிசையில்

12 உலக இலக்கியங்கள் 12

1. இந்துலேகா ... மலையாள நாவல்
2. மாமனார் வீடு ... ஆங்கில நாடகம்
3. துன்பக்கேணி ... ஜப்பானியக் கதை
4. நூர்ஜஹான் ... வங்காளி நாடகம்
5. கைக்கடிகாரம் ... ரஷ்யக் கதைகள்
6. முத்துமாலை ... சீனக்கதைகளும் நாடகமும்
7. தாயகத்தின் அழைப்பு ... ஆங்கில நாவல்
8. அறக்கோட்டம் ... இந்தி நாவல்
9. மாலதி – மாதவன் ... சமஸ்கிருத நாடகம்
10. கடல்மறவர் ... பிரஞ்சு நாவல்
11. கல்மனிதன் ... ஸ்வீடிஷ் கதைகள்
12. ஆண்டிமடம் ... ஆங்கில இசை நாடகம்

மேற்குறித்த 12 புத்தகங்களும் ரூ 6/– அனுப்பினால் தபாற் செலவின்றி அனுப்பப்படும். தனித்தனியே பெறுவதற்கு பிரதி 8 அணா.—தபாற் செலவு 1 அணா.

பொன்னி லிமிடெட்

த. பெ. எண். 1165 :: சென்னை — 21

மதுவிலக்கு

குடியை ஒழிப்பதென்பது நல்ல திட்டம்; அதை யாரும் வரவேற்பது இயற்கை. கள்ளுண்டல் பஞ்சமாபாதகங்களில் ஒன்றாக வைத்துப் பேசப்படுகிறது, பழைய நூல்களில். உலகிற்கு நல்வழிகாட்டிய பெரியவர்கள், குடிப்பழக்கம் தீமை பயக்குமென்பதை எப்போதும் வலியுறுத்தியே வந்திருக்கின்றனர். குடிப்பழக்கம் மனிதத்தன்மையை அழித்து மிருக நிலைக்கு மனிதனை விரட்டுகிறதென்பதும், சமுதாயச் சூழலில் பல பெரும் குற்றங்களுக்கு அது காரணமாக இருக்கிறதென்பதும் மறுக்கமுடியாத உண்மைகள். மதுவிலக்கு தேவை என்பதில் இரு வேறுபட்ட கருத்துக்கள் நிலவமுடியாது.

ஆனால் சென்னை மாகாணத்தில் சட்டமாக அமுல் நடத்தப்படும் மதுவிலக்குக் கொள்கை இன்று பலமான விவாதத்திற்குரிய பிரச்னை ஆகிவிட்டது. சட்டசபையில், மதுவிலக்குக் கொள்கையை நீடிப்பதா, வேண்டாமா என்று ஆராயக் கமிட்டி ஒன்று நியமிக்க வேண்டுமென்ற எதிர்க்கட்சிக் கோரிக்கைக்கு 147 பேர் ஆதரவளித்திருக்கின்றனர்; சர்க்கார் கோரிக்கையை ஆதரித்து 170 பேர் வாக்களித்திருக்கின்றனர். எதிர்க்கட்சிக் கோரிக்கையை விவாதத்தின்போது ஆதரித்த கிருஷிக்-லோக் கட்சியினர் வாக்கெடுப்பில் நடுநிலைமை தாங்கியிருக்கின்றனர். சட்டசபைக்கு வராதவர்களில் இருதரப்பினரும் இருக்கக்கூடும். எனினும் மதுவிலக்குக் கொள்கைக்கு மறுபரிசீலனை அவசியம் என்பதைத் தெரிந்துகொள்ளச் சர்க்கார் கோரிக்கை 23 ஓட்டு வித்தியாசத்தில் நிறைவேறியிருப்பதே போதுமானதாகும். எனினும் சர்க்காருக்குத் தங்கள் போக்கை மாற்றிக்கொள்ளும் எண்ணம் சிறிதும் இருப்பதாகத் தெரியவில்லை — முதலமைச்சர் ராஜகோபாலாச்சாரியார் பேச்சு இதைத்தான் வலியுறுத்துகிறது. அவருடைய பேச்சு

முதலமைச்சர் என்ற நிலையில் இல்லாமல் மகான்கள், தவ, சிரேஷ்டர்கள் உபதேசம் செய்வது போல் அமைந்திருப்பதே மதுவிலக்குத் தோல்விக்குப் போதுமான சான்றாகும். நேரடியாகக் காணும் உண்மை அனுபவங்களை ஏற்க விரும்பாமல் லட்சியவாதம் பேசுவது கனம் ராஜகோபாலாச்சாரியார் போன்ற முதிர்ந்த அரசியல் வாதிகளுக்கு அழகல்ல.

மதுவிலக்கு நல்ல லட்சியம் என்பதில் யாரும் மாறுபடப் போவதில்லை. ஆனால் எந்த நல்ல லட்சியமும் நடைமுறையில் எந்த அளவுக்குக் காரியமாக மாறும் என்ற கணிப்பு இல்லாவிட்டால் லட்சியவாதம் பயன்படாது. ஆர்வத்தில் காங்கிரஸ்காரர்கள் மதுவிலக்குக்குச் சம்மதித்தார்கள் என்று முதலமைச்சர் கூறுகிறார்; அவர்கள் இச் சீர்திருத்தம் முழு அளவில் வெற்றியடையும் என்று ஆர்வம் காரணமாகவே எதிர்பார்த்தார்களென்றும் அவர் கூறுகிறார். அப்படி எதிர்பார்த்ததில்தான் ஏமாற்றம் என்றும், தான் அப்படி எதிர்பார்க்கவில்லை என்றும் தனக்குத் திருப்தியளிக்கும் விதத்தில் மதுவிலக்கு வெற்றியடைந்து வருவதாகவும் அவர் 'பிரச்னை'யை மிக வேடிக்கையான சித்திரமாக்குகிறார். ஆர்வங்காரணமாகக் காங்கிரஸ்காரர்கள் குடியை ஒழிப்பதற்குக் கைதூக்கினர் என்பது உண்மையானால், இன்று அந்த ஆர்வம் மிகப்படியான நன்மையை எதிர்பார்த்து ஏமாற்றமடைந்தது என்று சுட்டிக்காட்டப்படுவதும் பொருத்தமானால், ஏன் மதுவிலக்குப் பிரச்னையை மறுபரிசீலனை செய்யக்கூடாது? சீர்திருத்தத் திட்டங்கள், லட்சியங்கள் அமுலுக்கு வர வேண்டுமென்பதில் காட்டுகின்ற ஆர்வம் பொதுமக்களின் வரிப் பணத்தைச் சூறையாடுகின்ற திட்டமாக இருக்கக் கூடாது. குடியொழிப்பில் பூரண நம்பிக்கையுள்ளவர்கள் தங்கள் சொந்த முயற்சியாக அதை மேற்கொள்வதில் தடையேதுமில்லை. ஆனால் அரைகுறையாய்த்தான் நிறைவேறும் என்று தெரிந்தும், சட்டம் இருக்குமே ஒழிய மதுவிலக்கு நடைமுறையில் வராது என்பது நன்கு புரிந்திருந்தும், குடியினால் அரசாங்கத்திற்கு வந்த வரிப்பணம் நஷ்டமாகுமேயொழியக் குடிப்பவர்கள் கள்ளத்தனமாகக் குடித்துக் கொண்டுதான் இருப்பார்கள் என்பது நன்கு விளக்கமாகியும் 'குடிப்பது பாவம்' என்ற லட்சியம் காப்பாற்றப்படவேண்டுமென்னும் ஒரே காரணத்திற்காக மதுவிலக்கை அமுல் நடத்துவது 'மிகப் பெரிய பாவம்' என்று சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

ஆண்டுக்கு ஆண்டு மதுவிலக்கை மீறிய குற்றங்கள் அதிகரித்துக்கொண்டே வந்திருக்கின்றன; அதாவது சட்டத்தை மீறிக் குடிப்பவர்கள் தொகை அதிகரித்துக் கொண்டே வந்

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
197813

திருக்கிறது என்பதுதான் பொருள். சர்க்காரின் கவனத்திற்கு வராமல் நடைபெறும் 'கள்ளத்தனம்' இக்கணக்கில் சேர்க்கப்படவில்லை. எங்கு பார்த்தாலும் குடிசைத் தொழிலாகக் கள்ளச்சாராயம் காய்ச்சுதல் பரவி

ОООООООООООООООООООО

அடுத்த இதழில்

எஸ். ஆறுமுகம் எழுதும் சுவைமிக்க தொடர்கதை **ஒற்றை ரோஜா** தொடங்குகிறது.. ரெஸாக்கின் **வண்ண அட்டை** இனி ஒவ்வொரு இதழையும் அழகுபடுத்தும். ஒவ்வொரு அட்டையும் உங்களுக்குப் **பத்து ரூபாய் பரிசு** வழங்கப்போகிறது. **கவிஞர் வாணிதாசன்** தம் எழில் கவிதையை இனி ஒவ்வொரு இதழிலும் வழங்குவார். மற்றும்........

ОООООООООООООООООООО

வருகிறதென்பதை அரசினர் மறுக்க முடியாது. மதுவிலக்குக்கு அமுலுக்கு வருமுன் குடித்தவர்கள் தொகை நூற்றுக்குப் பதினறுபேர் என்று கணக்கிடப் பட்டிருக்கிறது. அவர்களில் எத்தனை பேர் மதுவிலக்கு அமுலுக்கு வந்தபின் குடிப்பழக்கத்தை நிறுத்தியிருக்கிறார்கள் என்று கண்டறிந்தாலொழிய மதுவிலக்குக் கொள்கையின் வெற்றியைக் கணக்கிட முடியாது. கள்ளத்தனமாகக் குடிப்பவர்கள் தொகை தற்சமயம் நூற்றுக்கு எத்தனை பேர் என்று கண்டறிவது சர்க்காருக்குச் சிரமமான காரியமல்ல. அதைத் தெரிந்து கொள்ளாமல் 'நாற்பதுபேர் குடிக்கவில்லையா அதுவரைக்கும் நன்மை'—என்று வேதாந்தம் பேசுவது முதலமைச்சரைப் போன்ற காரியவாதிகளுக்கு அழகல்ல. மத்தியப் பிரதேசத்தில் மதுவிலக்கைப் பரிசீலனை செய்ய நியமித்த கமிட்டி அது தோல்வி என்று முடிவுகட்டியிருக்கிறது. அதுபோன்ற பரிசீலனையை மேற்கொள்ளாமல் கனவுலகத்தில் சஞ்சரிக்கவே காங்கிரஸ் ஆட்சி விரும்புகிறது போலும்!

பல குற்றங்களுக்குக் குடிப் பழக்கம் காரணம் என்பது உண்மை. ஆனால் குடியை ஒழித்தபிறகும் ராஜ்யத்தில் ஆண்டுக்கு ஆண்டு குற்றங்கள் பெருகுவது உண்மையானால் அதற்கு என்ன காரணம் இருக்க முடியும்? மதுவிலக்கு வந்த பிறகு பொதுக் குற்றங்கள் குறையவில்லை; கூடுகின்றன. அதேசமயத்தில், மதுவிலக்கை மீறிய குற்றங்கள் என்ற தனி ஜாபிதாவும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்துவருகிறது. உணவுப் பொருள் கட்டுப்பாடுகளை ஒழித்து அக் கட்டுப்பாடுகளால் நாட்டில் பெருகிப்போன ஊழல்

களை அழித்துக் 'கீர்த்தி'தேடிக் கொண்டாரே நம் முதலமைச்சர், மதுவிலக்கு அமுலில் நடமாடும் ஊழல்கள் மட்டும் அவர் கண்ணுக்குப் புலப்படவில்லையா? மதுவிலக்குப் போதும் என்று கூறும் அளவுக்கு ஊழல் பெருகிவிட்டதை உணர அவர் மறுப்பதேன்? குடியொழிப்பு என்ற லட்சியம் அவர் கண்களை மறைக்கிறதென்பதைத் தவிர நாம் வேறு காரணங்களைக் காண முடியவில்லை.

காங்கிரஸ்காரர்களும் கனம் ராஜகோபாலாச்சாரியாரும் மதுவிலக்கில் நம்பிக்கையுள்ளவர்களானால் அவர்கள் மேற்கொள்ள வேண்டிய திட்டமே வேறு. அரசாங்கப் பணத்தைச் செலவிடுவதல்ல அதற்கு வழி. குடிப் பழக்கத்திற்கு எதிராகப் பெரிய இயக்கமே அவர்கள் நடத்தலாம்; முன்னர் நடத்தியதுபோல் மறியல்களைப் பெரும் அளவில் மேற்கொள்ளலாம்; குடிப்பது தீது என்று தக்க மேற்கோள்களோடு சினிமா மூலம், நாடகம் மூலம் சண்டமாருதப் பிரசாரம் லாம். இவை நல்ல வழிகள்; பயனும் கிடைக்கும். இதை விடுத்துச் சட்டமாக்கி, சட்டத்தை அமுல்நடத்த வகையற்று நிற்பது மக்களுக்குச் செய்யும் நன்மையாகாது.

பல தீய பழக்கங்கள் சமூகத்தில் வேர்விட்டிருக்கின்றன. இவற்றைக் குறைப்பதும் ஒழிப்பதும் அவசியமே. ஆனால் பொய் பேசுவதை ஒழிக்க முற்பட்டவர் கதையாக இந்த மதுவிலக்குச் சீர்திருத்தம் வளர்ந்து வந்திருக்கிறது என்பதே நம்முடைய கருத்தாகும். பொய் பேசுவதைஒழிக்கவேண்டுமென்பதை யாரும் ஒப்புவர். ஆனால் அதற்காகச் சட்டம் போட்டுச் சர்க்கார் பணத்தைச் செலவிடுவதை, யார் ஏற்றுக்கொள்ள முடியும்? அதுபோலத்தான் ஏறக்குறையக் குடியொழிப்பும். குடியொழிப்பை விரும்புகிறவர்கள் நம் நாட்டில் அதிகம். எனினும் அத் தீய பழக்கம் அடியோடு ஒழிய இரண்டு மூன்று தலைமுறையாகும் என்று கனம் ஆச்சாரியாரே கூறுகிறார். அப்படி மெதுவாக நடத்தவேண்

புதுமைப்பித்தன்
சிறுகதைப் போட்டி

★★★

மூன்று பரிசுகள்
பரிசு ரூ. 250

★★★

முடிவு தேதி 30-9-52

டிய சீர்திருத்தத்தை வேகமாக அமுல்நடத்திவிட்டு 'இனிப் பின்வாங்குவது வீரனுக்கு அழகல்ல' என்று கூறினால் அரசாங்கத்தின் பரிதாப நிலையை எண்ணிச் சிரிப்பதைத் தவிர வேறு ஒன்றும் செய்வதற்கில்லை. 'சென்னை ராஜ்யம் முழுவதும் மதுவிலக்கு அமுலில் இருக்கிறது. ஆனால் பல லட்சம் பேர் கள்ளத்தனமாகக் குடித்து வருகின்றனர்.' இந்த நிலை நல்லதா? 'குடிப்பழக்கம் படிப்படியாக ஒழிக்கப்படுகிறது!—எதிர் பார்த்த வெற்றி கிடைத்து வருகிறது!'—இத் திட்டம் நல்லதா?

சென்னை அரசினர் மதுவிலக்குக் கொள்கையை மறுபரிசீலனை செய்யவேண்டியது மிக அவசியம். மதுவிலக்கு அமுல் செய்யும் இடத்தில் வேறு காரியமான திட்டங்களை அமுல் செய்யலாமா என்று பார்க்க வேண்டும். இதில் தனிப்பட்டவர் பெயர், புகழ், காங்கிரசின் கொள்கை, லட்சியம், நீதிநூல்கள், மகான்கள், உபதேசம் இவற்றுக்கே இடமில்லை. நடைமுறையில் 'அமுலுக்கு வரும் விதத்தில் புதுத் திட்டம், மதுவிலக்குக்குப் பதில் மேற்கொள்ளப் படவேண்டுமென்பதே நம் எண்ணம். தோல்வியை ஒப்புக்கொள்ளத் தைரியம் வேண்டும். அத் தைரியம் சென்னை முதமைச்சருக்கு எப்போதும் உண்டு. மதுவிலக்குக் கொள்கையில் இத்தைரியம் அவருக்கு வரவேண்டுமெனச் சென்னை ராஜ்ய மக்கள் விரும்புகிறார்கள்.

பரிசு பெற்ற தலைப்பு

10–7–52 தலைப்புப் போட்டியில் பரிசு பெற்ற தலைப்பு:

உருவம் தந்தான்; உயிர் கொடுப்பானோ?

பரிசு பெற்றவர்:

வ. சஞ்சீவி, சென்னை–1

பாராட்டுக்குரியவை:

சிற்பிகளின் கலையரங்கம்; கூத்தாடியின் பணச்சுரங்கம்
திரு. கேசவன், ஆரணி

ஆடும் சிலைக்கு அழகூட்டும் கைகள்
இரா. இராமராசன், சென்னை—7

விழி மறைத்தாயே, எழில் மறைத்தாயோ?
து. இராயப்பன், சின்னமனூர்

அழியும் கையின் அழியாப் படைப்பு
பண். வெ. இராசவேல், பண்ணுருட்டி

தம்பி

தங்கமணி

இரண்டாம் அத்தியாயம்

"இப்போது எங்கிருந்து வந்தது பேஞ? அடியும், உதையும், ஏசலும் வாங்காத முன்னேயே ஏன் கொடுத்திருக்கக் கூடாது?" அவன் தந்தை பேஞவை வாங்கிக் கொண்டு, சத்தியமுத்துவை நோக்கி ஆத்திரத்துடன் கேட்டார்.

சத்தியமுத்துவுக்குத் தன் அப்பாவின்மீது ஆத்திரம் பொத்துக்கொண்டு வந்தது; அழுகை குமுறிக்கொண்டு வந்தது. அவன் தன் அப்பாவை வெறித்து நோக்கினுன்.

"நான் அறியாமல் செய்து விட்ட குற்றத்திற்காக என்னை அடித்து வதைத்தீர்களே! நீங்களும் ஒரு அப்பாவா?....... இனி உங்கள் முகத்திலேயே விழிக்கமாட்டேன்! இனி நான் வேறு, நீங்கள் வேறு. என்னை மறந்து விடுங்கள்! எனக்குப் பிழைத்துக் கொள்ளத் தெரியும். பத்தாவது படிக்கும் பத்தொன்பது வயசுப் பையனுக்கு வாழத்தாஞ தெரியாது? நான் போகிறேன்!"

வெளியே பாய்ந்தோடினுன் சத்தியமுத்து.

"டேய், டேய்!" என்று கத்திக்கொண்டேதாவியோடும் சத்தியமுத்துவைத் தாவிப் பாய்ந்து பிடித்தார் அப்பா. "விடுங்கள்!" என்று அப்பாவின் கையை உதறிவிட்டு ஓடியே போனுன் சத்தியமுத்து. "அண்ணு!"...என்று வீறிட்டுக் கொண்டு சத்தியமுத்துவை நோக்கித் தாவினுன் கருணமூர்த்தி. அப்பா அவனைச் சட்டென்று பிடித்து நிறுத்திக் கொண்டார். இருவரும் நெஞ்சு படபடக்கப்

சிறுவர் தொடர்கதை

பார்வைகளை வெளியே வீசினார்கள்.

வெளியே பேரிடி! தீ மின்னல்! சுழல் காற்று! கடும் மழை! காரிருள்! எல்லா வற்றையும்—அத்துடன், தந்தை, தம்பி, தங்கமான நண்பர்கள் எல்லோரையும் லட்சியம்பண்ணமல் தன்பாட்டுக்குப் புயலாய்ப் பாய்ந்தோடி மறைந்து கொண்டிருந்தான் சத்தியமுத்து. அப்பாவும், தம்பியும் அவனைப் பார்த்தார்கள். அவர்கள் கண்களில் கண்ணீர்த் தேக்கம். உள்ளம் துக்கத்தால் விம்மியது. அப்பா, கண்களைத் துடைத்துக்கொண்டார். சத்தியமுத்து ஓடி மறைந்த திசையைப் பார்த்தார். தன்னையும் அறியாமல் நெஞ்சு விம்மிப் புடைத்து அவர் முணு முணுத்தார். அந்த முணுமுணுப்பிலே ஓர் வாக்கியம்:

"ஐயோ!...பொய்யும், புனைசுருட்டும், பொல்லாங்கும் உறவாடும் இந்த அன்பு கெட்ட உலகத்தில், இந்தப் பயல்—சத்தியமானவன்—தன்மானமுள்ளவன்—ரோஷமுள்ளவன் எப்படித்தான் வாழ்ந்துவிடப் போகிறுனே?"

* * *

ஆறு லட்சத்து நாலாயிரத்து எண்ணூறு விநாடிகள் கரைந்துருகி மறைந்தன. அதாவது, கணக்காக ஒரு வாரம்—ஏழே ஏழு நாட்கள் பம்மிப் போயிற்று!

அந்த ஒரு வாரத்திற்கு மறு நாள். அன்று புதன்கிழமை. மாலை ஆறு மணி. வீட்டில் படு சூன்யமான அமைதி.

வெளியே—பழையபடி, இயற்கையின் கோரக் கோஷந்தான்! இடி! மின்னல்! மழை! காற்று அம்மம்மா!...ஒரே பயங்கரம்!

இருண்டு கிடந்தது.

வீட்டின் ஒரு மூலையில் போட்டிருந்த கயிற்றுக்கட்டிலில் அசையாமல் உட்கார்ந்திருந்தார் அப்பா. அவர் மனமும் இருண்டு கிடந்தது.

அப்பாவின் மடியில் சுருண்டு படுத்துக் கிடந்த கருணாமூர்த்தி, "அண்ணா! அண்ணா!" என்று முக்கி முனகிக் கொண்டிருந்தான்.

அவன் மனமும் இருண்டு கிடந்தது

அவனுக்குக் கடந்த ஒரு வாரமாக—தன் உயிர்ச் சகோதரன் சத்தியமுத்துவைப் பறிகொடுத்த அன்றிலிருந்து காய்ச்சல்; கடுங்காய்ச்சல்!

அப்பா மெல்ல உடலை நெளித்தார்.

கருணாமூர்த்தி வெளிறிய விழிகளை மேலுயர்த்தி அப்பாவைப் பார்த்தான். அவர் கண்கள் உள்ளுக்குள் செருகிக் கிடந்தன. புருவங்கள் முன்னுக்கு முட்டிக்கொண்டிருந்தன. விழி மணிகள் பிரகாசமற்று மங்கிக் கிடந்தன.

"அப்பா!"

அப்பா சட்டென்று குனிந்தார். தன் மடியில் சுருண்டு கிடக்கும் கருணாமூர்த்தியைப் பார்த்தார். அவன் வாடி, வதங்கி, எலும்பும் தோலுமாய்க் கிடக்கும் அவல நிலையைக் கண்டதும், அவர் உள்ளம் விண்டு விரிந்து நெக்குவிட்டு உருகியது.

அழுகை பொத்துக்கொண்டு வந்தது.

அவர் அழுதார்.

அவர் கண்களிலிருந்து சுடச்சுட உருண்டு புரண்டு, தன் கன்னத்தின் மீது விழுந்து தெறித்த இரண்டு சொட்டுக் கண்ணீரைக் கருணாமூர்த்தி துடைத்துக் கொண்டான்.

கொஞ்சநேரம் சுடுகாட்டு அமைதி!

"அப்பா... அண்ணன்... அண்ணன்..."—கருணாமூர்த்தி தேம்பினன்.

"அழாதேடா, கண்ணே. அவன் நிச்சயமாய்த் திரும்பி வருவான். என் தெய்வமே, அழாதேப்பா"—கருணாமூர்த்தியின் சிக்குப்பிடித்த தலையை மெதுவாக வருடிக்கொண்டே அவரும் மெதுவாக விசிக்க ஆரம்பித்தார். அவருடைய உள்ளம் நெருப்பிலிட்ட ஈயமாய்—மெழுகாய்—அரக்காய்-வெண்ணெயாய்—உருகியது!

மீண்டும் அமைதி!

"டேய் ராஜா, கொஞ்சம் கீழே இறங்கிப் படுக்கிறாயா?"



"ஏனப்பா? எங்கே போகிறீர்கள்? அண்ணனை அழைத்துக் கொண்டு வரவா?"

கருணாமூர்த்தி பேராவலுடன் கேட்டான். அப்பாவுக்கு அடி வயிறு சொந்தளித்தது. அவர் குமுறி வந்த அழுகையை எப்படியோ அடக்கிக்கொண்டார்.

"இல்லையடா கண்ணே. நான் எங்கும் போகவில்லை. அண்ணன் வருவான்"

கருணாமூர்த்தியின் முகம் குப்பென்று கறுத்தது. ஓரே ஏமாற்றம். அவன் பேசாமல் போர்வையை இழுத்து முழுக்கப் போர்த்திக்கொண்டான். அப்பாவின் மடியிலிருந்து நழுவி, பாம்புபோலச் சுருட்டிப் கொண்டு முடங்கிவிட்டான்.

அப்பா நெட்டுயிர்த்தார்; மெல்ல எழுந்தார்.

கருணாமூர்த்தி என்ன நினைத்தானோ? உடனே, போர்வையை விலக்கிக் கொண்டு தலையை மட்டும் தூக்கினான். படுத்தபடியே, கழுத்தைத் திருகித் திரும்பினான். அப்பாவைப் பார்த்தான்.

"அப்பா, எங்கே போகிறீர்கள்?"

"விளக்குக் கொளுத்துவதற்கு..."

"எந்த விளக்கை?..."

கருணாமூர்த்தி மறுபடியும் சுருட்டிக்கொண்டான். கடுங் குளிரும், கொடுங் காய்ச்சலும் அவன் பிஞ்சு உடலை—உயிரை—நடுநடுங்கச் செய்தன. அப்பா நின்ற இடத்திலேயே நெஞ்சங் குலைந்து நின்றார். அவர் கண்களி

தமிழ்த் திருமணம்

10–7–52 ல் வில்லியனூர் தாசில்தார் பி. ஆதிமூலம் பிள்ளையின் செல்வி **கமலா**வைத் திரைப்பட எழுத்தாளர் திருவாளர் **கலைமணி** தன் வாழ்க்கைத் துணைவியாக மயிலை சிவமுத்து முன்னிலையில் ஏற்றுக்கொண்டார். மணமக்களுக்கு வாழ்த்துக்களும் பரிசுகளும் நிறைந்தன.

விருந்து பொலபொலவென்று கண்ணீர் கொட்டியது!

ஓரிரண்டு நிமிடங்கள் உருகிப் போயின.

இருளுக்கும் வெளிச்சத்திற்கும் போர் துவங்கியது.

அப்பா விளக்குத் திரியைத் தூண்டிவிட்டுக்கொண்டே என்னவோ சிந்தனை செய்து கொண்டிருந்தார். அவர் என்ன முடிவுக்கு வந்தாரோ?

திடீரென்று படீரென இடி இடித்தது! சுளீரென்று மின்னல் வெட்டியது! சோவென்று ஹோவென்று மழை சாடியது! ஆஸ்ஸென்று, ஊஸ்ஸென்று காற்றடித்தது!

கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தார் அப்பா. கதவை ஓசைபடாமல் சாத்திக் கொண்டார். குமுறும் இடியிலே, கொப்புளிக்கும் மின்னலிலே, கொக்கரிக்கும் காற்றிலே, கொந்தளிக்கும் மழையிலே, எங்கோ, வேக வேகமாக நடந்தார்.

(தொடரும்)

மு. அண்ணாமலை

ஆஸ்கார் ஒயில்டு

பெற்றோர்கள்

பலமேதைகளின் பெற்றோர்கள் அவர்கள் பெற்றெடுத்த பெரும் பாக்கியத்தையே தங்களின் பெயருக்குச் சிறப்பாகக் கொண்டிருப்பார்கள். ஆனால் ஆஸ்காரின் பெற்றோர்களை அப்படிச் சொல்லமுடியாது. குறிப்பிடத் தக்க சிறப்பு அவர்களுக்குண்டு.

ஆஸ்கார் ஒயில்டின் தகப்பனார் சர் வில்லியம் ஒயில்டு மிகப் புகழ்பெற்ற ஒரு மருத்துவராக விளங்கினார். டப்ளின் நகரில் கண் — காது மருத்துவசாலை ஒன்றைத் தொடங்கி நடத்தி வந்தார். ஏழைகளுக்கு இலவச மருத்துவம் செய்தார். அதனால் அவர் பெயர் பொதுமக்களிடையே சிறிது செல்வாக்குப் பெற்றது. வில்லியம் ஒயில்டு மருத்துவத் தொழிலோடு நின்றுவிடாமல் எல்லாத் துறைகளிலும் ஈடுபடுவார். தான் பிறந்த ஐரிஷ் நாட்டிடம் மிகுதியும் பற்று அவர்க்குண்டு. ஐரிஷ் நாட்டு நாடோடிப் பாடல்களையெல்லாம் மிக முயன்று சேகரித்தார். புள்ளிவிவரங்கள் எடுப்பதில் சமர்த்தர். ஐரிஷ் நாட்டில் எடுக்கப்பட்ட மக்கள் எண்ணிக்கைக்கு இவர் காட்டிய ஊக்கம் பலராலும் பெரிதும் பாராட்டப்பட்டது. அப்பொழுது—அதாவது 1864-ம் ஆண்டில் அயர்லந்தின் வைஸ்ராயாக இருந்த கார்லிஸில் என்னும் பெருமகனார் (Lord Carlisle) அதைப் பாராட்டி வில்லியம் ஒயில்டுக்கு ஒரு கடிதம் எழுதினார்:

"மிஸ்டர் ஒயில்டு,

தங்களுக்கு வழங்கப்போகும் பட்டம் தங்களின் தொழில் திறமை காரணமாகக் கொடுக்கப்படுவதன்று; ஐரிஷ் குடிமக்கள் எண்ணிக்கை எடுத்தபோது தாங்கள் காட்டிய பேரூக்கத்திற்கும் ஆற்றிய பணிக்குமேயாகும்" என்று அவர் எழுதியிருந்தார். சாதாரண வில்லியம் ஒயில்டு சர் வில்லியம் ஒயில்டாக மாறினார். அவரது விடாமுயற்சியும், பொது விஷயங்களில் தளராமல் ஈடுபடுவதும் அவரை முன்னுக்குக் கொண்டுவரத் தவறவில்லை. கெல்டிக் நாகரிகத்தை அறிய சர் வில்லியம் ஆற்றிய தொண்டைப் பாராட்டி ராயல் ஐரிஷ் அக்காடமியினர் கன்னிங்ஹாம் மெடலைப் பரிசாக அளித்தனர்.

இப்படியாகப் பல வகையில் தன் பெயரை நிறுவிய வில்லியம், அயர்லந்தில் குறிப்பிடத்தக்க பெரிய மனிதரான வில்லியம் பெண்கள் சம்பந்தப்பட்ட வரையில் சின்ன மனிதராகவே இருந்தார். இவருக்கு அம்பலத்தில் ஒரு மனைவிதான். ஆனால் அந்தரங்கத்தில் எத்தனை எத்தனையோ! வில்லியம் இறக்கும் தருவாயில் கிடந்தபோது அவரது படுக்கைக்கு ஒரு பெண் மெதுவாக வந்து வந்து சென்றாளாம். அதுவும் அவள் ஆஸ்காரின் தாய் இல்லாத சமயம் பார்த்தே நுழைவாளாம். தவறி ஆஸ்காரின் தாய் வந்துவிட்டால் மெதுவாக நழுவிவிடுவாளாம். பல சமயங்களில் வில்லியத்தோடு தளதளத்த மெல்லிய குரலில் பேசிக் கண்ணீர் விடுவாளாம். இந்த நிகழ்ச்சியை ஆஸ்கார் ஒயில்டே குறித்திருக்கிறார்.

இது மட்டுமின்றி அவர் பெரிய குடிகாரர்; எந்நேரமும் மதுக் கிண்ணங்களோடேயே காட்சி அளிப்பார்.

* *
*

ஆஸ்காரின் தாயிடத்தில் ஆஸ்காருக்கு மிகுதியான அன்பு உண்டு. அவள் இறக்கும்போது ஆஸ்கார் சிறையிலே கிடந்து, கப்பிகளுக்கிடையே தன் கவிதா உள்ளத்தை அலைய விட்டுவிட்டு நொந்து போயிருந்தார். சிறை வாழ்க்கையாலும், வாழ்வில் தனக்கு நேர்ந்த அவமானங்களாலும் சித்திரவதை செய்யப்பட்ட அவருக்குத் தாய் இறந்த செய்தி பெரியதொரு தாக்குதலாகவே இருந்திருக்கவேண்டும். அவர் தாம் சிறையிலிருந்து எழுதிய நூலில், இதை நினைத்துப் பெரிதும் தளர்கிறார்.

"என் தாய் இறந்துவிட்டாள். நான் அவள்பால் எவ்வளவு அன்பு கொண்டிருந்தேன், அவளை எவ்வாறு பெருமைப் படுத்தினேன் என்பதையெல்லாம் யாரும் அறியமாட்டார்கள். அவளுடைய சாவை என்னால் பொறுக்க முடியவில்லை. ஒரு காலத்தில் இந்த மொழியின் தலைமைப் பீடத்தில் இருந்த எனக்கு இன்று என் துன்பத்தைக் கொட்டி அளக்க மொழிகள் கிடைக்கவில்லை. கலைஞனாக வாழ்ந்த இத்தனை காலமாக என்மேல் இவ்வளவு பெரிய துன்பச் சுமை வீழ்ந்ததில்லை.

"தாயும் தந்தையும் எனக்கு அழகானதொரு பெயர் சூட்டி அகமகிழ்ந்தனர். அவர்கள் சூட்டிய அந்த அழகுப் பெயருக்கு நான் என்ன சேர்த்தேன்!

"பழி... பழி... தீராக்குறை. அழியாத கறையை ஏற்படுத்தினேன். கீழோர்களின் நடுவே மிகக் கீழ்த்தரமாகச் செய்துவிட்டேன. மூடர்களுக்கிடையே என் பெயரைச் சிக்கவிட்டேன். அவர்கள் முரட்டுத்தனத்தின் பாத்திரமாக மாற்றினர். முட்டாள்களிடம் சிக்கவிட்டேன். பாபத்தின் சின்னமாகச் செய்துவிட்டார்கள்.

"நான் அன்று எவ்வளவு வருந்தினேனே, இன்று எவ்வளவு வருந்துகிறேனே, அவ்வளவையும் என்னுல், என் பேனுவால் எழுதமுடியவில்லை. ஏடு கொள்ளவில்லை.'' இவ்வாறு ஆஸ்கார் எழுதியிருக்கிருர். இந்தக் கடிதங்களில் ஆஸ்காரின் ஆரவாரமான மனம், துன்பத்தில் அடிபட்டு, அவமானத்தில் உணங்கி, அமைதியற்றிருப்பதைக் காணமுடிகிறது.

ஆஸ்காரின் தாய் படித்தவள். நல்ல கவிதைகள் பல எழுதியிருக்கிருள். எத்தனையோ பல சின்னஞ்சிறு விஷயங்களைப் பற்றிப் பல புத்தகங்கள் எழுதியிருக்கிருள்.

ஆஸ்காரின் தாய்க்கு அழகான வண்ண உடையுடுத்திக்கொண்டு திரிவதில் மிக மகிழ்ச்சி. ஆண்டு முதிர முதிரத் தன் அழகும் முதிர்ந்து வருவதாகக் கனவு கண்டாள். வண்ணத்திப் பூச்சியைப்போல வண்ண உடைகளைச் சுற்றிப் போட்டுக்கொண்டு தெருக்கூத்திலே வரும் மகாராணிபோலப் புறப்பட்டு விடுவாள். அவள் தனக்குப்பெண் குழந்தையொன்று பிறக்கவில்லையே என்று பல நாளாக ஏங்கியிருந்தாள். ஆஸ்கார்வயிற்றிலிருந்தபோது பெண் குழந்தைதான் பிறக்கப் போகிறது என்று நினைத்தாள். பிறந்தால் எப்படியெல்லாம் இருக்கும், என்ன பெயரிடலாம் என்றெல்லாம் கனவு கண்டு கொண்டிருந்தாள். ஆனல் கனவு பலிக்கவில்லை. ஆஸ்கார் ஒயில்டு பிறந்துவிட்டார். தாய்க்கு வெளியில் சொல்ல முடியாத ஏமாற்றமென்றுலும், மகிழ்ச்சி குழந்தை என்ற அளவில் பெருகியது. அந்தத் தீராத ஆசை காரணமாக ஆஸ்காருக்குப் பல சமயங்களில் பெண்ணுடை உடுத்து அழகு பார்ப்பாளாம். ஆஸ்காரிடம் காணப்பட்ட பெண்மைப் பண்புகளுக்கு அந்த நிகழ்ச்சியைச் சில ஆசிரியர்கள் எடுத்துக் காட்டி எழுதுகின்றனர்.

ஒருவனுடைய குண நலன்களைப் பற்றி ஆராயப் புகும் அறிஞர்கள் அவனது பெற்றோர்களின் குண நலன்களையும், பிள்ளை வளர்ந்த சூழ்நிலையையும் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளுவார்கள். ஆஸ்கார் ஒயில்டின் குண நலன்களை ஆராய்பவர்கள் அவர்களது பெற்றோர்களைப்பற்றியும் எண்ணிப் பார்க்கலாம்.

கலையிலும், கவிதையிலும், இலக்கியத்திலும் ஈடுபாடுடைய பெற்றோர்களிடையே வளர்ந்ததால் அவை ஆஸ்காரின் உள்ளத்தை எளிதில் கவர்ந்தன. இளமையில் தந்தையாரோடு பல சிற்பங்களைப் பார்வையிட்டிருக்கிருர். அவர்கள் வீட்டில் நடந்த வாதங்களில் ஈடுபட்டிருக்கிருர். ஆனல் ஒழுக்கச் சீரழிவுள்ள பெற்றோர்களின்கீழ் கண்காணிப்பின்றி வளர்ந்ததால், ஆஸ்கார் ஒழுக்கத்தின் பெருமையைச் சரியாக அறிந்துகொள்ள முடியவில்லை.

ஒழுக்கம் எத்துணை இன்றியமை யாதது? அது சமுதாயத்தை எப்படி ஒரு கட்டுப்பாட்டின் கீழ் வைத்துக் கொண்டிருக்கிறது என்பதைப் போன்ற உண்மை களை யெல்லாம் உணரவில்லை. எண்ணிப் பார்த்தாலும், தீவிர மாக அலசினாலும் அவர் சரியான முடிவுக்கு வரவில்லை. ஒழுக்கத் திற்குக் கொடுக்க வேண்டிய மரியாதையை அவர் கொடுக்கத் தவறிவிட்டார். இளமையில் இவ ருக்கு ஒழுக்கத்தைப் புகட்டவு மில்லை. பின்னால் இவர் திருந் தவுமில்லை; பிறரைத் திருத்த வும் முற்படவில்லை.

பாரிஸ் வாழ்க்கை

அழகுத் தேவதை இளமை யைத் தழுவிப் பெண்ணாகிப் பெண்ணின் உடையாகி, ஒய்யார நடையாகிக் கொலுவீற்றிருக்கும் நகரம் பாரிஸ்.

மகிழ்ச்சிக்கிடமான அந்நகர் பல எழுத்தாளர்களின் கலைக் கூடமாகவே விளங்கிற்று. ஆஸ் கார் ஒயில்டுக்குப் பாரிஸ் நகர வாழ்க்கை மிகவும் பிடித்திருந் தது. பிரஞ்சு எழுத்தாளர் களோடு தானே சென்று பழக விரும்பினார். எத்தனையோ நாட் கள் எத்தனையோ மாதங்கள் சேர்ந்தாற்போல் பாரிஸ் ஹோட்டல்களில் தங்குவார்.

ஆஸ்கார் ஒயில்டு பாரிஸில் வாழ்ந்தபோது விக்டர் ஹ்யுகோ பழுத்த கிழவராக இருந்தார். கான்கார்ட் என்பாருக்கு நல்ல பெயர் கிடைத்துக் கொண்டிருந்த சமயம் அது. அதற்கடுத்தபடியாக அல்போன் ஸ்டாடட் என்ற எழுத்தாளரும் எமிலிசோலாவும் புகழ்த்திசை நோக்கி விரைந்துகொண்டிருந் தனர்.

பிரஞ்சு எழுத்தாளர் பால்ஸாக் (Balzac)கைப்போல எழுத வேண்டும்; அதிகமாக எழுத வேண்டும் என்றெல்லாம் ஆஸ் கார் ஒயில்டு எண்ணிப் பார்ப் பார். அவரை இலட்சிய புருஷரா கக்கொண்டு பல மணி நேரங்கள் அமர்ந்து எழுதுவார். அவரைப் போல் சில சமயம் உடை உடுத் திப் பார்ப்பார்.

ஆஸ்கார் ஒயில்டுக்குப் பிரஞ்சு மொழிப் பயிற்சி உண்டு. போது மான புலமையும் உண்டு. அவ ருடைய சாலோம் (Salome) என்ற அருமையான நாடகம் முத லில் பிரஞ்சு மொழியில்தான் எழுதப்பட்டது. அதைப் பாரிஸி லேயே அரங்கேற்றவேண்டும் என்று ஆஸ்கார் ஒயில்டு பெரி தும் ஆசைப்பட்டார். அதற்காக அவர் தன் கைக்காசையும் செலவு செய்தார். சாலோம் நாடகத்தை எழுதி முடித்ததும் அதைச் சில பிரஞ்சு எழுத்தாளர் களிடம் காட்டி ஒன்றிரண்டு திருத்தங்களைச் செய்துகொண் டார்.

பிரஞ்சு நன்றாக ஆஸ்கார் பேசி னார் என்று பிரஞ்சுக்காரர்கள் எழுதும்போது, சில ஆங்கில எழுத்தாளர்கள் அவர் தப்பும்

தவறுமாக விகாரமான உச்சரிப்புக்களோடு பேசினர் என்று கூறுகின்றனர். பிரஞ்சில் நூல் எழுதக்கூடிய வன்மைபெற்றிருந்த ஆஸ்கார், ஒரு சாதாரண ஆங்கிலேயன் எவ்வளவு பிரஞ்சு அறியமுடியுமோ அதைக்காட்டிலும் பன்மடங்கு தெரிந்து கொண்டிருக்கத்தான் வேண்டும்.

ஆஸ்கார் ஒயில்டின் உண்மையான திறமையைப் பிரஞ்சு எழுத்தாளர்கள் சரிவர உணர்ந்து கொள்ளவில்லை. ஏதோ தம்மைத் தேடி ஓடோடிவரும் ஒரு ஆங்கிலக் கவிஞர் எனவே எண்ணினர். ஒருகால் கான்கார்ட் தன் நாட்குறிப்பில் ஆஸ்கார் ஒயில்டைப்பற்றிக் குறிக்கும்போது "இந்தக் கவிராயர் அபாரமாக அளக்கிறரே' என்று எழுதிக் கொண்டாராம். ஆனல் ஆஸ்கார் விடாப்பிடியாகப் பாரிஸ் வாழ்க்கையில் ஈடுபட்டுக்கிடந்ததால் பாரிஸ்எழுத்தாளர்களோடு கொண்ட நட்பு உறுதியாயிற்று. எந்தக் கலைவிழாவிலும், நாடகங்களிலும் தவருமல் இடமும் அழைப்பும் அவருக்குக் கிடைத்துக்கொண்டிருந்தன என்பதில் ஐயமில்லை.

பாரிஸ் எழுத்தாளர்களோடு பழகி அவர்களுக்கிடையே செல்வாக்கோடு வாழ்ந்த பிறநாட்டு எழுத்தாளர்களில் ரஷ்ய எழுத்தாளர் துர்கானீவை முதலில் குறிப்பிடவேண்டும். அதற்கடுத்தபடி அவ்விடத்தைப் பெறத்தக்கவர் ஆஸ்கார்ஒயில்டேயாகும்.

பாரிஸில் வாழ்ந்தபோது ஆஸ்கார் ஒயில்டுக்குக் கிடைத்த நண்பர்களிலே மிக முக்கியமாகக் குறிக்கப்படவேண்டியவர் ராபர்ட் செரார்டு (Robert Sherard) என்பவராகும். செரார்டு உள்ளன்போடு அவரைப் பாராட்டி உறுதுணையாக நின்றார். ஆஸ்கார் ஒயில்டு தனக்கு நேர்ந்த அவமானத்தையும் துன்பத்தையும் கண்டு எண்ணி மனம் நைந்து இறந்தபோது எழுத்தாளர்கள் அவரைப்பற்றிப் பொய்யும் புனைந்துரைகளுமாக எழுதித் தள்ளினர். அவருக்கில்லாத பண்புகளையெல்லாம் இருந்ததாகக் கூசாமல் கதைகட்டினர். அவற்றையெல்லாம் கண்ட செரார்டு அவைகளை ஒன்றுவிடாமல் எதிர்த்தெழுதினர். ஆஸ்கார் ஒயில்டைப்பற்றிய நல்லதொரு உண்மையான வரலாற்று, நூலை எழுதினர். ஆஸ்காரிடம் இயல்பாக என்னென்ன குறைகள் உண்டோ என்னென்ன குற்றங்கள் உண்டோ அவற்றையும், என்னென்ன உயரிய பண்பாடுகள் உண்டோ அவற்றையும் அழகுற எடுத்துக்காட்டினர்.

பிரேசல் சொல்வதுபோல. பகைவர்களும் போலி நண்பர்களும் எந்தக் குழியில் வீழ்த்தினர்களோ அந்தக்குழியிலிருந்து ஆஸ்கார்ரைச் செரார்டின் அயராதபேனதான் கரையேற்றிற்று.

(தொடர்ந்து கட்டுரைகள் வரும்)

அந்தச் சிரிப்பு!

பத்மாவதி டேவிட்

எனக்குத் தூக்கமே வரவில்லை. இனம் விளங்காத ஒரு திகில் என் உள்ளத்தில் உறுத்திக் கொண்டேயிருந்தது. முனிசிபல் மணிக்கூண்டில் மணி பனிரண்டு அடித்தது. எங்கும் இருள்-சூனியம்—அமைதி. பயத்தில் கை கால்கள் வெடவெடத்தன. என் மனைவி இலேசாக விட்டுக்கொண்ருந்த குறட்டையும், தூக்கத்தில் 'களுக்'கென்று சிரித்த என் குழந்தையின் சிரிப்பும் கூட எனக்குப் பயங்கரமாயிருந்தன. ஏன் இத்தனை கலக்கம்?

'தடதட'வென்று யாரோ கதவைத் தட்டுவதுபோல் இருந்தது. 'நடுராத்திரியில் ஆளறியாத இந்த ஊரில் கதவைத் தட்டுவது யாராயிருக்கும்? ஊம், நம்மைத் தேடிக்கொண்டு வரவா ஆளில்லை? இந்த நோயாளிகள் எந்த டாக்டரைத்தான் விட்டு வைக்கிறார்கள்!' என்று மனதை ஒருவாறு தேற்றிக்கொண்டேன். ஆனால் எழுந்திருந்து போயல்லவா கதவைத் திறக்கவேண்டும்? கைகால்களைக் கட்டி லோடு சேர்த்துப் பின்னிக் கட்டியிருப்பதுபோல் இருந்தது. இப்படி அப்படி அசைக்க முடியவில்லை. மூச்சைப் பிடித்துக்கொண்டு படுத்துக் கிடந்தேன். மறுபடியும் கதவு உடைக்கப்படும் சத்தம் காதைக் குடைந்தது.

"ஐயோ திருடன்!"—என் மனைவியின் கூக்குரல்தான் அது. "எங்கே?" என்று கேட்டுக் கொண்டே துள்ளியெழுந்தேன். என் கைகள் தாமாகவே 'ஸ்விட்சை'த் தட்டிவிட்டன. எங்கும் ஒளி. திருடனைத் தேடி என் கண்கள் அறை முழுவதும் நோட்டம்விட்டன. என் மனைவியின் பக்கம் திரும்பினேன். நிம்மதியான உறக்கத்தில் மறுபக்கம் புரண்டு படுத்தாள் அவள். அவளது உதடுகள் எதையோ முணுமுணுத்துக் கொண்டிருந்தன. அப்பாடா! கனவில் உளறி இப்படி மிரட்டிவிட்டாளே!

ரேடியோவைத் திருப்பினேன். ஒளிவிளக்கு எரிந்தது. அதைத் தொடர்ந்து அந்தப் பேய்ச் சிரிப்பு! பின் ஒரு குரல் பேசியது. "அடே ராஜா, கதவைத் திறக்கப் போகிறாயா, இல்லையா? எவ்வளவு நேரம் வெளியிலேயே நிற்கிறது? சாவி துவாரத்தின் வழியாக வரட்டும் என்று இருக்கிறாயா? கதவைத் திற!"—அலறியது அக்குரல்.

ரேடியோவில் எனக்கு அறிவிப்பா? ஐயையோ! 'படக்'கென ரேடியோவை மூடினேன். சத்தம் அடங்கியது. அந்தக் குரல் யாருடையது? என் பெயரைச் சொல்லி அழைத்தது யார்? இந்த ஊருக்கு இன்றுதானே வேலை மாற்றலாகி வந்திருக்கின்றேன். யாராயிருக்கும் அது? அந்தக் குரல் ரேடியோவிலிருந்து வந்ததா?

மறுபடியும் ரேடியோவை நிறுத்திவிட்டுப் படுக்கையில்

வந்து விழுந்தேன். உடல் வியர்வை வெள்ளத்தில் மிதந்தது. இத்தனை சத்தத்துக்கும் என் மனைவிமட்டும் ஏன் எழுந்திருக்கவில்லை? ஒரு வேளை மனக் குழப்பத்தின் காரணமாக அந்தக் குரல் எனக்கு மட்டும் தான் ஒலிப்பதுபோல் தோன்றுமோ! அதென்ன வாசனை! ஆகா! மல்லிகை, ரோஜா, செண்பகம், மனோரஞ்சிதம். அத்தனை மலர்களின் மணமும் கலந்து வீசியது. ஆனால் அதையடுத்து சுடுகாட்டில் பிணம் எரியும் நாற்றம் மிதந்து வந்தது.

மறுபடியும் கதவைத் தட்டும் சப்தம் கேட்டது. இந்தச் சத்தத்தைக் கேட்டவுடன் மட்டும் உடலில் ஏன் இந்த நடுக்கம்!

முன் 'ஜாக்கிரதையுடன் 'ரிவால்வரை' நெஞ்சுக்கு நேராக நீட்டிப் பிடித்துக்கொண்டு கதவை மெள்ளத் திறந்தேன்.

ஒருவரையும் காணவில்லை. கதவு தட்டப்பட்டதா, இல்லையா? கதவை மூடிவிட்டுத் திரும்பினேன். இரும்புக் கரம் ஒன்று என் தோளைப் பிடித்து உலுக்கியது. ஒரு வினாடி ரத்தஓட்டமே நின்றுவிட்டது.

"என்னடா ராஜா, பேயறைந்தவனைப்போல நிற்கிறாய்?"

அவன் யார்? எங்கேயோ பார்த்தமாதிரியா யிருக்கிறதே! இவன் எப்படி உள்ளே வந்தான்?

"என்னடா பழி, இப்படி விழிக்கிறாய்? என்னை அதற்குள் மறந்துவிட்டாயாடா! எப்படியடா முடிந்தது, உன்னால்? என்னைத் தெரியவில்லையா? நான் தான் குமார்! உன்னுடைய அன்புத் தோழன்..."

"நீ...நீ...நீ...குமாரா! நீ... செத்துப்போய்விடவில்லை?"— வார்த்தைகள் வாயைவிட்டு வெளிவரவே மறுத்துவிட்டன.

ஐந்து வருஷத்துக்கு முன்னால் கல்கத்தா மெயில் கவிழ்ந்த போது நசுங்குண்டு இறந்தவர்களில் குமாரும் ஒருவன்; அவனது பெற்றோர் அவனுக்கு இறுதிச் சடங்குகள்கூடப் பண்ணிவிட்டனர். சிதைந்துபோன அவனது உடலைத் தகனம் செய்யும்போது நான் அருகில் இருந்தேன். குமாரும் நானும்நெருங்கிய நண்பர்கள் தான். இருவரும் 'மெடிக்கல் காலே'ஜில் சேர்ந்துதான் படித்தோம். நான் இருக்குமிடத்தில் அவனும், அவன் இருக்குமிடத்தில் நானும் பிரியாமல் இருப்போம். ஆனால், திடீரென எங்களது நட்புக்கு ஒரு முத்தாய்ப்பு வைக்கப்பட்டது. குமாரின் தங்கை லலிதா சூதுவாது தெரியாதவள். அவளும் 'இண்டரி'ல் படித்துக்கொண் டிருந்தாள். ஆண்களுடன் சரளமாகப் பழகும் சுபாவமே அவளது உயிருக்கு உலைவைத்து விட்டது. அவளது அழகில் மயங்கி மனதைப் பறிகொடுத்தவர்களில் நானும் ஒருவன். அவளும் என்னை நேசிப்பதாகச் சொன்னாள். குமாருக்கும் எங்கள் காதல் வளர்ச்சி தெரியும். அந்த ஆண்டு எம். பி., பி. எஸ். பரீட்சை எழுதி முடித்ததும், அந்தக் கோடை விடுமுறையி

லேயே எங்கள் மணமத்தை முடித்துவைப்பதாகக் குமார் சொன்னான். இதில் எங்கள் இரு குடும்பத்தவருக்கும் பூரண சம்மதம். பரீட்சை முடிந்தது. கோடை விடுமுறைக்காகக் காலேஜும் சாத்தப்பட்டது. நான் இன்பக் கனவுகளில் மிதந்து பூரித்துப்போயிருந்தேன். ஆனால் திடீரென என் தலையில் விழுந்த அந்தப் பேரிடி என் கனவுகளைச் சுக்குநூறாகச் சிதறடித்துவிட்டது. குமார் ஒரு கடிதத்துடன் என்னிடம் ஓடிவந்தான்.

"ராஜா, லலிதா மோசம் பண்ணிவிட்டாளடா. இதைப் படித்துப்பார்!" என்று கண்ணீர் விட்டுக்கொண்டே, என்னிடம் அக்கடிதத்தைக் கொடுத்தான்.

"அன்புப் பெற்றோருக்கு,

ஆசையையும் அன்பையும் கொட்டி வளர்த்த உங்களுக்கு நான் வைத்துவிட்டுப்போவது அவமானமும் கேவலமும் தான். நான் படித்தவள்; வாழ்க்கையை வகுத்துக் கொள்ளத் தெரிந்தவள் என நினைத்தீர்கள். ஆனால்......

இவ் விடுமுறையில் எனக்கும் ராஜாவுக்கும் திருமணம் செய்விக்க உத்தேசித்திருந்தீர்கள். அதை எண்ணி எண்ணி நானும் இறுமாந்திருந்தேன். ராஜா நல்லவர்! என்னை உள்ளன்போடு நேசித்தார். ஆனால் ஒரு உயிருக்குப் பதிலாக இரண்டு உயிர்களைச் சுமக்க யார்தான் மனம் ஒப்புவார்?

'அவரும்' என்னை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார். மணமாகும் முன்பே தாய்மையை எய்திவிட்டேன். ராஜாவை நோகாதீர்கள். அவர் மேல் பிசகில்லை. காலமும், சூழ்நிலையும் எனது வெகுளித்தனமும் என்னைப் படுகுழியில் தள்ளிவிட்டன. என் மரணத்துக்குக் காரணமான எவரையும் நான் காட்டிக் கொடுக்க விரும்பவில்லை. வயது காலத்தில் உங்களுக்கும் மாசு உண்டாக்கி விட்ட என்னை மன்னித்து விடுங்கள்.

"நீங்கள் எப்போது வாடகை தருவதாக உத்தேசம்?"

"என் நாவலுக்குப் பதிப்பகத்தார்கள் பணம் அனுப்பியவுடன்."

"உங்கள் நாவல் எப்போது வெளிவரப் போகிறது?"

"நாவலின் கதையைப் பற்றி இனித்தான் சிந்திக்கப் போகிறேன்."

நான் இறந்துவிட்டாலும், என் ஆவி எப்பொழுதும் உங்கள் இன்ப துன்பங்களில் பங்கு பெற்றுக்கொண்டுதானிருக்கும்.

லலிதா."

கடிதத்தைப் படித்த எனக்குத் தூக்கிவாரிப்போட்டது.

"ராஜா, என் தங்கை லலிதா போய்விட்டாளடா. அவளுக்குக் கல்யாணம்பண்ணிக் கண் குளிரக் காணவேண்டுமென எண்ணியிருந்தேனே. அத்தனையும் வியர்த்தமாகிவிட்டதே. படுபாவி! உன்னால் தானேடா என் தங்கை இறந்தாள். உன்னைச் சும்மா விடப்போவதில்லை. அவள் மரணத்துக்குப் பதில் உன் மரணம்! தவறு செய்துவிட்டு அவளை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டாயோ? கொலைகாரா! உன்னை என்ன செய்கிறேன் பார்!"-குழையக் குழையப் பேசியவன் குமுறிக்கொண்டு புலிபோல் என் மேல் பாய்ந்தான். நான் லாவகமாக விலகிக்கொண்டேன்.

நான் குற்றமற்றவன்; நிரபராதி; லலிதாவை மணந்துகொள்ள மிகவும் ஆவலோடு காத்திருந்தவன் என்று எத்தனை சொல்லியும்அவன் நம்புவதாக இல்லை.

"உன்னைப் பழிக்குப் பழி வாங்காமல் விடுவதில்லை" என்று கருவிக்கொண்டே வெளியில் சென்றான். எங்கள் நட்பு முறிந்தது.

லலிதாவின் மரணத்துக்கு நானே காரணம் என்ற அபவாதம் கேட்டு என் இதயம் சூன்யமாகிவிட்டது. அந்த ஊருக்கே ஒரு முழுக்குப் போட்டுவிட்டு வடக்கே சென்று ஒரு ஆஸ்பத்திரியில் உதவி சர்ஜன் பதவி ஏற்றேன். சுமதி என் மனைவியானாள். அந்தச் சமயத்தில்தான் கல்கத்தாமெயில் விபத்தேற்பட்டது. அதில் பிரயாணம் செய்த குமாரும் விபத்தில் சிக்கியதாகக் கேள்விப்பட்டேன். இறந்தவர்களின் பட்டியலில் குமா

ரின் பெயரையும் விலாசத்தையும் தாங்கிவந்த பத்திரிகைகளைக் கண்டு மனம் குன்றினேன். ஒரு காலத்தில் உயிர்த்தோழனுயிருந்ததை முன்னிட்டு அவனது ஈமக் கிரியைகளுக்கும் சென்றிருந்தேன். பிறகு இவன் எப்படி இங்கு வந்தான்?

"என்னடா இது! வரக்கூடாதவன் வந்திருக்கிறேன். வா வென்று கூடச் சொல்லாமல் பேய் பிசாசைக் கண்டவன் மாதிரி மலைத்துப்போய் நிற்கிறாயே!" என்று கூறியபடி சுவாதீனமாக ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தான் ராஜா.

என் கையிலிருந்த ரிவால்வர் கீழே நழுவியது. அதை அவன் குனிந்து எடுத்தான். நான் திடுக்கிட்டேன்.

"ஏண்டா! இதனால் என்னைக் கொன்றுவிட முடியுமாடா உன்னால்? என்னடா! பேசவே மாட்டேனென்கிறாய்."

"இல்லை...நீ...எப்படி....உயிரோடு வந்தாய்?...நீ சாகவே...யில்லையா...? உன் பிரேதத்தை நாங்கள் தகனம்பண்ணினோமே"

"அஹ்ஹஹ்ஹா!" — அதிர் வேட்டுச் சிரிப்பொன்று சிரித்தான் குமார்.

"அடே சந்தேகப்பித்து! இன்னும் உனக்குத் தடுமாற்றம் தானா? நான் செத்தும் உயிரோடிருக்கிறேன் என்று வேண்டுமானால் வைத்துக்கொள்ளேன். உடலை எரித்துவிட்டீர்களா, உயிரை? ஆமாம்! நீ இன்றைக்குத்தான் இங்கு வந்ததாகக் கேள்விப்பட்டேன். உன்னைப் பார்த்து எத்தனை வருடங்களாகி விட்டன!" — அவனது குரலில் பொங்கிய

அந்த உணர்ச்சியை எப்படிப் பாவித்துக் கொள்வதென்றே என்னால் உணர்ந்துகொள்ள முடியவில்லை.

"இந்த நேரத்தில் எங்கே வந்தாய்?"

"ஏன், வரக்கூடாதா? என் ஆவல் தணிக்கமுடியாததல்லவா! சந்தர்ப்பம் கிடைத்தபொழுது நழுவ விட்டுவிட முடியுமா?"

"அதுசரி; நீ எப்படி உள்ளே வந்தாய்? கதவைத் திறந்து ஒரு நாழிகை காத்திருந்தேன். ஒருவரையும் காணோம். எனக்குப் பின்னால் வந்து நின்றாயே!"

"அடபாவி! உனக்குக் கண் அவிந்தா போய்விட்டது? உன் கண்முன்னால்தானேடா உள்ளே வந்தேன்!"

என்னால் என்னையே நம்ப முடியவில்லை.

"போதுமடா உன் யோசனை. கிளம்பு!" என்றான் அவன்.

"கிளம்பவா, எங்கே?" என்று வியப்போடும் திகிலோடும் வினவினேன்.

"சரி, சரி! உனக்கு ஒவ்வொன்றையும் விளக்கிச்

சொல்லாவிட்டால் உன் மக்கு மூளையில் ஏறாது. எங்கேதான் கூப்பிடுவேன்! என்னுடைய பங்களாவுக்குத்தான். புறப்படு...... உம்!''-அவன் குரலிலதொனித்த கண்டிப்பு எனக்குக் கட்டளையிடுவதுபோல் இருந்தது. 'வர முடியாது' என்று சொன்னாலும் கூடக் குண்டுக்கட்டாய்க் கட்டித் தூக்கிக்கொண்டு போய்விடுவானோவெனப் பயமாயிருந்தது.

''இந்த நேரத்தில் உன் பங்களாவுக்கு ஏன் போகவேண்டும்? பேசாமல் குறைநேரத்தையும் இங்கே கழித்துவிடு. விடிந்ததும் போகலாம். எனக்கு இப்பொழுதுதான் தூக்கம் கண்களைச் சுற்றுகிறது'' என்று கெஞ்சினேன்.

''ஏய், உன்னை என் வீட்டுக்கு அழைத்துச் சென்று ஒரு டீயாவது கொடுக்கவேண்டாமா? அதுமட்டுமில்லையடா. என் வீட்டில் அபூர்வமான சரக்குகள் எல்லாம் வைத்திருக்கிறேன். அவற்றையெல்லாம் உனக்குக் காட்டவேண்டாமா? அவசியம் நீ பார்க்கவேண்டியவை அவை. நீ மட்டும் என் வீட்டுக்கு வந்துவிட்டாயோ, அவ்வளவுதான். என் வேலை தீர்ந்தது.''

கடகடவென்று சிரித்தான் குமார். அந்தச் சிரிப்பொலியில் வீட்டின் கூரையே என் தலையில் இடிந்து விழுந்துவிடுமோவென அஞ்சினேன். என் மனைவி மட்டும் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தாள். என் குழந்தை 'களுக்'கென்று சிரித்தது. குமார் அந்தப் பக்கம் திரும்பினான். அவனது முகம் மனதில் எழும் தீவிர சிந்தனைக்கு முத்திரை காட்டுவதாயிருந்தது.

''ஏண்டா ராஜா, உன் குழந்தையாடா இது?'' என்று கேட்டான் அவன்.

''ஆமாம்'' என்பதற்கடையாளமாகத் தலையை அசைத்தேன் நான்.

''ஒரு குழந்தைதானா? அதிகமாயிருந்தால் எனக்கல்லவா வேலையாகிவிடும். என் ஊகமே ஊகம்!''

''என்ன சொல்லுகிறாய், குமார்?'' என்று கேட்டேன்.

''ஒன்றுமில்லை; சரி, நாழியாகிவிட்டது. புறப்படலாமா?''

''அட நில்லப்பா, அவளிடம் சொல்லிக்கொண்டு வந்துவிடுகிறேன்.''

அந்தக்குரல்... அந்தக்குரல்... ரேடியோவில் நான் கேட்ட குரல் போலல்லவா யிருக்கிறது!

''குமார், எனக்கு...என்னவோ பயமாயிருக்கிறதே! ஏன் எங்கே இந்த இருட்டில்?''

''இருட்டு......அஹ்ஹஹ்ஹா இருட்டு...''-அந்தப் பேய்ச்சிரிப்பைக் கேட்டு என் உடல் சிலிர்த்தது. உடலில் ஓடும் நரம்புகளைத் தனையும் பட்பட்டென்று தெறித்து அறுவதுபோன்ற உணர்ச்சி.

''இருட்டாகவா இருக்கிறது! உன் வாழ்க்கையில் இருள் மூடப் போகிறதே, அதன் முன்னறிவிப்படா இது! உன் குற்றம் உன் கண்களையே மறைத்துவிட்டது.'' மறுபடியும் அதே பயங்கரச் சிரிப்பு!

"இது என் வீடில்லியே! நான் இங்கு எப்படி வந்தேன்!"

"அடே ராஜா! இது என்னுடைய வீடு. எப்படி இங்கு வந்தோம் என்று நினைக்கிறாயா? ஆகாயத்தில் மிதந்து." அவன் பேய்ச்சிரிப்புச் சிரித்தான்.

"குமார்... தயவுசெய்து அப்படிச் சிரிக்காதே...எனக்கு..."

"உனக்குப் பயமாயிருக்கிறதோ? பயப்படு... நன்றாகப் பயப்படு...நானு சிரிக்கிறேன்! என் ஆத்திரம் சிரிக்கிறது...என் முன்யோசனை சிரிக்கிறது....என் வயிற்றெரிச்சல் சிரிக்கிறது! சிரிக்கிறேன்--சிரிக்கிறேன்...என் தாகம் அடங்குமட்டும் சிரிக்கிறேன்."—சிரிப்பா அது? அந்தச் சிரிப்பின் அலைகள் ஒவ்வொன்றும் என் உயிரை அணுவணுவாகச் சுவைத்துக் குடித்துக் கொண்டிருந்தன.

"கொலைகாரா, எழுந்திரு! நான் இறந்துபோய்விட்டேனென்றுதானே இறுமாந்திருந்தாய். இதோ, இப்பொழுதே எனக்குப் பதில் சொல். என் தங்கையின் வாழ்வைப் பாழாக்கி அவளைக் கொன்ற உனக்குமட்டும் சுகவாழ்வா? மனைவி மக்களின் சூழ்நிலையில் மறந்துவிட்டாயாடா என் தங்கையை? ஒரே ஒரு முறையாவது உன் பாவத்துக்காக வருந்தியிருக்கிறாயா? கற்பழிக்கப்பட்ட கன்னி ஆவியாகி, பேயாகி, பிசாசாகி உலவுகிறாள்; நீ மனிதன் என்ற போர்வைக்குள் கண்ணியமாக வாழுகிறாய்! செல்லரித்த மரம் எத்தனை நாட்களுக்குத்தான் சூறாவளிக் காற்றோடு நிமிர்ந்து நின்று போராட முடியும்? குமார் சொன்ன சொல் தவறமாட்டான். உன்னைப் பழிக்கு பழி வாங்காமல விடுவதில்லையென்று, அன்று, என் தங்கை தற்கொலை செய்துகொண்ட நாளே உன்னிடம் சபதம் செய்தேனே நினைவிருக்கிறதா? என் தங்கையிடம் நான் எவ்வளவு அன்பு வைத்திருந்தேன்! அவள் ஆத்மா அமைதியின்றித் தவித்துக்கொண்டிருக்க விடுவேனா! அவள் மரணத்துக்குக் காரணமான உன்னை... உன்னை..."—பற்களை நெறித்தான் குமார். அந்தச் சபதத்

அவள்: உன்னுடைய டெலிபோன் நம்பரைச்சொல். அவசரத்திற்குப் பயன்படுமல்லவா?

அவன்: அது டைரக்டரியில் இருக்கிறதே.

அவள்: பேஷ்! உன் பெயர் என்ன?

அவன்: அதுவும் அதிலேயே இருக்கிறதே.

வாசனைச் சினிமா

சினிமாப் பார்க்கும்போதே அந்தந்தக் காட்சியில் வரும் சாமான்களின் வாசனையையும் கொட்டகைக்குள் பரப்பும் நவீன யந்திரத்தை புரபஸர் ரியோசி கண்டுபிடித்திருக்கிறார்.

காட்சியில் சூறாவளிக்காற்று வரும்போது அதே சூறாவளியைக் கொட்டகைக்குள் வீசச் செய்யவும், பாலைவனக் காட்சி வரும் போது உஷ்ணத்தைப் பரப்பவும், மழைக்காட்சி வரும் போது குளிர்ச்சியாக்கவும் இந்தயந்திரத்தால் முடியுமாம்.

தில் என் எலும்புகள் நொறுங்குவதுபோல் உணர்ந்தேன். அவன் மனிதனா, அல்லது பிசாசா? அவன் தனது இரண்டு கைகளையும் என் கழுத்துக்கு முன்பாகக் கொண்டுவந்தான். பத்து விரல்களும் மடங்கி மடங்கி விரிந்தன. என் இருதயத்தை அவற்றின் கூரிய நகங்கள் சல்லடைக் கண்களாகத் துளைத்துவிடப் போகின்றனவோ! என் நெஞ்சு உலர்ந்துவிட்டது.

"குமார்...என்னை ஏன் இப்படிச் சித்திரவதை செய்கிறாய்? ஒரேயடியாகக் கொன்றுவிடேன்" என்று அலறினேன் நான்.

"ஓ மறந்துவிட்டேன் பார்த்தாயா? மனிதப் பிறவிக்கும் அப்பாற்பட்டவனல்லவா நான்! இந்த நடவடிக்கைகளெல்லாம் மறந்து எத்தனையோ காலமாகிவிட்டது. என் வீட்டுக்கு வந்த விருந்தாளியல்லவா நீ! உன்னை உபசரிக்கத் தெரியவில்லையல்லவா எனக்கு! சரி, பொக்கிஷத்தை, உன்னிடம் குறிப்பிட்ட அந்த அபூர்வப் பொருளை வந்து பார்! எழுந்திரு." என்று கூறி என் கையைப் பிடித்துத் தூக்கிவிட்டான்.

"பார்! பெட்டியைப் பார்! என் அருமைப்பொக்கிஷத்தைப் பார்!" என்று உறுமினான் குமார். என் வீட்டில் நான் நுகர்ந்த அதே பிணவாடை அது!

குனிந்திருந்த என் தலையைப் பிடித்து அழுத்திப்பெட்டியோடு உரசினான். நான் பெட்டியைக் கவனித்தேன். அது மூன்று பாகங்களாகத் தடுக்கப்பட்டிருந்தது. பிணவாடை மூக்கில் மோதியது.

"ஐயையோ பிணம்!" என்று அலறினேன் நான். ஆம். உருத் தெரியாமல் அழுகி நாற்றமெடுத்துக் கொண்டிருந்த ஒரு பெண் பிணம் தடுக்கப்பட்டிருந்த பெட்டியின் மூன்றில் ஒரு பாகத்தில் கிடத்தப்பட்டிருந்தது.

"பிணமா இது? என் தங்கையின் பொற்சித்திரம்! உன் காதலி! உன்னைக் காட்டிக் கொடுக்க மனம் துணியாத பத்தினித் தங்கம்! தன் காதலனைக் காணாமல் எவ்வளவு சோர்ந்து போய்விட்டாள் பார்! லலி, உன் மனம் குளிரட்டும்! உன் ஆத்மா சாந்தியடையட்டும்! உன் அருமை அண்ணன் தன் கடமையைச் செய்யச் சிறிதும் தவறமாட்டான். உன்னிடம் உன் காதலனைச் சேர்க்க நான் எவ்வளவு பாடுபட்டேன், தெரியுமா? இரு, கொஞ்சம் பொறு!

உன் காதலன் உன்னை ஆலிங்கனம் செய்யப் போகிறான். அடே ராஜா, காதலிக்கருகில் விடப்பட்டிருக்கும் பாகம் யாருக்குத் தெரியுமா? சாட்சாத் உனக்கேதான். ஆனால், மூன்றாவது உன் குழந்தைக்கு! எங்கள் குலவிளக்கை அணைத்த உன் குடும்பத்தின் வாரிசை—உன் ரத்தவாடை வீசும் எந்த உயிரையும் ஆணிவேரோடு அறுத்துவிடப்போகிறேனடா!" — கரகரத்த அந்தக் குரல் மலையையும் மண்ணோடு மண்ணாகத் தகர்த்தெறியும் பூகம்பம், எரிமலை போன்று எக்களித்தது.

"ஐயையோ!" – அலறினேன்.

"அலறு... அலறு! லலிதா, உன் காதலனைப் பார்த்தாயா! உயிர்க் காதலியான உன்னோடு உடன்கட்டை ஏற அவன் தவிக்கிற தவிப்பைப் பார்த்தாயா? உன் உயிரைப்போக்கினேனே, அவனுக்குத் தன் உயிரின் மேலிருக்கும் ஆசையைப் பார்த்தாயா!"

திறந்திருந்த கதவின் நிலையில் மாட்டப்பட்டிருந்த திரைச்சீலை அசைந்தாடியது. என் மனதிலும் ஒரு சலனம். மூச்சைப் பிடித்துக்கொண்டு ஓடினேன்... ஓடினேன்... ஓடினேன்... ஓடிக்கொண்டேயிருந்தேன். அந்தச் சிரிப்பு? அதுவும் என் தலைக்கு மேலே உறுமிக்கொண்டே வந்தது.

அப்பொழுதுதான் முளைத்துக் கொண்டிருந்த விடிவெள்ளியின் மங்கலான வெளிச்சத்தில் தட்டுத் தடுமாறி ஓடி, வீட்டை அடைந்தேன். அந்தச் சிரிப்பொலியும் என்னைத்தொடர்ந்து வீட்டுக்குள் நுழைந்துவிட்டது.

"ஆமாம்; இப்படித்தானா கதவைத் திறந்து போட்டுவிட்டுப் போகிறஇடத்தைக் கூடச் சொல்லாமல் போகவேண்டும்!" என்று அலுத்துக்கொண்டிருந்த என் மனைவி, மூச்சு இழைக்க இழைக்கக் கதவைத் தாள்போட்டுக்கொண்டிருந்த என்னைக் கண்டதுப், "விடியப் போகிற நேரத்தில் ஏன் கதவை அடைக்கிறீர்கள்! ஐயையோ! ஏன் உங்கள் முகம் இப்படி வெளிறிக் கிடக்கிறது? கொலைகாரன் ஓடிவந்து ஒளிவதைப் போல் ஒளிகிறீர்களே! என்ன விஷயம்?" என்று பதறினாள்.

"ஐயோ, நான் கொலைகாரனா? நீ கூட நம்புகிறாயா சுமதி! நான் கொல்லவேயில்லை... அவள் இறந்ததற்குக் காரணம் நானல்ல! ஐயோ...பிணம்! நாற்றம்! அந்தச் சிரிப்பு... அந்தச் சிரிப்பு..."

"என்ன சொல்லுகிறீர்கள்! யார் அவள்? உங்கள் உடம்புக்கு என்ன? பிணமாவது, நாற்றமாவது? ஒன்றுமே புரியவில்லையே!" என்று கலவரத்தோடும் கவலையோடும் வினவினாள் சுமதி.

அந்தப் பேய்ச் சிரிப்பின் கொந்தளிப்பில் அவள் வார்த்தைகள் அரைகுறையாகவே விழுந்தன.

"சுமதி......அந்தச் சிரிப்பு! அந்தச் சிரிப்பு......உனக்குக் கேட்கவில்லையா? ஐயோ, அந்த மலர்மணம்! அந்தப் பிண நாற்றம்! அந்தக் குரல் அந்தச் சிரிப்பு!"

பெண்கள் முன்னேற்றம்

சுலோசனா

சரசு கொண்டு வந்த 'காட்லாக்'கைப் புரட்டிப் பார்த்தாள் லீலா. அதில் கண்ணைக் கவரும் முறையில் வரையப்பட்டிருந்த சட்டைகளெல்லாம் அவளுக்குப் பிடித்திருந்தன. ஒன்றைத் தேர்ந்தெடுத்துச் சரசுவிடம் காண்பித்தாள்.

"தோள்பட்டையில் 'காலர்' (*Collar*) வைத்துப் பிடித்தால் குழந்தைகளுக்கு நன்றாகயிருக்கும். உங்கள் குழந்தையின் நிறம் என்ன?" என்று கேட்டாள்.

"கறுப்புமல்ல; சிவப்புமல்ல. மாநிறம் என்பது என் அபிப்ராயம்!" என்றாள் சரசு.

"நிறத்திற்கேற்றபடி சட்டையைத் தெரிந்தெடுப்பதே பொருத்தமானது. கறுத்தவர்களுக்கு ஒரு போதும் கடினமான நிறம் (*Thick Colour*) பொருந்தாது. நமது பெண்களில் சிலர்—கன்னங்கரேலென்றிருப்பவர்கள்—கடினமான சிவப்பு நிறம், மஞ்சள் நிறம், ஊதா நிறம் ஆகிய நிறங்களில் புடவை கட்டிக்கொண்டிருப்பதைப் பார்க்கலாம். அது எவ்வளவு ஆபாசமானதென்று அவர்களுக்கே தெரிவதில்லை. கடின நிறமென்றால் எடுப்பாகக் காண்பிக்கும் என்பது அவர்கள் கருத்து. ஆனால் அதுதான் பிசகு. ஆபாசம் அதைவிட வேறில்லை. கறுத்தவர்கள் லகுவான நிறத்தை (*Light Colour*) தேர்ந்தெடுப்பதே பொருத்தம். மேலும், இக்காலத்தில் கடினநிறம் அநாகரிகமாகக் கருதப்படுகிறது!"

"நமது பெண்கள் 'ஜரிகை பார்டர்' போடப்பட்டுள்ள புடவைகளுக்கு மதிப்பு அதிகம் கொடுக்கிறார்களே; வடநாட்டுப் பெண்கள் அதை விரும்பவில்லையே? பம்பாயில் பெண்கள் சாதாரணப் புடவை கட்டிக்கொண்டிருப்பதையே எங்கும் பார்க்கலாம். சாதாரணப்புடவையென்றால், சரிகைப்புடவையில்லை—மெல்லியதாக, இலகுவான கலரில் நிறையப் பூப்போட்டதாக இருக்குமாம். விலையும் மலிவுதான். நம் சென்னையில்கூட இப்போது அம் மாதிரிப் புடவைகள்தானே நாகரிகமாகக் கருதப்படுகிறது!"

"ஆமாம், ஜரிகைப்புடவையின் மதிப்பு மங்கிக்கொண்டு வருகிறது. விலை அதிகம் என்பதுதான் மிச்சம். அதிகக் கவர்ச்சி வாய்ந்தது என்று சொல்ல முடியாது. சிறு குழந்தைகளுக்கு ஜரிகைத் துணியில் சட்டை தைப்பது கூடவே கூடாது. பலவித சித்திரங்கள் அச்சிடப்பட்ட பன்மாதிரி 'டிஸைன்க'ளுள்ள சீட்டித் துணிகளில் தைக்கவேண்டும். அதுவே உறுதியாகவும் நாகரிகமாகவுமிருக்கும்!

"இன்னொன்று, சிறு குழந்தைகள் இரவில் தூங்கச் செல்லுமுன், பகலில் அணிந்துகொண்டிருக்கும் உடையை மாற்றிக்கொள்வது நல்லதல்லவா? தூங்கும்போது அணிவதற்கென்று தளதளவென்றிருக்கும் மெல்லிய உடை ஓரிரண்டு தைத்து வைத்துக்கொள்ள வேண்டும். இரவு சுகமாகவும் நிம்மதியாகவும் உறங்குவதற்கு அது மிகவும் உதவும். ஏன், பெரியவர்களும் இரவு உடை (*Night Dress*) அணிவது நல்லதுதான். ஆனால், நாம் முக்கியமாகக் குழந்தைகளைக் கவனிக்கவேண்டும்!"

சிறிது மௌனத்திற்குப்பால் சரசு திடீரென்று கேட்டாள்: "என் கமலி, தடித்த நகைகள் அணிவது நாகரிகமா?"

கமலி புன்னகையுடன், "உடை விஷயத்தில் மட்டுமல்ல, நகை விஷயத்திலும் பண்டைய நாகரிகம் திரும்பியிருக்கிறதல்லவா? சிமிக்கி லோலக்கைப் பார்த்துக்கொள்! என் பாட்டி சிமிக்கி லோலக் அணிந்துகொண்டிருந்தாளாம். பிறகு, இடையே லோலக் அணிவது நின்றிருந்தது. மெள்ள மெள்ள மறுபடியும் கல் லோலக்குகள் தலை காட்ட ஆரம்பித்தன. அதைத் தொடர்ந்து சிமிக்கி...!" என்ருள்.

"ஆனல் இப்போது லோலக் அணிவது நாகரிகமே இல்லையாமே? 'ஸ்டட் (Stud) என்கிருர்களே, வெள்ளைக்காரிகள் அணியும் காதணி—அது தான் நாகரிகமாம்! காது மறைந்து போகும்படி பெரியதாகப் போட்டுக்கொள்கிருர்கள். என் பெண்கூட 'ஸ்டட்' தான் போட்டுக்கொள்வேன் என்று தொந்தரவு செய்ய ஆரம்பித்திருக்கிருள்!"

"ஆமாம்; என்னைக் கேட்டால் காதைத் துளைத்துப் பிய்த்துக் கம்மல் போடுவதை விட 'ஸ்டட்' போட்டுக்கொள்வதே நல்லதென்று சொல்வேன். நமது அவயவத்தை என் சித்திரவதை செய்யவேண்டும்? ஒரு சில பெண்கள் காது முழுவதுமே துளையிட்டு நகை போட்டுக்கொண்டிருப்பதைப் பார்க்கிருேமல்லவா? அது எத்தனை அநாகரிகமான செய்கை! மூக்கினடியே துளைத்துப் 'புல்லாக்கு' அணியும் அநாகரிகம் மறைந்துவிட்டது; எறக்குறைய இனிக் காதைத் துளைத்துக் கம்மல் அணியும் அநாகரிகமும் மறைந்தால் மிகவும் நல்லது. தங்கள் பெண் குழந்தைகளுக்கு இனியேனும் காது குத்தாமலிருக்கப் பெற்ருேர் கவனமெடுத்துக்கொள்ள வேண்டும். அது மட்டுமல்ல; 'லோலக்' அணிவதால் காதிற்குப் பாரமேற்படுகிறது. குழந்தைகளுக்கு 'லோலக்' அணிவது சுத்தப் பிசகு. ஆதலால் 'ஸ்டட்' போட்டுக்கொள்வதே மேலானது என்பது என் அபிப்பிராயம்!"

"அதுபோலவே கைகளில் தடித்த வளையல்கள் அணிவதை விட மெல்லியதாக ஓரிரண்டு வளையல்கள் அணிவதே மேலானது என்பது என் அபிப்பிராயம். சிலர் மிகவும் தடிப்பான சித்திரவேலை செய்துள்ள ஒரே வளையல் அணிவதைப் பார்க்கிருேமே, அது நன்ருகயிருக்கிறதா?"

"நம் சுசீலா அணிந்திருக்கிருளே அதைப்போலச் சொல்கிருயா? சிலருக்கு அது அழகாகத் தோன்றலாம். ஆனல் பணக்காரப் பெண்களால் தான் அம்மாதிரியெல்லாம் விசித்திர வளையல்கள் அணிய முடியுமா!"

"என், லீலா சொன்னபடி பித்தளையிலோ வெள்ளியிலோ செய்து தங்கம் பூசிவிட்டால் என்ன?"

"அவ்விதம் கஷ்டப்படுவானேன்? அதைவிடப் பேசாமல் மெல்லியதாக ஓரிரண்டு வளையல்கள் செய்து போட்டுக்கொண்டால் அழகாகவும் நாகரிகமாகவுமிருக்கும். தற்கால நாகரிக உலகம் நகை அணிவதைக் கண்டனம் செய்கிறதே"

"உண்மைதான். உதாரணமாக விஜயலட்சுமி பண்டிட், இந்திரா காந்தி இவர்களை எடுத்துக்கொள்ளலாமே. நாகரிக உலகத்தின் உச்சியில் நிற்பவர்கள்; பணத்திற்கும் சொகுசிற்கும் குறைவில்லைதான். ஆனல் நகை சூடிக்கொண்டா இருக்கிருர்கள்? நகை அணிவதேயில்லையே அவர்கள். கைக் கடிகாரம் மாத்திரம் கட்டிக்கொள்கின்றனர். அது ஒன்றே அவர்களுக்கு அழகாக இருக்கிறதே!"

"அதுதானடி நல்லது. நமது பெண்களுக்கு நகைப்பைத்தியம் குறையவேண்டும். நகை நகை என்று கணவன்மாரைத் துன்புறுத்தும் பெண்கள் நமது நாட்டில் எராளமிருக்கின்றனர். நகை அணிவதால் அழகு வந்துவிடப் போவதில்லை. நமது பெண்கள் முன்னேற வேண்டுமென்ருல், இந்த நகைப் பைத்தியத்தை அடியோடு விட்டொழிக்கவேண்டும். அதற்காகச் செலவழிக்கும் கணக்கற்ற பணத்தைக்கொண்டு வேறு எத்தனையோ

குடியானவன்: இந்த ஆட்டு மந்தையில் எத்தனை ஆடுகள் இருக்கின்றன, சொல்.

வந்தவன்: (ஒரு முறை மந்தையைப் பார்த்துவிட்டு) நூறு ஆடுகள்.

குடியானவன்: கச்சிதமாகச் சொல்லி விட்டாயே, எப்படி அவ்வளவு துல்லிதமாகச் சொல்ல முடிந்தது?

வந்தவன்: ஆட்டுக்களின் மொத்தக் கால்களை எண்ணி அதை நாலால் வகுத்து விட்டேன்........

நல்ல காரியங்களைச் செய்யலாம்... ஆனால் பெண்களுக்குக் கைக்கடிகாரம் மிகவும் அவசியமானது. கைக்கடிகாரம் அணிவதைப் பெருமையடித்துக்கொள்வது என்று நம் பெண்கள் ஒருபோதும் கருதக்கூடாது!"

கமலி புன்னகையோடு தலையசைத்தாள். அவளது கரங்கள் சட்டை தைப்பதில் மும்முரமாக இருந்தன.

அங்கே சிறிதுநேரம் மௌனம் நிலவியதால் சரசுவின் கவனம் அருகே உட்கார்ந்துகொண்டிருந்த லீலா, சுசீலா இவர்களின் உரையாடலில் சென்று பதிந்தது.

"தற்காலத்தில் 'பேஷன்' என்று தலைமயிரைத் தோள்ப்பட்டைவரைக் கத்தரித்துக்கொள்கிறார்களே, பெண்கள்—அதைப்பற்றி உன் அபிப்பிராயமென்ன?"—இது சுசீலாவின் கேள்வி. இவ்விடத்தில் சரசு தன்னைச் சுற்றிலும் நோக்கிக்கொண்டாள்; சங்கத்தில் யாரும் மயிரைக் கத்தரித்திருப்பதாகத் தோன்றவில்லை.

"வெள்ளைக்காரப் பெண்களைப் பின்பற்ற வேண்டுமென்று நினைக்கும் பெண்கள் அவ்வாறு கத்தரிக்கக் கூடும். ஆனால் நான் அதை ஆமோதிக்கவில்லை. பெண்களுக்கு அழகு கூந்தல். பண்டைக்காலத்திலிருந்தே கலைஞர்கள் பெண்களின் கூந்தலை விவரித்திருக்கும் அழகிய வாசகங்களைப் படித்திருப்பதில்லையா நாம்? 'கருமேகம்போல்'—'இருண்டடர்ந்த கூந்தலில் மின்னும் நீலவொளி'—'சாட்டையைப்போல் பின்னப்பட்ட கூந்தல்'—'கருநாகம்போல் தொங்கும் பின்னல் சடை'—இவை பின்னப்பட்ட கூந்தலை விவரிப்பதாகும். இதையெல்லாம் கேட்கும் காது குளிருமா, அல்லது தோள்ப்பட்டைவரை பரந்துகிடக்கும் தலைமயிர் என்பதைக் கேட்கும் காது குளிருமா? நீயே சொல்! பெண்களுக்கு அழகைத் தரும் நீண்ட கூந்தலை ஒருபோதும் கத்தரிக்கலாகாது. மங்கையர்கள் கூந்தலைப் பின்னிப் போடவேண்டும்; இரட்டைப் பின்னலாகவும் பின்னிக்கொள்ளலாம். கத்தரிப்பதை நாகரிகமென்று நான் சொல்லமாட்டேன்!"

"உண்மை, உண்மை! ஒரு பெண்ணின் கூந்தல் அடர்ந்து நீண்டு அழகாயிருப்பதைக் கண்டு வேறொரு பெண் பொறாமைப்படுவதினால், அப்பெண்ணிற்கு எவ்வளவு பெருமை

உண்டாயிருக்கிறது? இது உண்மையாக நடந்த சம்பவம். ஒரு காலேஜில் படித்துக் கொண்டிருந்த பெண்ணொருத்தி தனது கூந்தல் நீண்டிருப்பதால் மிகவும் பெருமையடித்துக் கொண்டிருந்தாளாம். வேறு சில வம்புக்காரிகளுக்கு அதனால் அவளிடம் கோபம்; பொருமை! ஒரு தினம் அந்த வம்புக்காரிகள் அந்தப் பெண் தூங்கிக்கொண்டிருக்கும் வேளையில் மெதுவாகச் சென்று அவள் கூந்தலை அப்படியே கத்தரித்துவிட்டார்களாம். அந்தப் பெண் பெரிய ரகளை உண்டுபண்ணிவிட்டாள். கடைசியில், கத்தரித்த பெண்களுக்குச் சிறைவாசம் கிடைத்ததாம். ஆனால் அவளுடைய போன கூந்தல் போனதுதானே?"

"ஆனால் சீக்கிரத்திலேயே மறுபடியும் கூந்தல் வளர்ந்திருக்குமல்லவா?"

"ஆமாம், அதில் என்ன சந்தேகம்!"

அவர்களது பேச்சை உற்சாகமாகக் கேட்டுக்கொண்டிருந்த சரசு இடையே புகுந்தாள்.

"கூந்தல் நீளமாக வளர்வதினால் பயனுமிருக்கிறது. ஒரு கிராமத்தில் ஒரு பெண்ணுக்குக் கூந்தல் மிகவும் நீளம்; அடர்த்தியும்கூட. அன்று அவள் உறங்கிக்கொண்டிருக்கையில் அவளது நீண்ட தலைமயிர் அழகாகப் பிரிந்து மேகம்போலப் பாவிக் கிடந்தது. அப்போது இரண்டு பாம்புகள் விளையாடியவண்ணமே அவள் சமீபம் வந்தவை அவளது நீண்ட தலைமயிரில் சிக்கிவிட்டனவாம்! சிக்கிக்கொண்டதினால் அவைகளுக்கு மீண்டும் வெளியேற முடியவில்லை. விழித்துக்கொண்ட பெண் அப்படியே அலறிவிட்டாள். அலறல் கேட்டு எழுந்து வந்த அவள் தந்தை கூந்தலை அப்படியே கத்தரித்துப் பாம்புகளைக் கொன்றுவிட்டார்.

டெலிவிஷனில் வாசனை

டெலிவிஷனில் என்ன பொருள்கள் காட்டப்படுகின்றனவோ அப்பொருளின் இயற்கை வாசனையையும் வெளிப்படுத்தக் கூடிய நூதன 'டெலிவிஷன்' செட்டுகள் இப்போது வெளிவர ஆரம்பித்திருக்கின்றன.

இந்த வாசனைகள் டெலிவிஷன் செட்டுகளில் வைக்கப்பட்டிருக்கின்றனவென்றும், அதன்மீது ஒளிக் கதிர்கள் விழும்போது அந்த வாசனை தானகவே வெளிக்கிளம்புவதாகவும் கூறப்படுகிறது.

நல்ல பாம்புகளாம்! அவள் கூந்தல் மட்டும் அடர்த்தியாயிருந்திராவிட்டால் அன்று அவள் உயிர் பிழைத்திருப்பாளா?"

"அழகான சம்பவம்! மயிரைக் கத்தரிக்கக் கூடாதென்பதற்கு நல்லதொரு சான்று...!" என்று சிரித்தாள் லீலா.

பெண்களுக்குத் தானும் ஒரு கதை சொல்வதற்கான தருணம் வாய்த்ததால் சரசுவிற்கு மகிழ்ச்சியாயிருந்தது.

"இந்த 'பேஷன்' நன்ருகயிருக்கிறதா அக்கா?" என்ற கமலியின் குரல் அவளைப் பின்திரும்ப வைத்தது. சரசு பார்த்தாள். கமலியின் கையிலிருந்த சிறு சட்டை அவள் கண்களைக் குளிர வைத்தது. தன்னை இச் சங்கத்தில் சேர்த்துவைக்கக் காரணமாயிருந்த பார்வதியை அப்போது அவள்மனதார வாழ்த்தினள்.

பழி

எஸ். ஆறுமுகம்

போனிபோஷியோ பகுதியின் சிறு குடில் ஒன்றில் பௌலோ சவேரியின் மனைவியான விதவை, தன் ஒரே மகனுடன் வசித்து வந்தாள். அண்மையிலிருந்த மலைமீது அந் நகரம் அமைக்கப் பட்டிருந்தது. அதனடியில், மறு பக்கத்திலும் அதன் சுற்றுச்சார்பிலுமாக மலை விளிம்பு எங்கும் ஓடியிருந்தது. அதன் கீழ் கடலின் எல்லைப்பகுதி ஏறக்குறைய ஒரு துறைமுகம்போன்று காணப்பட்டது. வெண்ணிற மலைகளில் ஒரு சில குடிசைகள் இருந்தன. அவை காட்டுப் பறவைகளின் கூண்டுகள்போலத் தோன்றின. அவை பறவையுடன் பிணைந்திருந்தன. இப் பகுதிக்குச் சாதாரணமாகக் கப்பல்கள் வரத் துணிவதில்லை.

அந்தக் கிழவியின் வீடு மலை விளிம்பின் ஓரத்தில் இருந்தது; அதன் மூன்று ஜன்னல்களும் பாழ்வெளியாகக் கிடந்த அடிவானத்தை நோக்கியவாறு திறந்துகிடந்தன.

அவள் தனிமையாகத் தன் மகன ஆண்டனுடன் வசித்து வந்தாள். அவளுடன் கூடச் செமிலான் என்ற நாயும் இருந்தது; அந்த இளைஞனுக்கு அது வேட்டைக்கு உதவியது.

ஒரு நாள் மாலை, நீண்ட நேரப் போராட்டத்தின் பின் ஆண்டன், நிகோலஸ் என்பவனால் கத்தியால் கொல்லப்பட்டு இறந்து போனான். கொலைகாரன் அன்றிரவே சார்டினாவிற்குப் பறந்துவிட்டான்.

யாரோ வழிப்போக்கன் கொண்டுவந்த தன் மகனின் பிரேதத்தைக் கண்ட கிழவி அழவில்லை; ஆனால் நீண்ட நேரம் சலனம் எதுவுமின்றி அப்படியே இருந்தாள், தன் புதல்வனையே பார்த்தவளாக. பிறகு, இறந்த உடல்மீது தன் நலிந்த கைகளைப் பரப்பிப் பழிக்குப் பழி வாங்குவதாக உறுதி பூண்டாள. அவளுடன் யாரும் இருப்பதை விரும்பவில்லை அவள. பிரேதத்துடனும் நாயுடனும் சேர்த்து வீட்டின் கதவை மூடிக்கொண்டாள்.

நாய் அலறியது; ஊளையிட்டது. கிழவி அலறினாள்; அழுதாள். தன் மகனின் மாண்ட மேனியையே பார்த்தவாறிருந்த அவளுடைய கண்களிலிருந்து கண்ணீர் வழ்ந்தோடியது.

அந்த இளைஞனது உடலில் பழுப்புநிற அங்கி போர்த்தப் பட்டிருந்தது அது அங்கங்கே தாறுமாறாகக் கிழிந்திருந்தது; அவன் நெஞ்சு, முகம், கை பூராவும் ரத்தக்காடாகக் காட்சியளித்

தன. அவன் துயில்கொண் டிருப்பவன்மாதிரி தோன்றி ஞன்.

வயதுசென்ற அவன் தாய் மாண்ட அவனுடன் பேசத் துவங்கினுள். அவள் குரலைக் கேட்டதும், நாய் அமைதி பெற் றது.

"அருமை மகனே, உன்னைப் பழி வாங்கியதற்கு நான் பழிக் குப் பழி வாங்கிவிடுகிறேன் அவனை. தூங்கு. நன்ருகத் தூங்கு. வஞ்சத்திற்கு வஞ்சம்! ரத்தத்திற்கு ரத்தம்! என் சொற்கள் உன் காதில் விழு கின்றனவல்லவா? உறுதி முழக்குபவள் உன்னை ஈன்றவள். அவள் தன் வார்த்தைகளைக் காப் பாற்றுவாள். மகனே கேட்கி றதா......"

அவள் வளைந்து, அவளது குளிர்ந்த உதடுகளை அவனது மடிந்த வாயில் பொருத்தி முத்த மிட்டாள். மறுபடியும் அவள் விம்மினுள். நாயும் குலைத்தது. மறுநாள் விடியும்வரை அங்கே தான் கிழவி, அவளது இறந்த மகன், நாய் மூவரும் இருந்தனர்.

அடுத்த நாள் ஆண்டனின் உடல் தகனம் செய்யப்பட்டது. அப்புறம் அவனைப்பற்றி யாருமே பேசவில்லை.

அவனுக்கு அண்ணன், தம்பி கிடையாது. வேறு உறவினரும் இல்லை. பழிக்குப் பழி வாங்க அங்கு யாருமே இருக்கவில்லை. அவன் தாய்—அந்தக் கிழவி மட் டுமே பழிவாங்குவதைப்பற்றிச் சிந்தித்தவாறிருந்தாள்.

குறுக்குவழிப் பாதையில் நின்றுகொண்டு, ஒவ்வொருநாள் காலையிலும் மாலையிலும் கடற் கரையில் ஒரு வெள்ளைப் புள்ளி யொன்றைக் கவனித்து வந்தாள் கிழவி. அது சார்டின் கிராமம். கார்ஸிகன் கொள்ளைக்காரர்கள் எதிரிகளால் துரத்தப்பட்டால் அடைக்கலம் பெறும் ரகசிய இடம் அது. அங்குதான் நிகோலஸ் — தன் மகனைக் கொன்ற பழிகாரன் அடைக்கல மடைந்திருப்பதாக அவள் கேள் விப்பட்டிருந்தாள்.

தனியாக நாள் முழுதும் சன் னலின் முன் வீற்றிருந்த அந்தக் கிழவி, தன் சபதத்தை — பழி யைப் பற்றியேதான் சிந்தித்த வாறிருந்தாள். வயதான அவள் பிறரின் உதவியின்றி எப்படிப் பழிவாங்கப் போகிறுளோ? ஆனுல் அவள் உறுதி செய்து விட்டாள்—அதுவும் அவளது செத்துப்போன மகனின் சவத் தின்மீது ஆணையிட்டு. அவ ளால் அதை மறக்க முடியாது. தாமதமும் செய்யமாட்டாள். எப்படி நிறைவேற்ற முடியும் தன் ஆணையை? இரவில் அவள் உறங்கவில்லை. ஓய்வில்லாத மன உளைச்சல் அவளுக்கு. 'பழி' 'பழி!' என்று புலம்பினுள் அவள். நாய் அவள் பாதத்தடி யில் தூங்கிற்று. சில சமயம் தலையை உயர்த்திப் பலமாகக் குரைத்தது, யாரையோ அழைப்பது போல.

ஓரிரவு, இவ்வழியில் அந்த நாய் ஊளையிட ஆரம்பித்தது. உடனே கிழவிக்கு ஒரு எண்

ணம்—மிருகத்தனமான, பயங்கரமான, ரத்தவெறிகொண்ட எண்ணம் மின்வெட்டியது. காலை வரை அவள் அதைப் பற்றியே யோசித்தாள். விடிந்ததும், எழுந்து மாதாகோயிலுக்குச் சென்ருள். கடவுளின்முன் மண்டியிட்டுப் பிரார்த்தித்தாள், தனக்கு உதவுமாறு, தன்னைக் காக்கும்படி, தன் மகனைப் பழி வாங்கிய கொலைகாரனைப் பழிக்குப் பழி வாங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென.

அவள் திரும்பினுள். அவளிடம் பழைய பீப்பாய் ஒன்று மூடியுடன் இருந்தது. அதைக் காலி செய்துவிட்டுக் கவிழ்த்து வைத்தாள். அதனுள் அவள் நாயை மூடிவிட்டு, வீட்டுக்குப் போய்விட்டாள்.

அவள் வீட்டில் முன்னும் பின்னும் நடந்தாள். அவள் பார்வை சார்டீனியாக் கடற்கரைமீது நிலைத்திருந்தது. அவன்—அந்தக் கொலைகாரன் அங்குதான் இருந்தான்!

அந்த நாய் இரவும் பகலும் ஓயாமல் ஒழியாமல் குரைத்தது. காலையில் கிழவி அதற்குக் கொஞ்சம் தண்ணீர் மாத்திரம் கொடுத்தாள். வேறு ரொட்டி, உணவு எதுவுமில்லை.

நாட்கள் நழுவின. நாய் இளைத்தது; உணவில்லை; உறக்கமில்லை. அடுத்தநாள் கிழவியின் கண்களில் ஒளிபிறந்தது; நாயின் சங்கிலியைப் பிடித்துக்கொண்டாள். நாய் பார்க்கப் பயங்கரமாகக்காட்சி

யளித்தது; கொடூரமாகக் குரைத்தது. பகலில் அவள் பக்கத்து வீட்டுக்குச்சென்றுஇரண்டுகட்டு வைக்கோல் வாங்கினுள். பழைய துணிகளைக்கொண்டு வைக்கோலேத் திணித்து மனித உருவமொன்றைச் செய்தாள். அந்த உருவத்தை நிற்பதுபோலச் செய்து, அதன்முன் நாயைப் பிடித்து நிறுத்தினுள். நாய் வைக்கோல் மனித உருவத்தைக்கண்டு முதலில் சும்மாயிருந்தது. கொதித்தெழும் பசியுடன். கிழவி கடைக்குச் சென்று பெரிய மாமிசத்துண்டொன்றை வாங்கிவந்துஅதை அவ்வுருவத்தின் வாயில் திணித்தாள். நாயின் விழிகள் மாமிசத் துண்டின்மீது பதிந்தன. வரவர அதன் ஆத்திரம் மூண்டு பொங்கியது. பிறகு அவள் நாயை அவிழ்த்து விட்டாள்.

ஒரே பாய்ச்சலில் தாவிய நாய் அந்த உருவத்தின் தொண்டையைப் பிடித்துக் கிழிக்க ஆரம்பித்தது. அதன் கூரிய நகங்கள் அதன் தோள்களைப் பிராண்டின. அதனைத் துண்டுதுண்டாக்கியது. நாய் கீழே குதித்தது, வாயில் மாமிசத் துண்டத்துடன். மறுபடியும் மறுபடியும் அவ்வுருவத்தைச் சின்னுபின்னப்படுத்திச் சிதைத்தது நாய்.

கிழவிமௌனமானுள். அவள் கண்களில் ஒளி ஏறிற்று. மறுபடியும் நாயை அவள் சங்கிலியில் பிணைத்தாள். திரும்பவும் அதை இரண்டு நாட்கள் பட்டினிபோடலானுள். நாயின் வெறி வளர்ந்தது. இம்மாதிரி மூன்று மாதங்கள் நடந்தது, நாயின் ஆத்திரத்தையும் ரோசத்தையும் வளர்த்துத்

தன் வெற்றியை — பழியை அதன் மூலம் காணும் நோக்கிலே. அவள் இப்போது நாய்க்கு அந்த மனிதனைக் கிழித் தெறிய, அவன் உயிரைக் குடிக் கக் கற்றுக்கொடுத்துவிட்டாள். அவள் பழி வாங்கிவிட்டால், அந்த நாய்க்கென உணவு வகை யில் பலப்பல செய்துவைத்திருந் தாள். பொம்மை உருவத்தை அவள் பார்க்கும்தருணமெல் லாம் கூடவும் நாயும் சேர்ந்து குலைத்தது.

தன் ஆணை நிறைவேறும் சம யம் வந்துவிட்டதெனத் தீர்மா னித்த அக் கிழவி, அன்று காலை யில் மதப்பிரார்த்தனைக்குப் பின் ஆண் உடையுடன் தளர்ந்து போய்ப் புறப்பட்டாள். அவளை யும் அவளது நாயையும் ஒரு செம்படவன் கூட்டிச்சென் ருன் அடுத்த கரைக்கு. அவ ளது பையில் நாய்க்கென மாமி சத் துண்டுகள் சமைத்து வைக் கப்பட்டிருந்தன. ஒவ்வொரு கணமும் மாமிசத்தின் வாச னையை நாய் நுகரச்செய்து அதை உற்சாகப்படுத்தினுள்.

அவர்கள் லாங்கோசார்டோ வுக்குள் நுழைந்தனர். செம்பட வன் பிராந்திக்கடைக்குள் நுழைந்தான். அங்கிருந்த கடைக்காரனின்முன் சென்ற அவள் நிகோலஸ் வசிக்கும் இடத்தைக் கேட்டாள். அவன் தச்சுப்பட்டறையின் பின் பக்கம் வேலை செய்துகொண் டிருப்பதாக அறிந்தாள்.

கிழவி கதவைத் திறந்து "ஏய், நிகோலஸ்" என்று விளித்தாள்.

வந்த அவன் சுற்றுமுற்றும் பார்த்தான்.

கிழவி பொங்கும் ஆத்திரத் துடன் நாயின் சங்கிலியை அவிழ்த்துவிட்டு, "ஓடு, அவ னைப் பிடித்து அவன் உயிரைக் குடி...ஊம்... பழி! பழிக்குப் பழி! ஊம்...ஓடு..." என்று ஓல மிட்டாள்.

நாய் வெறி கிளர்ந்தெழ ஒரே பாய்ச்சலாக அந்தக் கொலைகாரன் மீது தாவி அவன் குரல்வளை யைப் பிடித்துக் கிழித்தது. சில கணம் அவன் அப்படியே தரை யில் சுழன்ருன், மண்மீது தன் பாதங்களைச் சேர்த்தவண்ணம். சற்றைக்கெல்லாம் அவன் அமைதி பெற்ருன் ஆடா மல் அசையாமல். அவன் கழுத் தருகே பெரிய குழியைத் தோண் டிற்று நாய். மறுகணம் நாய்க்கு மாமிச விருந்து கொடுத்தாள் அதன் எஜமானி.

அன்றைக்குத்தான் கிழவி அமைதியாகத் தூங்கினுள்!

[மூலம்: மாப்பஸான்]

பேசும் சித்திரம்

பி. எஸ். ராமகிருஷ்ணன்

இயற்கையின் உருவை அழகுறத் தீட்டி உலகைப் போர்வையிட்டிருந்த பசுமைத் திரையை விலக்கி, கரும்புகையைக் கக்கியவாறு வந்துகொண்டிருந்தது, 'திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ்' திருச்சியை நோக்கி.

நீண்ட நேரத்திற்குப் பின் மெல்லத் தலையை நிமிர்த்தினர் ராமசாமி. தாங்கமுடியாத பெரும்பளு தன் தலைமீது சுமத்தப்பட்டிருப்பது போன்ற வேதனை அவர் உள்ளத்தில் பரவியது. அவர் பெருமூச்சு விட்டார்.

காலையில் வீட்டைவிட்டு ரயிலுக்குப் புறப்பட்ட சமயம் நடந்த சம்பவம் அவர் கண்முன் தோன்றியது.

அவர் மனைவி சாகக்கிடந்தாள் மரணப் படுக்கையில். கண்ணை மூடுவதற்குள் தன் மகள் சாந்தாவை ஒரு முறையாகிலும் கண்டுவிட வேண்டுமென்று அவள் துடித்தாள்; பிதற்றினள். பெற்றவளாயிற்றே!

"சாந்தா வந்திட்டாளா, கமலா" என்றாள் அவள்.

"இல்லை, அம்மா. அப்பா போய், அத்தானிடம் சொல்லி அக்கா சாந்தாவைக் கட்டாயம் காலைக்குக் கூட்டிக்கிட்டு வந்திடுவாங்க. அலட்டிக்காமத் தூங்கு அம்மா..." என்றாள் சிறுமி.

"நெசமாவா...என் மகளை இவ்வளவு வருஷத்துக்கு அப்புறமேனும் கண்ணாலே கண்டிடுவேனா...!" என்று அவள் மகிழ்ச்சிப் பெருக்கில் அங்கலாய்த்தாள்.

"அப்பா, சாந்தாவைப் பார்க்க வேண்டுமென்னும் அம்மாவின் ஆசை அளவுக்கு மீறிவிட்டது. அவளும் காலதேவனோடு போராடிக்கொண்டிருக்கிறாள். எப்படியாவது சாந்தாவைக் கூட்டிவந்து அம்மா கண்ணிலே பட்டாத்தான் அவள் சாந்தியுடன் இறப்பாள்..." என்று சொன்னாள் அவர் குமாரி.

"உண்மைதான். அன்றாடப் பிழைப்புக்கே அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் நான் தங்க வளையலுக்கு எங்கே போவேன்? வேண்டிய ஒருவரைப் போய்ப் பார்த்துச் சொல்லி இருநூறு ரூபாய் கேட்டு வாங்கி வளையல்களுடன் தான் மாப்பிள்ளையைப் பார்த்துச் சாந்தாவை அழைத்துப் போக உத்தரவு பெற முடியும்......நான் உன் தாயின் கடைசி ஆசையை நிறைவேற்றத் தவறவில்லை. சாந்தாவின் இன்பத்தைக் கெடுத்து, கிழத்தாயின் அன்புப்பார்வைக்குக் கூட இலக்காகாமல்செய்த அதே ஆடிப் பெருக்கு நாளைபதினம். அதற்கு

எப்படியும் சாந்தாவை அழைத்து வந்து விடுகிறேன். அம்மாவைப் பார்த்துக் கொள், கமலா...''

ஓடும் ரயிலில் துயரமே வடிவாக ஏதோ ஓர் மூலையில் உட்கார்ந்திருந்த ராமசாமி முதலியாரின் நெஞ்சலைகள் இப்படி ஓடின. பிறகு, கடந்த சில ஆண்டுகட்கு முன் சாந்தாவின் தங்க வளையல்கள் காணாமற்போன அந்த ஆடிப்பெருக்கைத் தொட்டு நின்றது அவர் சிந்தை.

சாந்தாவிற்குக் கல்யாணமானதும் முதல்பண்டிகை அந்த ஆடிப் பண்டிகைதான். குதூகலம்நிறைந்திருந்தது. காவேரி ஆற்றில் புதுவெள்ளம்; ஏராளமான ஜனத்திரள். காவேரி அன்னை 'காதோலை, கருகுமணி'யால் அலங்கரிக்கப்பட்டிருந்தாள். அந்தக் குதூகலத் திருநாளில்தான் சாந்தாவின் ஜோடி தங்கவளையல்கள் தவறி விட்டன. ஆனால் அதன் விளைவு...? சாந்தாவைக் கைபிடித்த கணவன் கெட்டுப்போகிய, தங்கவளையல்களுக்கு ஈடாகப் புதுஜோடி ஒன்று செய்து போட்டால்தான் திரும்பவும் சாந்தாவை அவள் பெற்றோர்கள் காணமுடியும் என்று தீர்மானமாகக் கூறிவிட்டான்...! இந்தச் சம்பவம் அவளது இன்பவாழ்க்கைப் படகை எதிர்பாராத புயல் தாக்குவது போன்றிருந்தது.

அதற்குப் பிறகு ஆண்டுகள் சில ஓடிவிட்டன.

ராமசாமி முதலியாரால் சாந்தாவைக் காணக்கூட முடியாது போயிற்று. காரணம், தங்கவளையல் போட்டுத் தன் மகளைக் காணும் நிலையில் அவர் கையில் பணம் இல்லை. வறுமையில் உழன்றார். ஆனால் அவரும் ஒருகாலத்தில் அந்த ஊர்ப் பணக்காரர்களுள் ஒருவராகத் திகழ்ந்தவரே. காலம் யாரை விட்டது? அவர் ஆண்டியானார்.

மனைவியிடம் எப்படியும் மகளை அழைத்து வந்து விடுவதாக உறுதிசொல்லிப் புறப்பட்ட முதலியார், கேட்டிருந்த இடத்தில் கிடைத்த பணத்தைக் கொண்டு 'சேட்' கடையில் முன்னதுபோலச் சாந்தாவுக்கு தங்கவளையல் இரண்டு வாங்கிப் பையில் வைத்துக்கொண்டு ரயிலுக்குப் புறப்பட்டார். அவர்

மனம் துள்ளிக் குதித்தது. தன் உயிர் மகளைக் காணப் போகிறு ரல்லவா—அதுவும் பலப்பல மாதங்கள் சென்று! அத்தோடு தன் ஆசை மனைவியின் ஆசைக் கனவையும் நிறைவேற்றச் சாந்தாவை அவளிடம் காட்டப் போகிறுரல்லவா?

★

வளைந்து வளைந்து புதர்களுக்கிடையில் பாம்புபோல் நெளிந்து நீண்டு கொண்டிருந்த இரும்புப் பாதையில் தன் சகாக்களை இழுத்துக்கொண்டு அரியலூர் ஸ்டேஷனில் வந்து நின்றது 'இண்டோ சிலோன் எக்ஸ்பிரஸ்.'

ஏதோ பயங்கரக் கனவு கண்டவர்போலத் திடுக்கிட்டு விழித்தார் ராமசாமி முதலியார். கண்களில் துளிர்த்திருந்த கண்ணீரைத் துடைத்துவிட்ட வண்ணம் பையைத் துழாவினர். மறுகணம் அவர் உள்ளம், உடல் எல்லாம் நடுங்கியது. அவர் பையிலிருந்த தங்கவளையல்களைக் காணவில்லை.

"எங்கே என் தங்கவளையல்?" என்று அலறினர்; கதறினர். வினடிக்கு வினடி வெளுப்பேறியது அவர் முகம். உடல் தடதடவென ஆடியது. காற்றடித்த பந்தின்மேல் ஏறி நின்றுல் எப்படி உருட்டிக்கீழே தள்ளப்படுமோ, அவ்விதம் அவர் சித்தம்உருட்டித்தள்ளப்பட்டது

"எங்கே என் வளையல்கள்? என் சாந்தாவிற்கென வைத்திருந்த வளையல்கள் எங்கே... அப்படியென்றுல் வளையல் இல்லாது என் மகளை மரணப்படுக்கையில் உழலும் அவள் தாய் கடைசி முறையாகக் கூடக்காண முடியாதா?"

வெறிபிடித்தவராகப் புலம்பினர் அவர்.

"கொள்ளை அடிச்ச சொத்து கொள்ளையாகவே போயிடுச்சு"

எதிரொலித்த சொற்கள் அவர் இதயத்தைப் பிளந்தன. அவர் மனச்சாட்சி சிரித்தது!

உள்ளத்திலே நிறைந்திருந்த அச்சம் அவருடைய உடலை வேர்வைத் துளிகளால் நனைத்தது. ரத்தக் குழாய்களுள் தேங்கின உதிரமெல்லாம் உறைந்துவிட்டது போன்ற உணர்வு பரவியது. யாரோ பயங்கர மனிதன் தன் குரல்வளையைப் பிடிப்பது

போன்ற அச்சம் அவரை ஆட்டிப் படைத்தது.

அடுத்த வினடி...!

காற்றில் மிதக்கும் சருகு போல ராமசாமி முதலியார் தன மகள் வீட்டை நோக்கி விரைந்தார் பைத்தியம் போன்று.

கருகிய விழிகளின் ஓரத்தில் வடிந்த கண்ணீரைத் துடைக்கக்கூட நினைவிழந்து "சாந்தா... சாந்தா!" என்றார் முதலியார்.

உள்ளிருந்து சாந்தா வரவில்லை. பதிலாக அவள் கணவன் ஜெயராமன் வந்தான். அவன் கண்கள் முதலியாரைச் சுற்றிச் சுழன்றன.

"ஓ...மாமாவா?"

"ஆம்; சாந்தா எங்கே?

"இருக்கிறாள்; சாகவில்லை. எங்கே தங்க வளையல்கள்?"

மாப்பிள்ளை கேட்ட கேள்வி ராமசாமியைத் தடுமாறச் செய்தது. தங்க வளையல்களுக்கு இனி அவர் எங்கே போவார், பாவம்?

அவர் பார்வை அருகில் வேடிக்கை பார்த்துநின்ற ஒரு சிறுமி மீது படர்ந்தது. அடுத்த நிமிஷம் திரும்பவும் அவர் உள்ளம் அதிர்ச்சியடைந்தது.

'பொன்னன் மகளாயிற்றே இந்தப் பெண்...பொன்னன்...' என்று அவர் உதடுகள் முணுமுணுத்தன.

அதே சமயம் அவர் மனச்சாட்சி திரும்பவும் சிரித்தது; கைகொட்டிச் சிரித்தது!

'கொள்ளையடிச்ச பணம் கொள்ளையாவே போயிடுச்சு'— திரும்பவும் முன்போலக் குரல்கள் எதிரொலித்தன.

முதலியார் அழுதார்.

கடந்த பழைய சம்பவம் அவர் மனக்கண்முன் தோன்றியது.

அப்பொழுது ரொக்கக் கடை வைத்துப் பணத்தை வட்டிக்குக் கொடுத்து வந்தார் ராமசாமி முதலியார். அவரிடத்தில்தான் பொன்னனும் கடன் வாங்கியிருந்தான். குறித்த கெடுவில் அவன் வாங்கிய கடனை அடைக்க முடியவில்லை.

"கடனை அடைத்துவிட்டு மறுவேலை பார். இல்லையென்றால் உன் மனைவி, மக்களையெல்லாம் நடுத்தெருவிலே சந்தி சிரிக்கப் பண்ணிடுவேன், பொன்னு... அப்புறம் நீ கம்பி எண்ணத்தான் போகணும்..." என்று எரிந்து விழுந்தார் முதலியார்.

எவ்வளவோ சொல்லிப் பார்த்தான் பொன்னன் முதலியாரிடம். கெஞ்சினன்; கூத்தாடினன். பலனில்லை.

"பணமில்லை என்றால் உன் பெண்சாதி தாலியை விற்றுக் கடனைக் கட்டு......" என்றார் அவர்.

"இந்தா தாலி...உன் கடனுக்கு..." என்று அன்று மாலை அவரிடம் வீசி யெறிந்தான் பொன்னன் தன் மனைவியின் தாலியை—தான் கட்டிய தாலியை! மறுகணம், அவன் உருவிய கத்தியுடன் நின்றான்

அவர்முன். முதலியாருக்குக் கும்பி நடுங்கியது. ஆனால், அடுத்தவினாடி அங்கு தோன்றிய போலீஸ் கையில் சரண் புகுந்தான் பொன்னன். அவனுக்குச் சிறைத் தண்டனை கிடைத்தது.

"அன்று நீ பொன்னனுக்குச் செய்த துரோகத்திற்குப் பலனாக, உன் மகள் இன்று தண்டனை அனுபவிக்கிறாள் தெரிகிறதா... வினை விதைத்தவன் வினை அறுத்துத்தான் ஆகவேணும்......" என்று சித்திரவதை செய்தது அவரின் இதய சாட்சி.

"தங்க வளையல் எங்கே?"

திரும்பவும் முதலியார் பிதற்றத் தொடங்கிவிட்டார்.

★

மாலை பறவைகள் கூட்டில் அடையும் தருணம். செவ்வானத்தின் அழகிய ஒளி விதவிதமான வர்ணக்கோலங்களை இழைத்துக்கொண்டிருந்தது. கதிரவனின் ஒளியை மறைக்கும் மேகப்படலத்தை விழித்து நோக்கியவாறு அமர்ந்திருந்த சாந்தாவிற்கு அழுகையும் ஆத்திரமும் முட்டி மோதியது. காலையில் கண்ட தன் தந்தையின் கோலம் அவளை அப்படிச் செய்தது. அவள் பெண் நெஞ்சம், இரக்கமற்ற தன் பதியின்பேரில் தாவி ஆத்திரமுற்றது, பணத்தில் புரண்ட தன் தந்தை தற்சமயம் சீரழியும் கதியை எண்ணி. முன்னர் தான் காணமலடித்துவிட்ட வளையல்களுக்கு ஈடு இன்று செய்துவந்தும், அது மீண்டும் காணமல் போய்விட்டதறிந்து, சாந்தா துடிதுடித்தாள்.

தன் தந்தை வாசலில் வெளிறிய முகத்துடன் நின்றுகொண்டிருப்பதைக் கண்ட சாந்தா "அப்பா" என்று விளித்துக்கொண்டு ஓடினாள்.

"சாந்தா" என்று அவர் தன் மகளை அழைத்த சமயம், அங்கு சாந்தாவின் கணவன் ஜெயராமன் கோபம் குமுற நின்றுகொண்டிருந்தான்.

"வளையல்களை முதலில் கொடும்; அப்புறம் சாந்தாவை அழைக்கலாம்" என்று ஜெயராமன் கூச்சலிட்டான்.

திகைத்துப்போய், மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் சாந்தா கண்ணீர் வழிய நின்றாள்.

வழி நெடுக நடந்தார் முதலியார், இவ்வுலக சிந்தனையே அற்றவர்போல.

அன்று மாலை சாந்தாவிற்கு அவள் தந்தை ராமசாமி முதலியார் ஒரு கடிதம் எழுதியிருந்தார். ஜெயராமன் அதைக் காண நேரிட்டது

"அன்புள்ள சாந்தா,

என் உள்ளத்தில் உறங்கிக் கிடக்கும் ஒரு பயங்கர உண்மையை எனது இந்த இறுதி நேரக் கடிதத்தில் தெரிவிக்கிறேன். உன் தாய் சாகக்கிடக்கிறாள்; உன்னைக் காணத் துடித்தாள். அவளைத் திருப்திப்படுத்த உன்னை அழைத்துப்போகப் படாத பாடுபட்டு

வளையல் வாங்கப் பணத்திற்கு ஏற்பாடு செய்து வளையல்கள் வாங்கி வந்தும், அவை எப்படியோ திருடப்பட்டு விட்டன. குடியிருக்கும் வீட்டை அடகு வைத்துப் பெற்ற பணம் உனக்கு வளையல் வாங்க உதவியது. ஆனால் அவையும் போய்விட்டனவே! உன்னைப் பார்க்க உன் அன்னை உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு அங்கே துடித்துக்கொண்டிருப்பாள். சாந்தா, எப்படியாவது உன் முகத்தைஉன் அம்மாவிடம் காட்டி விடு. அப்பொழுது தான் அவள் நிம்மதியாக இறப்பாள். என்னால் இனி யாருக்கும் பயன் கிடையாது. நான் செய்த பாவத்திற்குத் தண்டனை அனுபவிக்கிறேன். மதிப்பிட முடியாத என் சொத்துப் போய் ஆண்டியாகி நிற்கிறேன். என் மகளை அவள் தாயிடம் அழைத்துப் போக இரண்டாம் தடவை செய்துகொண்டு வந்த தங்க வளையல் ஒரு ஜோடியும்காணுமல் போய் விட்டன......இதைவிட வேறு என்ன சோதனை வேண்டும்? பொன்னு, என்னை மன்னித்துக்கொள்......நீ என்றைக்கு விடுதலை பெற்றாய்... என்னை மன்னிப்பாயா?" என்று தேம்பினார் அவர்.



"எசமான், நீங்க தான் என்னை மன்னிக்கணும். கண் கலங்காதீங்க. உங்க மகளை நீங்க இப்பவே அழைச்சிட்டுப் போய் அவங்க அம்மாகிட்டே காட்டலாம். உங்க காணுமற்போன வளையல் ரெண்டும் இதோ பாருங்க. அன்னிக்கு நீங்க எனக்குச் செஞ்ச வஞ்சனைக்கு நான் பழி வாங்க நேத்தி ரயிலிலே நீங்க தூங்கின சமயம் பார்த்து வளையலைத் திருடினேன். ஆனு, அடுத்த நாள் உங்க மகள் வீட்டிலே நடந்த ரகளையைப் பார்த்ததும் என் மனசு மாறியிருச்சு. ஓடியாந்தேன், உங்ககிட்டச் சொல்லி மன்னிப்பு வாங்க...!" என்று விம்மினுன் பொன்னன்.

மெய்மறந்து நின்றார் முதலியார்.

ராமசாமி முதலியார்."

ஜெயராமனுக்கு அப்போது தான் கண்கள் திறந்தன. அவன் வைராக்கியம் மடிந்தது. மன்னிப்புக் கேட்க முதலியாரிடம் ஜெயராமன் ஓடினுன்.

அப்பொழுது முதலியாரை நோக்கிப் பொன்னன் ஓடிவந்தான்.

"பொன்னு...அன்று உனக்கு நான் செய்த தீவினைக்கு இன்று நல்ல தண்டனை அனுபவிக்கிறேன்.

"மாமா......"

திரும்பினர்.

"ஆ, மாப்பிள்ளையா?"

"ஆம்; வீணில் உங்களை அதிகத் தொந்தரவிற்குள்ளாக்கி விட்டேன், என் இளம் நெஞ்சத்து வைராக்கியத்தால். தயவு செய்து என்னை மன்னிப்பீர்களா? சாந்தா தன் அம்மாவைப் பார்க்க யாருக்கும் தெரியாமல் புறப்பட்டுக்கொண்டிருந்த நேரத்தில், அவளுக்கு நீங்கள் எழுதிய கடிதம் என் கண்களைத் திறந்துவிட்டது. பாசமும் பிணைப்பும் எத்தகைய சக்தி பெற்றனவென்பதை இதுவரை அறியாது போய்விட்டேன்... அதோ, சாந்தா..." என்முன் ஜெயராமன் புது மகிழ்ச்சியுடன்.

மெல்லிய புன்சிரிப்பில் சாந்தாவின் அழகுக் கன்னங்கள் ஆனந்தமாகக் குழிந்தன. அவள் பேசும் சித்திரம்! அவளைப் புது வாழ்வு வரவேற்றது; அவள் பூங்கரங்களில் அந்த ஜோடித் தங்கவளையல்கள் கலகலவெனக் குலுங்கி இன்பப் பண் பாடின.

துன்பத்தின் திரையை விலக்கி, திருச்சியின் எல்லைக் கோட்டை மிதித்துக்கொண்டிருந்தது 'இண்டோ சிலோன் எக்ஸ்பிரஸ்!'

புதிய சுவைமிக்க இலக்கிய விருந்து

★

நினைவுச் சின்னம்	இளமைப்பித்தன்	1—0—0
கடல் முத்து	எஸ். ஆறுமுகம்	1—0—0
உலக அரங்கில்	டி. கே. சீனிவாசன்	1—0—0
தபாலாபீஸ் விநோதங்கள்	க. சண்முகசுந்தரம்	0—8—0
இலக்கியச் சந்தையில்	மு. அண்ணமலை	0—8—0
கம்பன் கெடுத்த காவியம்	,,	0—4—0
வீடும் விளக்கும்	சுகி	0—8—0
தாஜ்மஹால்	கா. பாண்டுரங்கன்	0—8—0
கொடி முல்லை	வாணிதாசன்	0–12—0
வருங்காலத் தமிழகம்	கா. அப்பாத்துரை	0–12—0
இந்திய மொழிச் சிக்கல்	,,	2—8—0
கழைக்கூத்தியின் காதல்	பாரதிதாசன்	1—0—0

பொன்னி லிமிடெட்

த. பெ. எண். 1165 :: சென்னை–21.

மலையிடைப் பிறந்தாய் ; முல்லைப்
பூவிடை வளர்ந்தாய் ; நன்செய்
தலையிடைப் புணர்ந்தாய் ; தண்ணென்
கடலிடை முத்தம் ஈந்தாய் ;
கொலையிடை மிகும்வெம் பாலை
மணலிடைக் குளிரும் சேர்த்தாய்;
அலைகடல் முகிலே! உன் போல்
விரிமனம் அடைதல் என்றே !

தென்றலுக் குயிர் நீ! முல்லைச்
சிறுசெடிக் குயிர் நீ! வான
மன்றிலே திகழும் திங்கள்
ஞாயிறுக் குயிர் நீ! மக்கள்
ஒன்றிய வாழ்வும் நீயே !
உரிப்பொருள் நீயே! இன்பம்
குன்றிடா வளமும் நீயே
குடிக்குயிர் நீயே வாழி !

மங்கையர்க் கழகு செய்யும்
வார்குழல் மானும் என்றே
இளங்குள புலவரெல்லாம்
இயம்புவர் ; முகிலில் பூக்கள்
தங்குமோ ? எருமைக் கொம்புச்
சடைகளைக் காணப் போமோ !
பொங்கிய நறுநெய் பூசி
ஊசிகள் புனைதல் உண்டோ ?

தூக்கிய கூடா ரத்துத்
துணிகளின் கிழிச்சல் வானம்
தேக்கிய வெண்மு கில்கள் !
அந்தியில் செந்தீக் காடாம்!
நோக்கடா கீழ்வான் தங்கக்
காட்டாறு! நுண்மு கில்கள்
ஆக்கிய அழகைக் காண
ஆயிரம் கண்கள் வேண்டும் !

உருக்கிய பொன்எங் கெங்கோ
ஓடிப்பாய் வதைப்போல் நீண்ட
கருக்கலில் மின்னல் ; வெள்ளித்
தட்டினில் கதிர்கள் முட்டிப்
பெருக்கிடும் ஒளியின் வீச்சே
பெயல்வானம் ; தொடுவான் மின்னல்
கருக்கலில் நடப்போர் கைவாழ்
மின்விளக் கொளிபோல் தோன்றும் !

தொலைவினில் நீள்பா லத்தே
தொடர்ந்தோடும் தேர்கள் போலப்
பலகட்டுக் கோப்புப் பாழாய்
இடிந்துதூள் ஆதல் போல
மலையினைப் பிளக்க வைத்த
வெடிகளைப் போல வானில்
அலைப்புண்ட முகிலின் கூட்டம்
ஆர்ப்பாட்டம் செய்யும் தம்பி

ஆலையின் கரும்புகைபோல்
அடிவானத் தெழுந்து தாவும் !
கோலவான் மறைக்கும் ; மங்கிக்
குமுறிடும் ; குன்றில் மோதும் !
சூல் கொண்ட முகிலின் கூட்டம்
பெய்துபின் சோர்ந்த போதோ
மாலூட்டும் கடலோ ரத்து
மணல்வெளிப் பரப்பாய்த் தோன்றும் !

விளைவயல் பொட்டல் என்ற
வேற்றுமை கருதா தென்றும்
அளித்துயிர் ஓம்பு கின்றாய்
அன்னையே ! முகிலே ! வாழி !
விளைவினை மக்க ளெல்லாம்
பொதுவாகத் துய்க்கும் மேன்மை
முளைத்திடில் தமிழர் நாட்டில்
முளைத்திடும் இன்ப வாழ்வே !!

பெண்ணாகி வந்ததொரு....

பாலா

பீச்சிலிருந்து மின்சார வண்டி புறப்பட்டதும் சேதுராமன் கண்களை ஒரு முறை சுற்றிச் சுழலவிட்டான். அடுத்த கணம் அவனுக்கென்று அங்கே ஓர் அதிசயம் காத்திருந்தது. எதிரே யிருந்த பெஞ்சியில் அமர்ந்திருந்தாள் மோகனா, மோகினிப் பெண்போல. வைத்த கண் வாங்காமல் அவன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். அவள் பார்வையும் அவன் மீது மொய்த்திருந்தது. கடந்த சம்பவங்கள் அவன் நினைவில் எழுந்தன.

அவன் தந்தை மாத்திரம் அன்றைக்குச் 'சரி' என்றிருந்தால் என்றோ இந்த மோகனா அவனுடைய சொந்த மோகனாவாக ஆகியிருப்பாள். ஆனால் சந்தர்ப்பங்கள் இருவரது உரிமைக்கும் குறுக்கே நின்றன.

'ஆனால்... ஆம்; இப்போதும் ஒன்றும் குடிமுழுகிப் போய்விடவில்லை. மோகனாவைத் தனியே சந்தித்து என் உள்ளத்தை திறந்து அவளுக்குக் காட்டினால் அவள் சம்மதித்து விடுவாள். அப்புறம் அப்பாவை இம் முறை எப்படியும் இணங்கவைத்துவிடலாம்... பணம் ஒன்றுதானா முக்கியம்? அவள் அழகுக்கு இந்த உலகமே ஈடு நிற்காதே...... இன்று நான் பெறும்சம்பளமே எங்கள் இருவருக்கும்போதுமே...'

என்று இப்படி நினைத்துக்கொண்டிருந்த அவன் ஏதோ ஓர் ஸ்டேஷனில் ரயில் நின்றதும், மோகனா இறங்குவதைக் கண்டான். மறுகணம் 'தொப்' பென்று அவனும் குதித்துவிட்டான்.

"மோகனா, நீ ஏறிய கம்பார்ட்மெண்டில் அதிகக் கூட்டமில்லையே. நாம் இருவரும் ஓடி வந்த அவசரத்தில் ஆளுக்கொரு வண்டியாக ஏறினதுதான் நல்லதாகிவிட்டது. இல்லையென்றால் நம் அவசரத்திற்கு வந்திருக்க முடியாது...புறப்படு" என்று கூறியவாறு நின்றுகொண்டிருந்த ஓர் இளைஞனைக் கண்டான் சேதுராமன். அவன் மோகனாவின் கணவன் என்பதைச் சேதுராமன் அறிந்துகொள்ள அதிக நேரம் ஆகவில்லை'

அவனுக்குத் தன் நினைவு வந்தபோது, கையிலிருந்த டிக்கட்டைப் பார்த்தான். தாம்பரத்தில் இறங்கவேண்டிய அவன் 'பெண்ணாகி வந்ததொரு' அந்த மாய மோகினி, மோகனாவின் நினைவில் மறதியாக மாம்பலத்தில் இறங்கிவிட்டதை அப்போதுதான் உணரலானான். ரயிலுக்காகத் திரும்பினான். ரயில் அவனுக்காகக் காத்திருக்குமா, என்ன?

நெஞ்சின் சதி

தமிழ்த்தும்பி

பற்றுக்குறை என்ற வார்த்தையே சோழநாட்டுப் பேச்சு வழக்கிலிருந்து தேய்ந்துவிட்டது. தேவை என்ற சொல் அந்த வளம் நிறைந்த நாட்டு மக்களிடம் உலவவில்லை. உணவு, உடை, இருக்க உறையுள் எல்லாம் அங்கு தேவைக்கு மேலேயே இருந்தன. அன்புக் குணம் நாட்டு மண்ணில் ஊறிவிட்ட ஒரு பண்பு. இன்பத்தின் நிரந்தர இருப்பிடம் என்று அந்த நிலத்தைக் குறிப்பிட்டால் அதில் தவறு ஒன்றும் இருக்க முடியாது.

அவ்வளவு நல்ல நிலை இருந்தும் மக்கள் நலவிசாரணை செய்யாவிட்டால் மன்னனுக்கு ஆறுதல் பிறக்காது; நிம்மதியாக நித்திரை வராது. குறைந்தது மாதம் ஒரு முறையாவது மக்கள் துயரைபபற்றி விசாரிப்பான். மக்கள் மகிழ்ச்சியோடு வாழ்க்கை நடத்துகின்றனர் என்று அறிந்தாலன்றி அவன் உள்ளம் அமைதி பெறாது. மக்கள் — மன்னன் சந்திப்பு மாதம் ஒரு தரமாவது இருக்கும். அநேகமாக எல்லாக் குடிமக்களும் மன்னனைச் சில அடி தூரத்திலேயே சாதாரண உடையில் வந்தாலும் கண்டுகொள்வர். அவ்வளவு பழக்கம் அவர்களிடையே இருந்துவந்தது.

காஞ்சனையும் சோழ நாட்டுக் குடிகளில் ஒருத்தி. நினைவு தெரிந்தது முதல், அவளுக்கு இந்தப் பழக்கம் இருந்துவருவது தெரியும். சிறு குழந்தையாக அவள் இருக்கும்போது மன்னனும், இளவரசனும் சேர்ந்து வருவர். இளவரசனும் சிறுவனாக இருக்கும்போதே தந்தையின் வழக்கத்தைக் கையாண்டான். ஏன், அவள்கூடச் சிலமுறை மன்னனிடம் தன் குறைகளை (குழந்தைக்காலக் குறைகளை) த் தெரிவித்திருக்கிறாள். மன்னன் முகத்தில் தன குறையைக் கேட்டதும் அரும்பும் புன்னகையில் தன் குறை நீங்கிவிட்டதை அவள உணர்ந்திருக்கிறாள். அப்போதெல்லாம் அவளுக்கு ஒரு பெரிய காரியத்தைச் சாதித்ததைப் போன்ற பெருமை உண்டாகும்.

இப்போது காஞ்சனை வளர்ந்துவிட்ட ஒரு செழுங்கொடி. மங்கைப் பருவ அழகும், நாணமும் ஒருங்கே அவளிடம் திகழ்ந்தன. இளவரசன் முடிசூட்டப்பட்டு இப்போது அரசபதவி ஏற்றிருந்தான். பிள்ளைப்பருவத்திலிருந்து பார்த்த அந்த முகம் அவளுக்கு நன்றாக அறிமுகமாகியிருந்தது. அரசனுடைய கட்டுக்கோப்பான உடல் மிக நன்றாகத்தான் அமைந்திருந்தது. மக்கள் நலங்களைப்பற்றி அரசன் பன்முறை முடிசூட்டப்பட்ட பின்னுங்கூட கேட்டுச் சென்றிருக்கிறான். அதாவது, காஞ்சனைக்கு அவனிடம் பேச, அநேக வாய்ப்புக்கள்

பட்டிக்காட்டான் (பட்டணம் பார்க்க வந்தவன்): இங்கே சாப்பாட்டு நேரம் எப்படிங்க?

சப்ளையர்: காலைப் பலகாரம் 7 மணியிலிருந்து 11 மணிவரை; பகல் சாப்பாடு 12 லிருந்து 3 வரை; இரவுச் சாப்பாடு மாலை 6 மணியிலிருந்து 8 மணிவரை.

பட்டிக்காட்டான்: அப்படியானால் நான் எப்போதுதான் பட்டணத்தைச் சுற்றிப் பார்ப்பது?

இருந்தன. ஆனால் அந்தப் பாழும் நாணம் முகத்துக்குச் சிவப்பேற்றும்; நெஞ்சத்துக்குத் துடிப்பைத் தரும்; நிலை தள்ளாடச் செய்யும்; பேசத் துடிக்கும் வார்த்தைகளுக்கு உருத்தராது. மன்னன் போனபின் மட்டும் ஒரே வருத்தமாக இருக்கும், ஏன் பேசாது போனேம் என்று. தன் நிலையை அறியக்கூட அவளால் முடியவில்லை.

வெகு சமீபத்தில் இருந்து காஞ்சனை மன்னனைப் பார்க்கும் சந்தர்ப்பங்கள் பல இருந்தன. ஆனாலும் அவளால் அவனை ஏறிட்டுப் பார்க்கக்கூடவில்லை. கம்பீரநடை கொண்டவன், பெருமிதத்தோற்றம் பெற்றவன் என்று தெரியும். அகன்ற மார்பும், திரண்ட தோளும் அவனுக்காகக் கடைந்தெடுக்கப்பட்டவை என்று அவளுக்குத் தெரியும். அந்த முகம்...? அதைத்தான் அவளால் நேரில் பார்க்க முடியவில்லை; அந்த ஜோடிக் கண்களின் கூர்மை அவளைக் குத்தும். மின்னல்போலப் பளிச்சிடும் இரு ஒளிப்பிழம்புகள் அவள் விழிகளைக் கூசவைத்தன. நாணம் வேறு குறுக்கிட்டுத் தலையைக் கவிழ்க்கச் செய்யும். வன்மைமிக்க அவ்வீர விழிகளின் ஊடுருவும் பார்வையும், தனக்கு எதிராகவே வேலைசெய்யும் அந்தப் பாழாய்ப் போன நாணமும், சேர்ந்து சதிசெய்து அந்த முகத்தைப் பார்க்கமுடியாதபடி செய்துவிடும். முடிவில் சீறும் கடலில் சிக்கின சிறு படகுபோல் தவிப்பாள்.

அடுத்த முறை மன்னன் வரும் நாள். காஞ்சனைக்கு நிலைகொள்ளவில்லை. ஒரே ஆசை வெறியில் அவள் புரண்டாள். தனக்கெதிராகச் சதிசெய்யாதே என்று தன் நெஞ்சத்தை அவள் கெஞ்சிக் கேட்கலானாள்:

"நெஞ்சமே! நீ மிகவும் வலிமை மிக்கவன் அல்லவா?

எத்தனையோமுறை நீ உன் வன்மையைக் காட்டியுள்ளாய். பலம் மிக்க உனக்குத் துணிச்சல் மட்டும் இல்லாமலா போய்விடும்! நீ அதைக் காட்டுவதில்லை; அவ்வளவுதான்! நீ திறமை மிக்கவன். வாய்ப்பை நழுவ விடாதவன் என்பதை மறக்காதே.

"மக்கள் துயரை வேரோடு களையத்தானே மன்னன் வருகிறான்? அவன் இன்று வருவான். நினைவில் இருத்திக்கொள். வளவன் வந்தவுடனே ...ஏ, நாணமே நீ ஏன் நெஞ்சத்தின் வேலையில் குறுக்கிடுகிறாய்? நீ மிகவும் நல்லவன் அல்லவா? நெஞ்சத்தைப் பிடித்து உன் பலசோதனையை வைத்துக்கொள்ளாதே. நீ அதைவிடப் பலசாலிதான். தயவுசெய்து நெஞ்சத்தைக் கொஞ்சம் பேசவிடு. நீதானே வம்புக்கு வந்து தொண்டையை இறுக மூடிவிடுகிறாய்! இந்த ஒரு முறை நீ நெஞ்சம் பேசும் வார்த்தைகளுக்கு வழி விடு. உனக்குக் கோடிப் புண்ணியம்... மன்னன் வந்தவுடனே, நெஞ்சே! நீ பேச வேண்டும். கலங்கிக் கண்ணீர் சிந்தின காலத்தை மறந்துவிடு.

"உனக்கு ஏதாவது குறைபாடு உண்டோ?" என்று அவன் கேட்பான்.

"நீ பயந்து விடாதே. கலங்காதே. "அரசர் அறியக் கூடாத துயரில்லை. அவர் துன்பம் நீக்காது கொடுங்கோலன் ஆகிவிட்டார்" என்று சொல். அவன் நெற்றியைச் சுருக்கிக் கேள்விக்குறி எழுப்புவான். நீ பெருமூச்செறி.

"ஒன்றும் தெரியவில்லையே!" என்பான்.

"உங்கள் கண் என்ன மரத்தாலா செய்யப்பட்டது? மனிதக் கண் பார்க்கும் இன்னலைத்தான் நான் அனுபவிக்கிறேன்." என்று சொல்.

"என்னால் ஆனதைச் செய்கிறேன்" என்பான்.

"என் மார்புப் பரப்பும், தோட் பரப்பும் எவ்வளவு சுருங்கி விட்டன? மெலிவின் இந்த ஆக்கிரமிப்பு அநியாயமானது அல்லவா? பசலை என் உடலைப் பிடித்ததே? இது அக்கிரமம் அல்லவா? என் தோளும், மார்பும் உங்கள் மரக் கண்ணுக்குப் புலப்படவில்லையா? ஆயிரம் ஆயிரம் துயர்களை அவை மனிதக் கண்களுக்குச் சொல்லுமே? இந்தத் துன்பத்துக்கு மாமருந்து தரவேண்டும்" என்று மூச்சைப் பிடித்துக்கொண்டு தொழுது எப்படியாவது சொல்லிவிடு. நெஞ்சே, உனக்கு என் ஆயிரம் கும்பிடுகள். தயவு செய்து என்னோடு ஒத்துழைப்பாயாக."

காஞ்சனை தன் நெஞ்சத்தை எவ்வளவோ வேண்டிக்கொண்டு மன்னன் வருகைக்குக் காத்திருந்தாள். நாணத்தையும் அவள் கெஞ்சித் தொழுது கேட்டுக் கொண்டாள். குறிப்பிட்ட நேரத்தில் சோழன் வந்தான். விழிகளை உயர்த்தி மன்னனை ஏறிட்டுப் பார்த்தாள். மன்னனும் அதேசமயம் தற்செயலாகக் காஞ்சனையைப் பார்த்தான்.

அவ்வளவுதான்! காஞ்சனையின் இதயம் இதுமட்டும் துடிக்காத அளவுக்குத் துடித்தது. அதன் துடிப்பை எல்லோரும் கேட்டு விடுவார்களே என்று அவள் அஞ்சினாள். அஞ்சி மார்பை இறுக அடைத்துக்கொண்டாள். மற்றவர் தன்னைப் பார்க்கக்கூடும் என்ற எண்ணம் அவள் முகத்துக்குச் சிவப்பை ஏற்றிற்று. சில கணநேரங்கள் அவளுக்கு மொழியே மறந்துவிட்டது. தான் ஊமையோ என்று காஞ்சனைக்கே சந்தேகம் வந்து விட்டது.

* * *

காதல் சுவையின் இனிப்பு பாடலில் சொட்டுகிறது என்றால் மிகையாகாது. இளம் பெண்ணின் துடிப்புள்ளத்தை இதை விட எப்படி விளக்கமுடியும்? "மண்ணாள்வாரின் கண் மரக்கண்ணா?" என்பது துணிச்சலான கேள்விதான். துணிச்சல் அவளிடம் இல்லாததால்தான் நாம் மறக்க முடியா ஒரு அற்புதச் சித்திரம் ஆகிறாள் அவள். ஆனால், அவளைப் பொறுத்த மட்டும் தவிப்பும், துன்பமும் தான் விளைவு. நெஞ்சத்தை நோகிறாள். நாணத்தை நோகிறாள். ஆனால் நாம் அவளை நோகவில்லை. மாறாக, உணர்ச்சித் துடிப்பு வெடிப்புகளைப் படம் போட்டுக் காட்டுகிறாள்; ஆகையால் பாராட்டத்தான் செய்கிறோம்.

வரக் கண்டு நாணாதே
வல்லையால் நெஞ்சே!
மரக்கண்ணோ மண்ணாள்வார்
கண் என்று—இரக்கண்டாய்
வாள் உழுவை வெல் கொடியான்
வண் புனல் நீர் நாடற்கு என்
தோள் அழுவந் தோன்றத்
தொழுது.

(முத்தொள்ளாயிரம்.

[வல்லை — வலிமையுடைய; வாள்—ஒளி; உழுவை—புலி; வெல் கொடியான் — வெல்லும் கொடியுடைய சோழன். அழுவம்—துன்பம்]

மாதவிடாய் நின்றுபோனதா?

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) Regd. by the Central Drugs Laboratory of Govt. of India. Under No. CDL/688

எக்காரணத்தினாலும் எத்தனை மாதமானாலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவறாமல் உடனே வெளியாகும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) விலை ரூ. 8-8-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) ரூ. 10-8-0 (தபால் செலவு தனி)

கர்ப்பதடை

நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்)
Government Registered No. 266.

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத்தடுக்கும். மாதவிடாய் தவறாது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். (ஸ்பெக் ஜெல்லி) உபயோகித்தால் டெம்பரவரியாக கருவை தடுக்கும். பில்ஸ் விலை. ரூ. 12-0-0 ஜெல்லி விலை ரூ. 6-8-0 (தபால் செலவு தனி)

Mfgrs: SEENU & CO., Post Box, 1638, ( ) MADRAS-1.
கிளை 134. SERANGOON ROAD. சிங்கப்பூர்.
சிலோன் ஏஜண்ட்: NEW COLOMBO MEDICAL STORES. 82 MAIN ST. கொழும்பு-11.

38 Persons are awarded prizes in our puzzle No. 13. (1st prize 1. I. Nanjan, Nilgiris. 2.) N. Ramaiya Chettiar, Mannargudi. 3.) G. Channa Veeragoud, Bellary. 4.) V. Sreeramulu, L. Kanchipuram. 5.) S. Ranganna, Bombay. 6.) Lakshmidhar Das, Orissa. 7.) H. C. Nurul Hasan, Ajmer. 8.) Sankaran Nair, Coimbatore. 9.) Tirlochan Singh Grewal, Fatehgarh. and 3rd prize 20, 4th prize 1, 5th prize 8 persons.

Full particulars are published in the Rainbow dated *25-7-52*.

ரிஜிஸ்டர் ரெ. 277   **ரூ. 25,000 பரிசு**   போட்டி ரெ. 15

MS Premier Bank of India Ltd-ல் சீல் செய்துவைக்கப் பட்டுள்ள சரியான விடை அவர்கள் அங்கீகாரத்தின்பேரில் பிரசுரிக்கப்படும். முற்றிலும் சரியான விடை அனுப்புபவர் களுக்கு முதல் பரிசு ரூ. 12,000. முதல் இரண்டு வரிசை சரியான விடைக்கு இரண்டாம் பரிசு ரூ. 7000. முதல் ஒரு வரிசை சரியான விடைக்கு மூன்றும் பரிசு ரூ. 3000. முதல் மூன்று நம்பர் சரியானவிடைக்கு நான்காம் பரிசு ரூ. 2000. முதல் இரண்டு நம்பர்கள் சரியான விடைக்கு *5*-ம் பரிசு ரூ. 1000 அளிக்கப்படும். எங்கள் ஸீல் வைத்த விடைகள்படி எல்லாம் சரியாக இருக்க வேண்டும். மேற்கண்ட பரிசுகள் எங்கள் கம்பெனியின் நிபந்தனைப்படி வசூலுக்கு தகுந்தபடி பகிர்ந்து கொடுக்கப்படும்.

AMBAL'S PUZZLES

KEY S. NO. 13   *40 TO 55 = 190

45	42	54	49
48	55	43	44
51	52	40	47
46	41	53	50

We hereby certify that the above is the solution in original deposited with us by *Ambal's Puzzles No.* 13 on 17/6/52 in a sealed cover which was opened in our presence to-day and that a copy of the above solution has been lodged with the Bank.

For The Premier Bank of India Ltd.

V. Ramamalny

14.7.52   *Agent, Madras*

முடிவு தேதி 13-8-52   **விடை 27-8-52**

பிரவேசக் கட்டணம் ; கூபன் *1*-க்கு ரூ. *1-0-0*   6 கூபன் கொண்ட ஸெட் 1-க்கு ரூ. 5-0-0

198

விடைகள் கண்டுபிடிக்கும் விதம்:— *42* முதல் *57* வரையுள்ள எண் களைக் கொடுக்கப்பட்டிருக்கும் கட்டங்களில், மேலிருந்து கீழும், இடமிருந்து வலமும், குறுக்காகவும் எப்படிக் கூட்டினாலும் *198* வரும்படியாக அமைக்க வேண்டும். ஒரு எண்ணை ஒரே தடவைதான் உபயோகிக்க வேண்டும்.

விதிகள்:— தனி வெள்ளைக் காகிதத்தில் தேவையான கட்டணத்துடன் எத்தனை கூப்பன்கள் வேண்டுமானாலும் எழுதி அனுப்பலாம். ஒவ்வொரு கூப்பனிலும் பெயர், விலாசம், எண்கள் எல்லாம் ஆங்கிலத்தில் விளக்கமாக எழுதப்பட வேண்டும். பிரவேசக் கட்டணத்தைக் கிராஸ் செய்த போஸ்டல் ஆர்டர் மூலமாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுப்பலாம். மணியார்டர் செய்த ரசீதைக் கூபன்களுடன் சேர்த்து அனுபப வேண்டும். வசூலுக்குத் தகுந்தபடி, பரிசு பகிர்ந்து அளிக்கப்படும். போட்டி சம்பந்தமாக மானேஜர் தீர்ப்பே முடிவானது; சட்டபூர்வமாய்க் கட்டுப்படுவதுமாகும். போட்டி முடிவு RAINBOW மாதமிருமுறைப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும். அல்லது 4 அணா ஸ்டாம்பு அனுப்பினால் விடை அனுப்பப்படும்.

கூபன்கள் அனுப்பவேண்டிய விலாசம் :—

AMBAL PUZZLE NO 15

28 (14) Thandavaraya Gramani Street, Tondiarpet, MADRAS 21

இருபதாவது அத்தியாயம்

"அதற்கு மேல் நடந்ததெல்லாம் உங்களுக்குத் தெரியுமே, சோமு" என்றாள் பத்மா.

அவளிடம் அதை எப்படிச் சொல்வது என்பது விளங்காமல் திகைத்தான் சோமு. பிறகு தன்னைத் தானே தேற்றிக்கொண்டு, தான் தொடங்கிய கதையின் தொடர்ச்சியைக் கூறத் தொடங்கினான். தன் ஆசைச் சுழலிலே அகப்பட்டு, அலைக் கழிக்கப்பட்ட அந்தத் துரும்புகள்... சேகர்—மோகனா—சக்கு—சினிமாக் கம்பெனி முதலாளி! பத்மாவுக்கு அதைக் கேட்கக் கேட்கத் துயரம் அதிகமானது. நெஞ்சை உருக்குவதற்காகவென்றே நிகழ்ச்சிகளை உருவாக்கி கட்டியிழுத்துச் செல்லும் கதைகள் பல படித்திருக்கிறாள் அவள். வீட்டுக்குள்ளேயே இருந்து சலனமற்ற வாழ்வு நடத்துவோர் வாழ்விலகூட நவரசங்களும் பொங்கி வழியும் என்பதை அப்போதுதான் உணர்ந்தாள். விரக்தி மனப்பான்மையோடு விரிந்து பரந்த வானத்தைப்

பார்த்தாள். முலாம் பூசப்பட்ட வெள்ளித் தகடுபோல வெண்ணிலா பதிந்திருந்தது அங்கே. அதிலிருந்து சிதறிய ஒளித்துணுக்குகள்போல ஓரிரு தாரகைகள் உதிர்ந்து காணப் பட்டன. எட்ட இருந்து பார்க்கும் போது எழிலோவியங்களாகத் தோன்றும் அவைகளின் கிட்ட நெருங்கினால்......அத்தனையும் எரி நெருப்புக் கோளங்கள்!

முழுவதையும் சொல்லி முடித்து விட்டு அவள் முகத்தைப் பார்த்தான் சோமு. இருந்த இடத்திலிருந்து எழுந்து ஜன்னலருகே போய் நின்றாள் பத்மா. வீதி காலியாக இருந்தது. எதிரே காணப்பட்ட கட்டிடங்களுக்குப் போர்வையாக அமைந்ததுபோல நிலவொளி அவற்றின் மேல் படிந்திருந்தது. வெள்ளைத் துணி போர்த்தப்பட்ட இஸ்லாமியச் சவப் பெட்டிகளை வரிசை வரிசையாக அடுக்கிவைத்ததுபோலத் தோன்றின அந்தக் கட்டிடங்கள். அவற்றின் உள்ளே...?உயிர் பெற்ற, ஆனால் உணர்வற்ற மனித ஜந்துக்கள்! திரும்பிச் சோமுவைப் பார்த்தாள்.

"சோமு! எந்தச் சமுதாயம் பெண்களின் கண்ணீரைப் பெருக்கிக்கொண்டே போகிறதோ, அது அழிவை நெருங்கிக்கொண்டிருக்கிறது என்பதுதான் பொருள்" என்றாள்.

சோமு ஏதோ சொல்ல நினைத்தான். அதற்குள் அந்த வீட்டின் முன்னால் ஒரு கார் வந்து நின்றது. வெளியே எட்டிப்பார்த்தாள் பத்மா. மோகனாவும் சுந்தரியும் அதிலிருந்து இறங்கினர்.

"வா, மோகனா" என்றழைத்துக்கொண்டே வெளியே ஓடினாள் பத்மா.

"உங்கள் வீட்டை எங்கெங்கே தேடியலைவது? பள்ளிக்கூடத்தின் விலாசத்தையல்லவா கொடுத்துவிட்டீர்கள்" என்றாள் சுந்தரி.

உள்ளே நுழைந்த மோகனா சோமுவைப் பார்த்தபோது...கட்டெறும்புப் புற்றில் கால் வைத்தது போலானாள்.

"சோமு...! நீங்களா?"—அவள் நாக்குக் குளறியது. உடலில் ஒருவித நடுக்கம் உண்டானது.

"பயப்படாதே மோகனா. அவர் பழைய சோமு அல்ல; மறுமலர்ச்சி அடைந்துவிட்டார்" என்றாள் பத்மா, சிரித்துக்கொண்டே.

மோகனாவின் மனதில் என்ன மாற்றம் ஏற்பட்டதோ தெரியவில்லை. எதையோ தேடிப் போக அதை எதிரேயே சந்தித்ததுபோலத் தோன்றிற்று அவளுக்கு. சோமுவை நெருங்கினாள்.

"எனக்காக ஒரு உதவி செய்வீர்களா, சோமு?" என்றாள்.

சோமு அவளையே பார்த்தான். அவளுடைய உடல் முழுதும் துடித்துக்கொண்டிருந்தது. விழிகளில் விவரிக்க முடியாத வேதனை படிந்திருந்தது. ஏதோ ஒருவித ஆவேச உணர்ச்சியால் ஆட்டிவைக்கப்படுவதைப்போலப் படபடப்பு நிறைந்து காணப்பட்டாள்.

"என்னால்தான் ஏற்பட்டது. நான்தான் அவளுக்குத் துரோகம் செய்துவிட்டேன். அவளைப் பார்க்கச் சகிக்கவில்லை. சீர்குலைத்த நானே செப்பனிட்டுவிடுகிறேன். சோமு...! கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகிறேன். எப்படியாவது சக்குவை நாளைக் காலை என் வீட்டுக்கு அழைத்து வருகிறீர்களா?"

என் இப்படித் தவியாய்த் தவிக்கிறாள் என்று புரியவில்லை பத்மாவுக்கு.

"சேகர் எங்கே இருக்கிறார் மோகனா?" என்றாள் உடனே.

"அவரைப்பற்றிக் கவலையே இல்லை. என் வீட்டில் எனக்குப் பிடித்தமானவர்கள் இருக்க உரிமை உண்டு."

அவள் குரலில் கலக்கம் காணப்பட்டது; ஆனால் சொற்கள் மட்டும்

197813

கடுமையாகவும் கண்டிப்பாகவும் வெளிப்பட்டன.

"செய்வீர்களா, சோமு?" என்ருள் மறுபடியும்.

"சரி, மோகனு."

இரண்டே சொற்கள்தான் வெளிப்பட்டன சோமுவிடமிருந்து.

"அப்படியானுல் நான் வருகிறேன்" என்று புறப்பட்டாள் மோகனு.

"இதற்குள் என்ன அவசரம், மோகனு? இருந்துவிட்டுப் போயேன்" என்ருள் பத்மா.

அவள்: நீங்கள் எங்கே இந்தக் குடையை வாங்கினீர்கள்?

அவன்: அது என் சகோதரியின் அன்பளிப்பு.

அவள்: உங்களுக்குச் சகோதரி இல்லை என்றீர்களே.

அவன்: அப்படித்தானே இந்தக் குடையில் எழுதியிருக்கிறது!

"இல்லை அக்கா. என் மனம் சரியாக இல்லை. உன்னைப் போகச் சொல்லலாம் என்றுதான் வந்தேன். நல்ல வேளை, சோமுவே இங்கே இருந்துவிட்டார்" என்று சொல்லிக் கொண்டே நடந்தாள் மோகனு.

அவளுக்குத் தொல்லை கொடுக்கப் பத்மாவுக்கு மனம் வரவில்லை. சோமுவைத் திரும்பிப் பார்த்தாள். இரும்புச் சிலையாகி இருந்த இடத்திலேயே நின்ற அவனுடைய இரு விழிகளும் நீரூற்றுக்களாக மாறியிருந்தன. எந்த உணர்ச்சி அவன் இதயத்தை உருக்கியது என்பதை அவளால் கண்டுபிடிக்க முடியவில்லை. வாயிற்படிகளில் இறங்கிக் கொண்டிருந்த மோகனுவைப் பார்த்தாள். காரின் கதவைத் திறந்து வைத்துக்கொண்டு நின்ருன் டிரைவர். இதைக் கவனிக்காதவள்போல எதையோ நினைத்துக்கொண்டு சிறிது நேரம் நின்ருள் மோகனு. பிறகு திரும்பி வீட்டுக்குள் நுழைந்தாள். தன்னையே பார்த்துக்கொண்டிருக்கும் சோமுவை நோக்கி நடந்தாள்.

"என்மேல் கோபமா, சோமு?"

அந்தச் சொற்கள் சோமுவின் மனதைத் தொட்டன. உடனே மனிதத்தன்மை என்ற அந்த மாற்றுக்குறையாத உணர்ச்சி அவன் மனதில் மலர்ந்து மணம் வீசியது. அளவுக்கு மீறி அவள்பால் ஏற்பட்ட அனுதாபம் அன்பாகப் பரிணமித்தது.

"இன்று முதல் நீ என் தங்கை, மோகனு! உன்னைப் போல எனக்கொரு தங்கையிருந்தால் நான் ஒரு உதவாக்கரையாக மாறியே இருக்கமாட்டேன்"

எல்லையற்ற மகிழ்ச்சி மோகனுவின் மனதில் நிறைந்தது. பத்மாவையும் சுந்தரியையும் திரும்பிப் பார்த்தாள். இன்பக் கண்ணீரின் துளிகள் அவர்களுடைய இரு விழிகளிலும் ஒளிவிட்டன. நிர்மலமான வானத்தில் நெஞ்சைக் கவரும் நிலா புன்னகை பூத்துக் காட்சியளித்தது.

மிதக்கும் மேகங்கள் மெல்ல நடம் புரியும் மெல்லியர்களை நினைவு படுத்தின அவளுக்கு.

"சோமு அண்ணு, எனக்கும் உங்களைப் போல ஒரு அண்ணன் இருந்திருந்தால்......"

அதற்குமேல் அவளால் பேச முடியவில்லை. தொண்டை அடைத்துக்கொண்டது போலிருந்தது. களிப்போடு ஒரு முறை அவனையே பார்த்தாள். பிறகு திரும்பிக் காரை நோக்கி நடந்தாள். விண்ணிலே பறந்த மேகம் மண்ணிலே மிதக்கத் தொடங்கியது போல நடந்துசென்ற அவளையே பார்த்துக்கொண்டு நின்ருன் சோமு.

இரவெல்லாம் பத்மா இதையே நினைத்துக்கொண்டிருந்தாள். உறக்கந் தராது ஒழிந்த எத்தனையோ இரவுகளில் ஒன்ருன அன்றைய இரவு மட்டும் பத்மாவின் இதயத்தின் ஆழத்தில் படிந்தது.

விடிந்தது. காலை எட்டு மணியிருக்கும். மோகன இருந்த வீட்டுக்கு முன்னல் ஒரு வண்டி வந்து நின்றது. அதிலிருந்து பத்மா, சோமு, சக்கு, வாசு ஆன நால்வரும் இறங்கினர்.

வாயிற்படிக்குள் நுழைந்ததும் எதிரே சேகரன் உட்கார்ந்திருந்தான். சோமு—சக்கு! இரு உருவங்களும் அவன் இதயத்தைப் பிளந்து விட்டன.

"விபச்சாரி! வெளியே போ!"—ஊரத்துக் கூச்சலிட்டான் அவன்.

அப்படியே அயர்ந்து நின்று விட்டாள் சக்கு. அந்தப் பெண்ணை வதை செய்வதைப்போல அவளைத் தாக்கிற்று அந்தச் சொல்.

"அத்தான்!" என்று வாய் விட்டலறிவிட்டாள்.

"ஐயோ! இதென்ன அக்கா?" என்று கூறினன் வாசு.

சக்கு மூர்ச்சையடைந்து கீழே விழுந்து விட்டாள். உள்ளேயிருந்த மோகன இந்த ஓசை கேட்டு வெளியே ஓடிவந்தாள். நிலைமையைக் கவனித்தபோது அவள் நெஞ்சு திடுக்கிட்டது. தரையில் கிடந்த சக்குவை மடிமேல் எடுத்து வைத்துக்கொண்டு, சேகரனைப் பார்த்தாள். அவன் கண்களில் கனல் பறந்தது. உன்மத்தம் பிடித்தவனைப் போல நின்றுகொண்டிருந்தான்.

மோகன பேசத் தொடங்கினுள் ஒவ்வொரு சொல்லும் தனித்தனியே தெளிவாக வெளிவந்தன. அன்று வரை அவளைச் சுற்றி வளைத்து இறுக்கிக்கொண்டிருந்த கட்டுப்பாட்டை உடைத்துச் சுக்கு நூருக்கிவிட்டவள் போலக் காணப்பட்டாள்.

"விபசாரி அவளல்ல, சேகர்; நான்தான்! சக்கு நிரபராதி; உங்களையே உயிர் என மதித்து உலகத்தின் தொல்லைகளையெல்லாம் ஏற்றுச் சகித்துக்கொண்டவள். தமக்கென்று எந்தவிதத் தனிச் சிறப்பும் பெற முடியாததால் மற்றவர்களைத் தாழ்த்துவதாலேயே தங்களை உயர்த்திக் கொள்ளும் மட்டரகங்களே மலிந்த மனிதசமுதாயத்துக்குப் பலியானுள் இந்தப் பேதை. அவள் உத்தமி; நான்தான் விபசாரி."

"என்ன?"

அன்பு என்ற அழகான சொல் மிகவும் கொடுமை வாய்ந்தது. அன்பின் உயர்வால் உலகில் மலர்ந்திருக்கும் ஆயிரம் ஆயிரம் இன்பக் கதைகளைச் சரித்திரங்கள் சொல்கின்றன. ஆனுல் அந்தக் கதைகளின் இன்ப முடிவுக்குள்ளே உள்ள இந்தக் கண்ணீரையும், இதயக் குமுறலையும், வெளியிடமுடியா வேதனையையும் ஏன் யாரும் நினைப்பதில்லை? அன்பினுல் விளைந்த துன்பங்கள், அன்பினுல் கெட்டலைந்த மனிதர்கள், அன்பினுல் நிகழ்ந்த கொலைகள், கொள்ளைகள் எத்தனை எத்தனை?

—அகிலன்.

> கற்பனைக் கதைகளைவிட உண்மை அதிசயமாயிருக்கிறதென்றால், அதற்குக் காரணம் உண்மையைப்பற்றி மிகக் குறைவாகவே நாம் கேட்க முடிவதே ஆகும்.
>
> டாக்டர் ஆங்க்லன்

உத்தரம் பெயர்ந்து தலைமேலே விழுந்ததுபோல ஒலித்தது அந்தச் சொல்.

"ஆமாம், சேகர். அழகுக் குவியல் என்று மதித்து உங்கள் வாழ்வை அர்ப்பணித்தீர்களே, அந்த மோகனாதான் விபசாரி. வீதியிலே திரிந்தேன். நல்வாழ்வு தருவதாகச் சொல்லிச் சோமு என்னை அழைத்துவந்தார்"

"அப்படியானால் நீ சோமுவின் அத்தை மகளல்லவா?"

அவன் குரல் நடுங்கிற்று; இரத்தமெல்லாம் ஆவியாக மாறிவிட்டதைப்போல முகம் வெளுத்துவிட்டது.

"அத்தை மகளுமில்லை, மாமன் மகளுமில்லை. இதோ நிற்கிறாரே சோமு, அவரையே கேளுங்களேன்"

சோமுவை நோக்கினான் சேகரன். அவன் தலைகுனிந்தான் உடனே.

அதற்குள் டாக்டரை அழைத்துக்கொண்டு சுந்தரி வந்திருந்தாள். மருந்தைக் கொடுத்துவிட்டு மறுநாள் வருவதாகச் சொல்லிப்போனார் அந்த டாக்டர். மறுபடியும் மோகனா நிமிர்ந்தபோது......சேகரன் அங்கே இல்லை!

சக்குவின் உடல் அனலாகக் காய்ந்துகொண்டிருந்தது. "விபசாரி விபசாரி" என்று பிதற்றிக்கொண்டிருந்தாள். வெளுத்த வானத்திலிருந்து யாரோ அவளை அழைப்பதுபோலிருந்தது. கண்ணீர் வழிந்துகொண்டிருந்தது அவள் விழிகளிலிருந்து. கனத்திருந்த தன் தலையைக் கருங்கல் என நினைத்து யாரோ உளியால் உடைப்பது போலத் தோன்றிற்று.

வாசு அவளருகே உட்கார்ந்து அழுதுகொண்டிருந்தான். மோகனாவுக்கு எதுவுமே விளங்கவில்லை.

* * *

தன்னுணர்விழந்து நடந்துகொண்டிருந்தான் சேகரன். உலகமே அவனைப் பார்த்துக் கைகொட்டிச் சிரிப்பதுபோலிருந்தது அவனுக்கு. சிரிப்பின் ஓசை அவனை விரட்டிச் சென்றது. ஒளிந்துகொள்ள ஏதாவது இடங்கிடைக்குமா என்று ஆராயத்தொடங்கின அவன் கண்கள்.

"சேகர்!"

யாரோ அழைத்தார்கள். ஆனாலும் போய்க்கொண்டுதானிருந்தான்.

"சேகர்!"

குரல் மிக மிக அருகிலேயே கேட்டது. கவனிக்க மறுத்தது அவன் உள்ளம். கால்கள் சாவி கொடுத்த பொம்மையாக இயங்கிக்கொண்டிருந்தன.

அவன் கையை யாரோ நிறுத்தினார்கள். திரும்பிப் பார்த்தான். வாசுவின் தந்தை எதிரே நின்றுகொண்டிருந்தார்.

"வாசு அங்கே இருக்கிறானா, சேகர்?"

'ஆமாம்' என்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தான் சேகரன்.

"நல்ல வேளை. அந்தப் பெண் உன்னிடம் வந்துசேர்ந்து விட்டாள். அவள் மிகவும் நல்லவள். அந்த மாடிவீட்டுக்காரன் அவளைப் பாடாய்ப் படுத்திவிட்டான். எல்லாவற்றையும் சக்கு சொன்னாளா?"

"என்ன?"

உலகம் தலைகீழாகச் சுழல்வது போலிருந்தது சேகரனுக்கு. காட்டில் முளைத்த கள்ளிச்செடிகளைப் போலக் காணப்பட்ட கட்டிடங்கள் எல்லாம் இடிந்து விழுந்து கொண்டிருந்தன.

"வா அப்பா. எல்லா விஷயங்களையும் சொல்லுகிறேன்" என்றழைத்துப் போனுர் அவர்.

அவனைத் தன்னுடன் அழைத்துச் சென்ருர்அவர். வழியெல்லாம்நடந்த விஷயங்களைக் கூறிக்கொண்டே நடந்தார். அவர்கள் இருந்த வீதிக்கே வந்துவிட்டார்கள். அந்தத் தெருவிலிருந்த ஒவ்வொருவரும் சேகரனை வந்து பார்த்தார்கள். வந்தவர்கள் அத்தனைபேரும் துக்கம் விசாரிப்பது போலச் சேகரனிடம் பேசினர்கள்.

எல்லாமே அழிந்து போனதைப் போலத் துடித்தான் சேகரன். திறந்திருந்த வாயில் கதவுகள் வழியாக வீட்டுக்குள் நுழைந்தான். அவனுக்கு எதிரே.........சேகரன் புகைப்படம்! காய்ந்து சருகான பூச்சரம் ஒன்று அதில் தொங்கிக் கொண்டிருந்தது. கிட்ட நெருங்கி அதை எடுத்துப் பார்த்த போது... மேலே படிந்திருந்த தூசியில் கண்ணீர் கலந்து அதைத் திப்பி திப்பியாக ஆக்கியிருந்தது.

"ஐயோ சக்கு! அநியாயமாகத் துரோகம் செய்து விட்டேன்!"

ஒரே அலறல் — படம் கீழே விழுந்து சிதறியது—ஓடினுன் அங்கிருந்து சேகரன்!

* * *

"வாசு! இங்கே வா அப்பா" என்று அழைத்தாள் சக்கு.

இவ்வளவு தெளிவாகப் பேசுகிருளே என்று மோகனவும் அவளருகே வந்தாள்.

"நீ நல்ல பிள்ளையாக நடந்து கொள்ளவேண்டும்"

மூச்சு இழுத்துக்கொண்டிருந்தது.

"அக்கா!" என்றழுதான் வாசு.

"உடம்பை அலட்டிக்கொள்ளாதே, சக்கு" என்ருள் மோகன.

அவளேயே கூர்ந்து கவனித்தாள் சக்கு. இருவிழிகளும் திடீரென்று அளவுக்குமீறி ஒளி பெற்று மின்னின. தலை சாய்ந்தது; இமைகள் மூடிக்கொண்டன.

"அக்கா—சக்கு!"-இரண்டு குரல்களும் ஒன்ருேடொன்று முட்டி மோதிக்கொண்டன.

பத்மாவும் சோமுவும் அந்த உயிரற்ற சடலத்தைப் பார்த்துக் கொண்டே நின்றனர். மனித உணர்ச்சிகளை மதிக்காத நிர்ணயிக்கப்பட்ட ஒழுங்குமுறைகளுக்குப் பலியான அந்தப் பெண்ணைப் பார்க்கப் பார்க்க அவர்களுக்குப் பரிதாபமாக இருந்தது.

"என்னை மன்னிக்கமாட்டா சக்கு?" என்று கதறிக்கொண்டே, ஓடிவந்தான் சேகரன்.

பிணம் அவனைப் பார்த்துச் சிரித்தது. மோகன வெறுப்போடு அங்கிருந்து எழுந்து போனுள். வாசு அலறிக்கொண்டிருந்தான். உயிரற்ற சடலத்தின்மேல் விழுந்து புரண்டழுதான் சேகரன்.

சிறிது நாழிகை கழித்துத் திரும்பிப் பார்த்தான் சேகரன். சோமு நின்றுகொண்டிருந்தான்.

"நான்தான் அவளைக் கொன்றுவிட்டேன், சோமு" என்ருன் அவனைப் பார்த்து.

"இல்லை சேகர். நீயல்ல இதற்குக் காரணம். இந்தச் சமுதாயம் ஆணையும் பெண்ணையும் அப்படித்தான் உருவாக்குகிறது. ஒரு கதாசிரியர் எழுதியிருக்கிருர், 'ஆடும் மாடும்போல ஆணும் பெண்ணும் வாழ்கின்றனர்' என்று; ஆடு புல்லைத்தான் தின்னும்; மாடு புல்லையும் தின்னும், வைக்கோலையும் தின்னும்.

சாதாரண மக்கள் கடவுளைப் பிரார்த்திப்பதில்லை; பிச்சை தான் கேட்பார்கள்.

—பெர்னுர்ட்ஷா

சமுதாயம் அனுமதி கொடுக்கும் ஆணோடுதான் ஒரு பெண்ணால் வாழ முடிகிறது. ஆனால்......அது அனுமதிபபவளோடும் அனுமதிக்காதவளோடும் ஆண் வாழமுடியும். இந்த நிலைதான் சேகர் அவளைக் கொன்றது.''

''இல்லை சோமு. நான்தான் அவளைக் கொன்றேன்.''

சக்குவின் சடலம் எரிக்கப்பட்டது. இதெல்லாம் நடந்து ஒரு வாரமாகி விட்டது.

ஒருநாள் மாலை ஐந்து மணியிருக்கும். அன்றுதான் அங்கே இருந்தவர்கள் அனைவரும் ஆறுதலடைந்திருந்தனர்.

''சோமு அண்ணா! எனக்கொரு அண்ணியை எபபோது தரப் போகிறீர்கள்?'' என்றாள் மோகனா.

பாடியும் கறக்கலாம்

''ஆடுகிறமாட்டை ஆடிக்கறக்க வேண்டும்; பாடும்மாட்டைப் பாடிக் கறக்கவேண்டும்'' என்ற பழமொழி உண்மைதான் எனத் தெரிகிறது.

இங்குள்ள பசுக்களிடம் பால் கறக்கும்போது இனிமையான சங்கீத ரிக்கார்டுகள் பாட வைத்தால் நிறையப் பால் கிடைக்கிறது என்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

அம்மாதிரி உபயோகப்படும் ரிக்கார்டுகளுக்குக் காபிரைட் பணம் செலுத்தவேண்டுமா என்பதைக் கண்டறியும்படி பசுக்களின் சொந்தக்காரர்கள் வெலிங்டன் வர்த்தகசபையைக் கேட்டிருக்கின்றனர்.

''இதோ பத்மா இருக்கிறாளே, மோகனா'' என்றான் சோமு.

''இந்த அண்ணன்மார்களே இப்படித்தான். நாம் தேடிக்கொள்ளும் அக்காமாரை எப்படியோ அண்ணிகளாக்கி விடுகிறார்கள்!'' என்றாள் சுந்தரி.

எல்லோரும் சிரித்துவிட்டார்கள்.

''நீ என்ன செய்யப் போகிறாய், சுந்தரி?'' என்றாள் பத்மா.

''இனிமேல் நான் செய்ய என்ன இருக்கிறது, அக்கா?'' என்றாள் அவள்.

''நீ, மோகனா......?''

''நானா......?'' என்றிழுத்தாள் மோகனா.

''மோகனா!'' என்ற குரல் கேட்டது.

எல்லோரும் திரும்பிப் பார்த்தார்கள். சேகரன் நின்றுகொண்டிருந்தான்.

''நான் செய்த பாவங்களுக்கெல்லாம் பிராயச்சித்தமாக......'' என்றிழுத்து நிறுத்தினான்.

''இல்லை சேகர் அண்ணா, நீங்கள் செய்த குற்றங்களுக்கெல்லாம் தண்டனையாக...'' என்று அவனைத் திருத்தினாள் சுந்தரி.

எல்லோரையும் ஏக்கத்தோடு பார்த்தாள் மோகனா.

''நான்கூட அதைத்தான் நினைத்தேன், மோகனா'' என்றான் சோமு.

மோகனாவுக்கு ஒன்றும் புரியவில்லை. அவளுடைய மூளை குழம்பி விட்டது. நிமிர்ந்து சேகரனைப் பார்த்தாள். அவன் பார்வையில் காணப்பட்டது பரிவா அல்லது பரிதாபமா என்பதுதான் அவளுக்கு விளங்கவில்லை.

(முற்றுப்பெற்றது)

பொழுது போக்கு

ராதா

காதல்

பானுமதியின் கற்பனையில் உதித்த கதை காதல். தன் குறும்புத்தன நடிப்புக்கேற்றவாறு படமொன்றுபிடிக்கவேண்டுமென்று நினைத்துக் கதையையும் எழுதி, தன் ஆசைதீர நடித்துப் படமாக்கித் திரையிட்டுவிட்டார் பானுமதி. ஆனால், பல படங்களிலுள்ள சில சம்பவங்களை ஒன்றாக்கி, அதைக் கவர்ச்சிகரமான பெயரில் வெளியிட்டிருக்கும் படம் காதல் என்று படம் பார்த்தவர்களை எண்ணச் செய்கிறது இது. மலைஜாதிப் பெண் மோதிக்கும், நகரத்து வாலிபன் ராஜாவுக்கும் காதல் ஏற்படுகிறது. இக் காதலுக்கு இடையே, பரசுராம் என்ற முரடனும், ராஜாவின் அத்தை மகள் லதாவும் முட்டுக்கட்டையாக நிற்கின்றனர். முடிவில் லதா, மோதியின் மனத்தை மாற்றி, ராஜாவின் மேல் மோதி கொண்டுள்ள காதலைத் தியாகம் செய்யச் செய்கிறாள். தன்னை மணக்கமறுத்த மோதியைத் தன் கத்திக்கு இரையாக்கி விடுகிறான் பரசுராம். கதையின் முடிவு, 'காதல் இன்றேல் சாதல்தானா?' என்று நம்மைக் கேட்கச் செய்கிறது. இம் முடிவைப் புரட்சிகரமானதாக மாற்றியிருக்கலாம்—மோதியை ராஜா மணப்பதாகக் காட்டி, மோதி ராஜாவின்மீது கொண்ட காதலுக்கு உயிரளித்திருக்கலாம். ஆனால், சமூகம் இம்முடிவை ஏற்றுக்கொள்ளுமா என்ற எண்ணத்துடனோ என்னவோ, மோதியைச் சாகடித்துக் கதையை முடித்திருக்கிறார்கள். படத்தின் முடிவு எல்லோர் மனத்திலும் நன்கு பதியும்படி—நினைத்துக் கண்ணீர் விடும்படி அமைந்திருக்கிறது. ஒருசில படங்களில் சோக முடிவைக் காட்டிவிட்டு, ரசிகர்களின் மனத்தில்எழுந்த சோகம் மறைய உடனே களிப்பூட்டும் ஒருகாட்சி காட்டப்படுவதுண்டு. ஆனால் இப்படத்தில் மோதியின் உயிர் பிரிந்ததும், அவளின் கல்லறையைக் காட்டிப் படத்தை முடிப்பதால், மோதி, ரசிகர்களின்

நினைவை விட்டு அகலாததொரு நினைவுச் சித்திரமாகி விடுகிறாள்.

மோதியாக வரும் பானுமதி நடிக்கின்றார் என்று கூறுவதை விட, அசல் மலை ஜாதிப் பெண்ணாகவே மாறிவிட்டார் எனலாம். 'வெரிகுட்' என்பதற்கு 'வெடிகட்' என்று சொல்லிக்கொண்டே குதித்துக் குதித்துக் கும்மாளமிட்டுச் செல்லும் காட்சி ரசிகர்கள் மறக்க முடியாததொன்றாகும்! குறுகுறுவென்று பார்க்கும் பார்வை, பயந்த சுபாவம், குறும்புத்தனம் கலந்த பேச்சு இவற்றின் சிபாரிசுகளுடன் தோன்றும் பானுமதி மிகநேர்த்தியாக, இயற்கையாக நடித்திருக்கிறார். தென்னாட்டில் தானேபாடி நடிக்கும் ஒருசில நடிகைகளில் பானுமதிக்கு உயர்ந்த இடம் நிச்சயம் உண்டு. ஒவ்வொரு பாட்டையும் ரசித்துப் பாடியிருக்கிறார். "ஓ, ராஜா" என்ற பாட்டு மிக நன்றாக இருக்கிறது.

மோதியும் ராஜாவும் சந்திக்கும் கட்டம், பூரண நிலவிலே ராஜா, மோதிக்குச் சென்னை நகரைப்பற்றிக் கூறும்போது, மோதி அதை ஆவலுடன் கேட்கும் பகுதி, மற்ற பெண்களுடன் மோதி ஆடும் நடனம், மோதி நாடகத்தில் சகுந்தலை பாக நடிக்கும் காட்சி— இவை கண்களுக்கு நல்விருந்து.

பானுமதியின் உயரிய நடிப்பின்முன், நாகேஸ்வர ராவ், முக்கமாலா போன்றவர்களின் நடிப்பு சோபிக்கவில்லை. சிவராவ், ரேலங்கி, பானுமதியைத் தவிர்த்துள்ள மற்றஆந்திர நடிகைகள்— ஆக எல்லாருமாகச் சேர்ந்து தமிழைக் கொலை செய்திருக்கிறார்கள் என்றே சொல்ல வேண்டும். ஆந்திரப் படாதிபதிகளுக்கு நான் கூறும் யோசனை, அவர்கள் தயாரிக்கும் 'காதல்' போன்ற தமிழ்ப்படங்களுக்குத் தமிழ் நடிகர்களைக்கொண்டோ, அல்லது தமிழ் நடிகர்களின் குரலை ஆந்திர நடிகர்களுக்கென இரவல் பெற்றோ படத்தைத் தயாரிக்கவேண்டும் என்பதே. சிவராவின் நடிப்பு கொஞ்சம் 'ஓவர்'. சிவசாமியாக வரும் சி. எஸ். ஆர்-இன் நடிப்புசுமார்தான். ஸ்ரீரஞ்சனி நடிக்கவே இல்லை; ஏதோ வந்துபோகிறார். முக்கமாலாவின் 'மேக்கப்' சரியில்லை; நடிப்பும் என்னவோபோல் இருக்கிறது.

மலைக் காட்சிகள் நல்ல முறையில்படமாக்கப்பட்டிருக்கின்றன. காட்சி அமைப்புக்கள், வாஹினியின் தரத்தில்இருக்கின்றன. ஒலி, ஒளி அமைப்புக்கள் சுமார்என்றுதான் சொல்லமுடியும். சுப்பராமனின் இசை அமைப்பு படத்தின் வெற்றிக்குப் பெரிதும் உதவியிருக்கிறது.

பானுமதியின் அற்புத நடிப்புக்காகக் காதல் படத்தை ஒரு முறை அல்ல, இருமுறை வேண்டுமானாலும் பார்த்துவைக்கலாம்.

உள்ளமும் உருவமும்

இரா. கந்தசாமி

அன்று 'சிவந்தி பிலிம்ஸார்' படம் எடுக்கத் திட்டமிட்டிருந்த 'ஏழை' என்ற சமூகப் படத்தில் முக்கியபாகம் தாங்கி நடிக்கக் குமரப்பாவை ஒப்பந்தம் செய்வதற்காக உரிமையாளரும் டைரக்டரும் வந்திருந்தனர். குமரப்பா என் இனிய நண்பர். தலைசிறந்த நடிகர்; அவர் நடிப்பைக் கண்டு பொதுமக்கள் மகிழ்ந்தனர். உலகம் போற்றியது. புகழ் புன்னகை பூத்தது. பணத்திற்கும், பாராட்டுரைக்கும் கேட்கவா வேண்டும்?

ஒரு வழியாக ஆரம்பமான பேச்சு, கடைசியில் வெற்றிகரமாக முடிவடைந்தது. அவர்களை வழியனுப்ப நானும் நடிகருடன் மாடியிலிருந்து கீழே இறங்கி வந்தேன்.

'ஏழை'யைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தார்கள் அந்த ஏழைபங்காளர்கள் — அதுதான் அந்தச் சினிமாக்காரர்கள். அவர்கள் பேச்சு என் செவியில் ஏறவில்லை. என் சிந்தனையைக் கவர்ந்து இழுத்தது ஒரு பிச்சைக்காரனின் வேதனைக் குரல். ஒட்டிய வயிறு, உடைந்த உள்ளம், உருக்குலைந்த மேனி, பஞ்சடைந்த கண்கள், செஞ்சும் பார்வை — இவைகளின் உரு அந்தப் பிச்சைக்காரச் சிறுவன்.

"ஐயா, தரும தொரைங்களே காலணா கொடுங்க ஐயா!...... கண்ணில்லாத கபோதி ஐயா!!"

பத்து வயது நிரம்பிய அந்தச் சிறுவனையும், வயோதிகக் கிழவனையும் இணைத்துக்கொண்டிருந்தது ஒரு நான்கு முழக்கழி.

"ஐயோ!... அப்பா..., அடிக்காதீங்க..." என்ற சப்தம் என் சிந்தனையைக் கலைத்தது. என் கண்களையே நம்ப முடியவில்லை; கனவு காண்பதுபோன்ற பிரமையா? கண்ணைத் துடைத்துக் கொண்டு சுற்றுமுற்றும் பார்த்தேன்.

படமுதலாளிகள் ஏறிவந்த கார் சிட்டாகப் பறந்துகொண்டிருந்தது. நடிகர் குமரப்பா, அந்தவயோதிகக்கிழவனை அடித்துக்கொண்டிருந்தார். அவன் வலி தாளாமல் கூக்குரலிட்டுக் கொண்டிருந்தான். நான் செய்வது அறியாது திகைத்து நின்றேன். என்னை அவர் மாடிக்கு இழுத்துவந்தார்.

மாடியில் எதிர் எதிரே கிடந்த நாற்காலிகளில் மௌனமாக அமர்ந்தோம்.

"உலகத்தில் இந்தப் பாழும் பணம் இல்லாத குற்றத்தால், துன்பமும், தொல்லையும் நாட்டிலே நடமாடத்தான் செய்கின்றன. அதற்கு இந்தப் பிச்சைக்காரர்கள்மட்டும் எப்படி விலக்காக முடியும்?"

“நான் வாடகைக்குப் பிடித்திருக்கும் இந்த அறை ஒரே அடைசலாக இருக்கிறது. எங்கள் நாயைக் கட்டிவைக்கக்கூட இடமில்லையே?”

“அப்படியா? எங்கள் ஹோட்டலில் நாங்கள் மிருகங்களை அனுமதிப்பதில்லையே....!”

உருக்கமான குரலில் குமரப்பா கூறினார்.

ஆனால், பிச்சை கேட்ட அந்தப் பிச்சைக்காரக் கிழவனைக் காரண மற்று குமரப்பா நையப்புடைத்ததின் மர்மத்திற்கும், இப்போது அவர் கூறும் விளக்கத்திற்கும் என்ன தொடர்பு என்று எனக்குப் புரியவில்லை.

“பிச்சைக்கார வட்டாரத்தில் என்னென்ன கொடுமைகள் நடக்கின்றன? நினைத்தாலே நெஞ்சம் நடுங்குகிறதே! என் உள்ளத்திற்கும் அந்தப் பிச்சைக்கார உருவத்திற்கும் ஏதோ சம்பந்தம் இருப்பதாக எனக்குத் தோன்றியது. என்னை மறந்தேன்; என் நிலையை மறந்தேன்; ஆத்திரம் என் அறிவை மழுங்கச் செய்தது. அவனை அடித்தேன். அந்த என் குற்றத்துக்காக இப்பொழுது வருந்துகிறேன்; கண்ணீர் வடிக்கிறேன். இதோ, அந்தப் பிச்சைக்கார உருவத்தையும் என் உள்ளத்தையும் பிணைக்கின்ற சோகவரலாறு!” என்று நடிகர் குமரப்பா திடீரென்று கதையைத் தொடர்ந்தார்.

“சாலையூரின் இடிந்த சத்திரம் அந்த வட்டாரத்துப் பிச்சைக்காரர்களுக்கு ஒரு மாளிகை. முத்தன் அந்த மாளிகைக்கு மன்னன் போல. வாடாத பூப்போல் பதினெட்டு வயது நிரம்பி எங்கிருந்தோ வந்த வள்ளியைத் தன் அந்தப்புரத்திற்கு அரசியாக்கிவிட்டான் அவன்.

அந்த இடிந்த சத்திரத்திலே, சோற்றுக்கும், துணிக்கும் பஞ்சம் உண்டு; குழந்தைகளுக்கு மட்டும் ‘ரேஷனே’ இல்லை. எத்தனையோ குசேலர்கள் இருக்கும்போது குழந்தைகளுக்குப் பஞ்சமா என்ன? அந்தப் பயல் என்றால் வள்ளிக்கு ரொம்பப் பிடிக்கும். நன்றாய்ப் பாடுவான்; எல்லாரைப்பார்க்கிலும் அதிகமாகப் பணம் கொண்டுவருவான். கேட்கவா வேண்டும்?

காலம் தேய்ந்தது.

அந்தப் பிச்சைக்காரத் தம்பதிகள் முத்தனும் வள்ளியும் அன்

ருடம் வயிற்றைக் கழுவிமூடவே திண்டாடினார்கள்.

அன்று ஒரு நாள்...!

"என்னங்க, ஒரு மாதிரியா இருக்கிய, எந்தக் கோட்டையைப் பிடிக்க இம்பிட்டு ரோசனை?"— வள்ளி கொஞ்சலாகக்கேட்டாள்.

"வள்ளி...!"

"மச்சான்...!"

"நமக்கோ வயசு ஆயிடுச்சு. புள்ளெ குட்டிங்களே மாத்திரம் ரொம்பக்கொடுத்திடுச்சு அந்தப் பாழும் பய தெய்வம் பொளெக்க; வழியில்லே. பொய் சொல்ல மார்க்கம் இல்லே. அதுவும் இந்தப் பட்டணக்கரையிலே யாரு பிச்சை போடுராங்க...வள்ளி?"

"இவ்வளவு சனங்கள் பொளெக்கிறப்போ, நமக்கு மாத்திரம் என்ன? மரம் வெச்சவன் தண்ணிஊத்துவான். சும்மா தூங்கு, மச்சான்."

"இல்லே, வள்ளி! என் மனசு ஒடஞ்சு போச்சு. அந்தப்பயல் வரவர சொல்லுற பேச்சைக் கேட்க மாட்டேங்கரான். முன் போலவா கெடச்ச காசை அப்படியே கொடுக்கிறான்? எதனைச்சும் அதட்டிப் பேசினால் போச்சு, எங்கிட்டாவது கம்பி நீட்டிப் போடுவான் போல இருக்கு..."

"ஆமா, அதுக்காக இந்தச் சோத்தியத்திலே என்ன செய்யப் போறிய?"

"இந்தப் பொளெப்பையே விட்டுடப்போறேன். பய நல்லாப் பாடுறான். அது இருக்கட்டும்; பய தூங்குறானா, முழிச்சிருக்கானா? போய்ப் பாரு..."

"நல்லாத் தூங்குது"

"வள்ளி!... இந்தா... எய்... இங்கிட்டு வாயேன்...இரையாமல்லையப் பேசு. நமக்கும் வயசாயிடுச்சு. காசு பததல்லே, இனிமேல் பயலும் வாட்டத்திற்கு வரமாட்டான். இவனை விட்டால் நமக்கும் கதியில்லே. அதனாலே பய. கண்ணு ரெண்டுலேயும் கள்ளிப்பாலைக் கறந்து ஊத்திப்பொட்டையனைக் கிட்டா அப்பாலே நம்மை விட்டுப்பிட்டு அவனாலே எங்கேயும் ஓட முடியாது; நமக்கும் வருமானமும் அதிகப்படியா கெடைக்கும். ஓடு நிறையக் காசு. நமக்குக் கும்மாளம் தான்"

> இல்லம் என்பது துணிவு நிறைந்த உலகத்தின் பழகிய இடம் மாத்திரமல்ல; அது சட்ட திட்டங்கள் கொண்ட உலகின் பயங்கரமானதொரு இடமும் ஆகும்.
>
> செஸ்டர்ட்டன்

வள்ளியும் முத்தனும், இரவில் பேசிக்கொண்டிருந்ததை தூங்கு பவன் போலப் பாசாங்கு செய்து உற்றுக் கேட்டுக்கொண்டிருந்து, பொழுது விடிந்ததும்விடியாதது மாக ஓட்டம்பிடித்த அந்தப் பயல் கும்பலில் மறைந்து மறைந்து சுற்றினான்.

பாம்பின் வாயிலிருந்து தப் பிய தேரை, மறுபடியும் அத னிடமே அகப்பட்டுக்கொண் டால்...? பயலே நோக்கி முத்தன் வெகு வேகமாக நடந்துகொண் டிருந்தான். பயல் சுற்றிச் சுற் றிப் பார்த்தான். இடது புற மிருந்து வலதுபுறம் வீதியின் குறுக்கே ஒரு கார் வேகமாக வந்தது. கார் வந்த வேகத்திற் குக் குறுக்கே அந்தப் பயல் அகப்பட்டுக்கொண்டான். நல்ல வேளை, பெரிய காயம் இல்லை. மோதிய வேகத்தில் கீழே விழுந்துவிட்டான். ரத்தம் கொஞ்சம் கசிந்தது.

பயல் கண்களைச் சுற்றிச் சுற் றிப் பார்த்தான். "ஐயோ! முத்தன்" என்று அலறினான். முத்தன் நெருங்கிவிட்டான்.

"ஐயா, நான் பிச்சைக்கார னுங்க. என்னை அந்த எமன் கிட்டேயிருந்து காப்பாத்துங்க. ஒங்களுக்குக் கோடிப் புண்ணிய முண்டுங்க..." என்று பொங்கும் பெருமூச்சுடன் செய்தி முழு வதையும் சொல்லி முடித்தான் அவன்.

இரட்டை நடிப்புக்காகக் கடந்த ஒரு வாரமாக அலைந்து கொண்டிருந்த அந்தச் சினிமா முதலாளி அந்தப் பயலைத் தன் னுடன் அழைத்துக்கொண்டு பறந்தார். இப்போது அந்தப் பயல் புகழ்பெற்ற சினிமா நட்சத் திரமாகித் தன் சொந்த வரலாற் றையே கூறிக்கொண்டிருக் கிறான்........." என்று நடிகர் குமரப்பா நிறுத்தினார்.

"நீங்கள்தானா அந்தப் பிச் சைக்காரப் பையன்?"

"ஆம்; நான் தான். சற்று முன் அந்தப் பிச்சைக்காரக் கிழவன் தன்னுடன் இருந்த சிறு வனை அடித்தபோது, எனக்குப் பையன் மீது இரக்கம் பிறந்தது. நான் அவனுக்காகப் பரிந்து, அக்கிழவனை அடித்துவிட் டேன். என் பழைய துன்பக் கதை அப்படி என்னைச் செய்யத் செய்தது. அன்று என்னை வஞ் சிக்க எண்ணிய அந்த முத்தன் போல எல்லோருமே இருந்து விட மாட்டார்களென்பதையும் அறிவேன். என்றாலும், அக் கணம் என் உள்ளம் பிறப்பித்த வெறியில் அப்படித் தவறு இழைத்துவிட்டேன் அந்தக் கிழவனுக்கு. வருந்துகிறேன்."

சிந்தனைக்கு...!

சிந்தனைக்கு விருந்தாக அமைய வேண்டிய இங்கர்சாலின் நூலைத் தமிழில் தந்திருக்கிறார் ஊடுருவி, சிந்தனைக்கு விருந்தாக அமையும் விதத்தில்! 'மக்கள் உரிமை' என்ற தலைப்பில் வியக்கத்தக்க ரீதியில் செய்திகள் சுவையாகத் தொகுக்கப்பட்டிருக்கின்றன.

மேல்நாட்டின் அந் நாளையக் கடவுள்களைப்பற்றிய கதைகளைச் சித்தரித்ததுடன், நமது கடவுள்களையும் 'மாஜி'களாக்கி விவரித்திருக்கும் 'மாஜி கடவுள்கள்' என்ற நூலில் தெரிந்துகொள்ளவேண்டிய பகுதிகளும் உண்டு என்ற நிலைக்கு இப்புத்தகம் நமது சிந்தனைக்கு வாய்ப்பளிக்கிறது.

ஷேக்ஸ்பியரின் ஆங்கில நாடகமான 'ரோமியோ-ஜூலியத்'தின் காதல் கதையைத் தமிழில் அழகாகச் சொல்லியிருக்கிறார் ஊடுருவி. பயன்பெறும் நூலாகவே அமைந்திருக்கிறது.

மக்கள் உரிமை; மாஜி கடவுள்கள்; ரோமியோ-ஜூலியத்:- ஆசிரியர்: ஊடுருவி. வெளியிடுவோர்: கலைமன்றம் - சென்னை—1.

ஒவ்வொன்றும் விலை ரூ. 1-0-0.

வளரும் இலக்கியம்

புரட்சிப் பேனாமன்னன் 'எமிலி ஜோலா'வைப் பற்றி அறியாதவர்கட்குத் தோழர் சிற்றரசு எழுதியுள்ள இந்த வரலாற்று ஏடு ஓரளவு பயன் பயக்கும். ஜோலாவின் இலக்கிய உலகத்தின் ருசிமிக்க சம்பவங்களெல்லாம் அடுத்த பாகத்தில் தான் இடம்பெறுமென்று நம்புகிறோம். சம்பவங்கள் தொடர்பிழந்து முன்னும் பின்னும் கூறப்பட்டிருப்பது அவ்வளவு திருப்தியளிக்கவில்லை.

எமிலி ஜோலா—ஆசிரியர்: சி. பி. சிற்றரசு. தமிழ்மன்றம், திருச்சி. விலை ரூ. 1–0–0.

அவ்வப்போது பத்திரிகைகளில் எழுதப்பட்டவற்றையும், மேடைப் பேச்சுக்களையும் தொகுத்து 'ஜீவா'வின் 'இலட்சியக் குரலை' எழுப்பியிருக்கிறார்கள் பிரசுரகர்த்தர்கள். நூலில் பல வேறு பொருள்களைப்பற்றி நிறைந்த கருத்துக்களைப் பெற முடிகிறது.

இலட்சியக்குரல். ஆசிரியர்: நாரண துரைக்கண்ணன், தென்றல் நூல் நிலையம், சென்னை—1. விலை ரூ. 0—12—0.

குழந்தைகளுக்கு

முன்போலக் குழந்தைகளுக்கு அவ்வளவு அதிகமாகப் புத்தகங்கள் இப்போது வரவில்லை. அப்படி ஒன்றிரண்டு வந்தாலும் அவை கதைகளாகவே

இருப்பதில்லை. ஆனால் குழந்தைகட்குப் பயன்படும் விதமாக, புத்தி கற்பிக்கும் ரீதியில் எழுதப்படும் கதைப்புத்தகங்களே வரவேற்கக்கூடியன. நம் வரவேற்புப் பட்டியலில்—அதாவது குழந்தைகளின் சார்பில் நாம் வரவேற்புரை வழங்கும் விதத்தில் குழந்தைகளின் அபிமான ஆசிரியர்களது ஒரு சில குழந்தைப் புத்தகங்கள் வெளிவந்திருக்கின்றன.

போலிச் சாமியாரின் போலிப் பக்தியைத் தம்பட்ட மடித்து விரட்டிய கதை 'தமாஷாக' இருக்கிறது. முடிவு இதயத்தைத் தொடுகிறது. இதன் ஆசிரியர் நாச்சியப்பன் அல்லவா?

'சதிகாரன்' ஓர் ஆங்கிலக் கதையின் மூலம். நாட்டிய விருந்து—அங்கே ஓர் கொலை—அதன் சூழ்நிலையில் மையமிட்டு நிழலாடும் ஓர் பெண்—இப்படிப் பட்டதொரு திகைப்பையும், பின் வியப்பையும் வளர்க்கும் கதையைச் சுவைபடச் சொல்கிறார் ஆசிரியர் நாச்சியப்பன்.

'வனராணி'க்கு உருவம் தருபவர்கள் ஓர் குள்ளன், பருத்தியூர் ஜமீந்தார், ஒரு வனராணி, சந்திரன்! பெயர் வரிசையை நீட்டிக்கொண்டுபோக விரும்பவில்லை. எல்லாவற்றையும் சொல்லிவிட்டால் அப்புறம் உங்கள் ரசனை குறைந்துவிடக்கூடாதல்லவா? 'ராஜன்' எழுதிய இந்தப் புத்தகம் ருசிபெற்றிருக்கிறது என்பதை மட்டும் சொல்லி வைக்கிறேன்.

சரவணச்சாமி; சதிகாரன்: ஆசிரியர்: நாரா. நாச்சியப்பன்.

வனராணி:—ஆசிரியர்: ராஜன். வெளியீடு: செந்தமிழ்ப் பதிப்பகம், புதுக்கோட்டை. ஒவ்வொன்றும் விலை ரூ 0—3—0

தங்கமணி என்றால் குழந்தைகள் குழாமிலே ஒரு நன்மதிப்பு உண்டு. அந்த நல்ல பெயரைக் காப்பாற்றி நிலைக்கவைக்கச் செய்கின்றன அவருடைய சமீபத்து வெளியீடுகளான 'புவனாவின் பரிசு,' 'ரங்கூன் ரௌடி,' 'சோலைமலைக் கள்வன்' ஆகிய மூன்று சிறு புத்தகங்களும். இவை ஒன்றையொன்று போட்டியிடும் விதத்தில் சிறப்புற அமைந்துள்ளன.

புவனாவின் பரிசு; ரங்கூன் ரௌடி; சோலைமலைக் கள்வன்: ஆசிரியர்: தங்கமணி. ஜில் ஜில் பதிப்பகம். சென்னை-1. விலை ஒவ்வொன்றும் ரூ 0—3—0

ஆலமரத்துப் பேய் என்றதும் புத்தகத்தையே பிரிக்கத் தோன்றாமல் இருக்கலாம். ஆனால் இந்தக் கதை 'சிறுவர் அறிவுக் கதை' என்ற குறிப்புக்கேற்றவண்ணம் பயன்படும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது. பேய், பிசாசுக் கதைகளை இன்னும் கிறுக்கிக்கொண்டிருக்கும் சிலருக்கு இது வழிகாட்டியாக அமையட்டும். தமிழரசியின் பேய் வேட்டை பலே ஜோர்! ஆலமரத்துப் பேய்: எழுதியவர்: ப.ச. குஞ்சிதம். தென்றல் நூற்பதிப்புக் கழகம். சலகண்டபுரம். விலை ரூ. 0—2—0

—பூவை

Edited. Printed and Published by Murugu Subramanian for Ponni Ltd., at Ponni Achakam, 16. Seni Amman Koil Street, Tondiarpet. Madras-21

197813
000 008

"ஆஹா! ஆனந்தமென் சொல்வோம்!"

—மருமகளில் பத்மினியும், என். டி. ராமராவும்

சிந்தனை முகத்திலே! சேமநிதி அருகிலே!

—என் வீடு படத்தில் நாகையா

இத் தொடர்கதை அடுத்த இதழில் ஆரம்பமாகிறது
உங்கள் பிரதிகளுக்குப் பதிவுசெய்து கொள்ளுங்கள்